# களத்தில்

எமது புனித மண்ணைத் தமது ஆக்கிரமிப்புப் பாதங்களால் அசிங்கப்படுத்தி நிற்கும் எதிரிப் படைகளை எமது மண்ணில் இருந்து விரட்டியடிப்போமென்ற திடசங்கற்பத்துடன் நாம் தொடர்ந்து போராடுவோம்.

- தமிழீழத் தேசியத் தலைவர்

(26.08. 1998) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் (168) அன்பளிப்பு: 60 p


# தமிழ்மக்கள் மேல் அடுத்த யுத்தத்திற்கான ஆயத்தம் சிறிலங்கா பாதுகாப்பு வரி உயர்த்தப்படுகிறது

**★ தங்களை அழிக்கத் தமிழீழ மக்கள் தாங்களே பணம் கொடுக்கும் கொடுமை உலகின் புதுமை**

**★ உலக நாடுகள் அமைதியை கொண்டு வருவதில் காட்டும் அலட்சியத்திற்கு NGO கூட்டமைப்பு கண்டனம்**

சிறிலங்கா பாதுகாப்பு வரி என்ற பெயரில் பொதுமக்களிடம் வலுக் கட்டாயமாக அறவிட்டு வரும் வரியை 4.5 வீதமாக அதிகரிக்கின்றது. இதன் மூலம் சிறிலங்கா தனது யுத்தச் செலவீனங்களை 4400 கோடி ரூபாவிலிருந்து 5200 கோடி ரூபாவாக உயர்த்துவதால் ஏற்படும் துண்டு விழும் தொகையான 800 கோடி ரூபாக்களை ஈடுசெய்யலாமெனச் சிறிலங்கா உத்தேசித்துள்ளது. இக் கட்டாயவரி தமிழீழ மக்கள் மேல் அறவிடப்படுவதால் தமிழீழ மக்கள் தங்களை அழிப்பவர்களுக்கு தாங்களே பணம் கொடுக்கும் கொடுமைக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள். இவ்வாறு தங்கள் உயிர்களை உடமைகளை அழிக்க தாங்களே பணம் கொடுக்கும் புதுமையான நடைமுறையை உலகிலேயே சிறிலங்காவில் தான் உலகு கண்டு கொள்ளலாம்.

அது மட்டுமல்ல இந்தப் பாதுகாப்பு வரி அத்தியாவசியப் பயன்பாட்டுக்கான பொருட்களான அரிசி, சீனி முதல் ஆடம்பரப் பொருட்களான தொலைக்காட்சிப் பெட்டிகள், குளிர்சாதனப் பெட்டிகள் என நீண்டு செல்வதால் எல்லா மக்களும் தாம் யுத்தத்தை விரும்பினால் என்ன விரும்பாவிட்டால் என்ன

தொடர்ச்சி 4 ம் பக்கம்.....

# இந்தியஅரசின் தடையை இந்தியமக்களுக்கு எதிராகப் பயன்படுத்த முயலும் சிறிலங்கா

## *கப்பல் விவகாரத்தில் நரித்தந்திரம்*

சிறிலங்கா – இந்தியாவின், 'குட்வில்' கப்பல் கம்பனிக்குச் சொந்தமான M.V. Princess Cash என்ற கப்பலை தமிழீழ கடற் பிராந்தியத்தில் வைத்து கப்பலது மாலுமியின் வேண்டுகோளையும் பொருட்படுத்தாது குண்டு வீசித் தாக்கியழித்த சம்பவமானது தென் ஆசியப் பிராந்தியத்தில் தமிழீழ மக்களது இறைமையையும் தன்னாதிக்கத்தையும் மட்டுமல்லாது இந்திய இறைமையையும் தன்னாதிக்கத்தையும் அவமதிக்கும் செயற்பாடாக அமைந்துள்ளது.

துபாயில் பதிவு செய்யப்பட்ட இந்திய கப்பல் கம்பனிக்கு சொந்தமான இக்கப்பல், கொழும்பில் உள்ள கப்பல் நிறுவனமொன்றால் வாடகைக்கு அமர்த்தப்பட்டு 17 இந்தியப் பணியாளர்களுடன் 10,0000 சீமெந்துப் பைகள், 200 மோட்டார் சைக்கிள்கள், 20 முச்சக்கர வண்டிகள் மற்றும் பல உழவு இயந்திரங்கள் ஆகியவற்றுடன் இம்மாதம் 12 ம் திகதி கொழும்பிலிருந்து

தொடர்ச்சி 4 ம் பக்கம்.....

# சிறிலங்கா இராணுவத்தின் விசேடபயிற்சிபெற்ற அணி சிதறடிப்பு

## 40க்கும் மேற்பட்ட படையினர் பலி

கிளிநொச்சி – உருத்திரபுரத்தில் இம்மாதம் 12ம் திகதி காலை சிறிலங்காவின் விசேட பயிற்சி பெற்ற இராணுவ அணியொன்று விடுதலைப் புலிகளால் சுற்றி வளைக்கப்பட்டு கடும் தாக்குதலுக்கு உள்ளானது. நள்ளிரவு நேரத்தில் தமிழ் மக்கள் வாழும் குடியிருப்புக்கள் மீது மிலேச்சத்தனமான தாக்குதல்களை நடாத்தி விட்டு காலையில் தமது முகாமுக்குத் திரும்பிக் கொண்டிருந்த சிறிலங்காப் படையினருக்கே விடுதலைப் புலிகள் தகுந்த பாடம் புகட்டினர். காலை 9 மணிக்கு விடுதலைப் புலிகளின் முற்றுகைக்குள் சிக்குண்ட சிறிலங்காப் படையினர் மாலை 6.30 மணிவரை முற்றுகையை உடைக்க முடியாது பலத்த இழப்புக்களுக்கு ஆளாகினர். இவ் விசேட கொமாண்டோக்களை மீட்க வெளியில் இருந்து சிறிலங்கா இராணுவத்தினர் பல முயற்சிகளை மேற்கொண்டனர். இத்தாக்குதலில் 40க்கும் மேற்பட்ட

தொடர்ச்சி 2 ம் பக்கம்.....

# ஐ.நா.சபை நோக்கி ஈழத்தமிழரின் மாபெரும் பேரணி

**10-08-98** திங்கட்கிழமை, சுவிற்சர்லாந்து – ஜெனீவாவில் புலம்பெயர்வாழ் ஈழத் தமிழர்களினால் ஐ. நா. சபையை நோக்கிய மாபெரும் ஊர்வலம் மேற்கொள்ளப்பட்டது. சிறிலங்கா அரசின் – தமிழ் மக்களுக்கெதிரான திட்டமிட்ட அடக்கு முறைகளையும் மனித உரிமை மீறல்களையும் சர்வதேச உலகுக்கு எடுத்துக் காட்டும் விதத்திலும் – தமிழினத்தின் நியாயமான போராட்டத்தை அங்கீகரிக்கக் கோரியும் – தாயகப் பற்றுணர்வோடு திரண்டிருந்த பேரணியில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இப்பேரணியின் முடிவில், அனைத்துலக அமைப்புகளின் ஐரோப்பிய, அமெரிக்க பிரதிநிதிகளின் சிறப்புரைகளும் இடம் பெற்றன.

LTTE பெயர்ப்பலகை

10–08–98 திங்கட்கிழமை ஜெனீவா நகரின் கொழுத்தும்

தொடர்ச்சி 3 ம் பக்கம்.....



உடலும் வாழ்வும் புலம் பெயர்ந்து வந்தாலும் உத்தமரின் - உணர்வும் மனமும் தாயகப்பூமியில் !

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

நாங்கள் நினைத்ததைச் செய்வோம். தமிழர்களாகிய நீங்கள் அதனைக் கண்டு கொள்ள வேண்டியதுதான். –இதுதான் சிறிலங்கா அரசாங்கத்தின் நிலைப்பாடு. இதுதான் இலங்கைத்தீவில் அது பிரதிநிதித்துவப்படுத்தும் சிங்கள– பௌத்த பேரினவாதத்தின் நோக்கு போக்கு எல்லாமே. இதில் தமிழர்களுக்கு உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டாலென்ன உடல்கள், உடமைகள், ஊர்கள் அழிந்தாலென்ன– அவை எதுவுமே கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய அவசியம் தமக்கு இல்லை என்பதே சிறிலங்காவின் நீதிக் கொள்கை. சுருக்கமாகச் சொன்னால் ஒரு **முழுச் சர்வாதிகார ஆட்சி** ஜனநாயக ஆட்சி என்ற காலனித்துவ லேபல் உடன் நடாத்தப்பட்டுக் கொண்டிருந்தது– இருக்கிறது. இந்த சர்வாதிகார ஆட்சியில் தமிழர்கள் உயிர் தப்பி தமது நாளாந்த வாழ்வை வாழ்வதற்கு அவர்கள் நடாத்தும் போராட்டமே தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டம். ஆகவேதான், தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டம் ஒரு பிரிவினைப் போராட்டமல்ல. தாம் உயிர் வாழத் தம் வரலாற்றுத் தாயகத்தை மீள்விப்பதற்கான தேசியப் போராட்டமாக உள்ளது என்பது எமது மக்களின் சமகால வரலாற்றை அறிந்த தெரிந்த அனைவருக்கும் புரிந்த விடயம்.

இந்த உண்மையை தமிழீழக் கடலில் பயணித்த இந்திய மாலுமிகளுக்கும் சிறிலங்கா நன்குணர்த்தி நிற்கிறது. இம்மாதம் 14ம் திகதி வெள்ளிக்கிழமை தமிழீழத் தேசத்தின் இறைமையும் தன்னாதிக்கமும் உள்ள முல்லைதீவுக் கடலில் மூன்று கடல் மைல்களில் காணப்பட்ட சரக்குக் கப்பல் ஒன்றை தமிழீழ மக்களின் அரசு நோக்கிய அரசான தமிழீழ விடுதலைப் புலிகளின் – கடற்புலிகளின், ரோந்துப் படகு விசாரணைக்காகத் தடுத்து நிறுத்தியது. **அச்சமயம் அக்கப்பலின் தலைமை மாலுமி தமது கப்பல் விடுதலைப் புலிகளின் விசாரணைக்கு உட்பட்டிருப்பதாகவும் தங்கள் மீதோ தங்கள் கப்பல் மீதோ எவ்வித தாக்குதல்களையும் மேற்கொள்ள வேண்டாமென உத்தியோக பூர்வமாகச் சிறிலங்கா அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்தார்.** ஆனால், நாம் நினைத்ததைச் செய்வோம் கண்டுகொள்ளுங்கள் என்ற போக்கில் – அக்கப்பலில் இருந்த மாலுமிகள் 17 பேரும் இந்தியர்கள் – அக்கப்பல் இந்திய கப்பல் நிறுவனம் ஒன்றினுடையது என்று நன்கு தெரிந்த நிலையில் அக்கப்பலில் இருந்தவர்களின் உயிர்களையும் உடமைகளையும் அலட்சியம் செய்து, சிறிலங்கா அக்கப்பலை நான்கு குண்டுகள் வீசி மூழ்கடித்தது. ஆயினும், தமது இறைமையும் தன்னாதிக்கமும் உள்ள பிரதேசத்தில் சர்வதேச மக்களது உயிர்களைப் பாதுகாக்க பொறுப்புடைய தமிழீழ விடுதலைப் புலிகள் அம்மாலுமிகள் 17 பேரையும் மீட்டு தமிழீழப் பகுதிகளில் யுத்தங்கள் தொடர்பான சர்வதேச விதிகளுக்கு அமையப் பணிபுரியும் சர்வதேச அமைப்பான சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைத்தனர்.

இந்தச் சம்பவம் சிறிலங்காவின் சர்வாதிகாரப் போக்கையும் அதனால் தங்கள் வரலாற்றுத் தாயகமான தமிழீழத்தை மீட்டு பாராமரிக்க உறுதி பூண்டு செயற்பட்டு வரும் தமிழீழ மக்களின் தேசிய பாதுகாப்புக்குப் பொறுப்பான அவர்களது அரசு நோக்கிய அரசான தமிழீழ விடுதலைப்புலிகளின் உள்நாட்டு வெளி நாட்டு கடமை நிலைகளையும் உலகுக்கு தெளிவாக இனங்காட்டியுள்ளது.

தமிழீழ மக்களின் இந்த அரசின் கடமைகளை ஒழுங்காகச் செய்யவிடாது தடுக்கும் முயற்சியையே தனது அரசியல் பொருளாதார – இராணுவச் செயற்திட்டங்களாக கொண்டு செயற்படும் சிறிலங்கா, தனது இம்முயற்சிகளை நியாயப்படுத்தக் கூடிய புனை கதைகளை சர்வதேச பிரச்சாரங்களாக கூறி வருவது உலகறிந்த உண்மை. இதனை மேலும் உறுதிப்படுத்தக் கூடிய வகையில் முதலில் பருத்தித்துறை நோக்கி யாழ்குடா நாட்டு வர்த்தகர்களுக்கு பொருட்களைக் கொண்டு சென்ற கப்பலொன்றை விடுதலைப் புலிகள் கடத்தி விட்டதாக ஒரு செய்தியை பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டது. இதன் மூலம் பொது மக்களின் வழங்கல்கள் விடுதலைப் புலிகளால் தடுக்கப்படுகிறது என்ற கருத்து பிரச்சாரமாக்கப்பட முயற்சிக்கப்பட்டது. ஆனால், ஜனாதிபதி செயலகமோ விடுதலைப் புலிகளுக்குப் பொருட்களை ஏற்றிச் சென்ற கப்பல் தனது விமானப் படையினால் தாக்கி அழிக்கப்பட்டதாக செய்தி வெளியிட்டது. இதன் மூலம் தனது சட்ட விரோத செயலை நியாயப்படுத்துவது மட்டுமல்லாமல் அக்கப்பலில் இருந்த 300 கோடி ரூபா பெறுமதியான பொருட்களும் நாசமாகி விட்டது என்ற உண்மையையும் திசை திருப்ப சந்திரிகா முயற்சித்தார். ஆயினும், முன்னுக்குப் பின் முரணான இவ் அறிக்கைகளால் மாலுமிகளுக்கும் கப்பலுக்கும் சொந்த நாடான இந்தியாவின் கேள்விக்கு சாதகமான நிலை உருவாவதை தடுக்கும் நோக்கில் மூன்றாவது அறிக்கை ஜனாதிபதி செயலகத்தால் வெளியிடப்பட்டது. அதில் கப்பலின் தலைமை மாலுமி விடுதலைப்புலி ஆதரவாளர் என்ற சந்தேகம் எழுந்ததால் அக்கப்பல் மூழ்கடிக்கப்பட்டதாக கூறி தனது குற்றச் செயலை ஒரு நாட்டிற்கு எதிரானதாக அல்லாது ஒரு தனி மனிதனுக்கு எதிரான சட்ட நடவடிக்கையாக மாற்றும் முயற்சிகள் நடாத்தப்பட்டுள்ளன.



# தென்னாசியாவின் முக்கியதேவை

இந்த ஒரு சிறு சம்பவம் சிறிலங்கா தனது சர்வாதிகாரப் போக்கை நியாப்படுத்த எத்தகைய திருகுதாளங்களை எல்லாம் சரித்திரங்களாக காட்ட முற்பட்டு வருகின்றது என்பதை உலகுக்கு தெட்டத் தெளிவாக்கி நிற்கின்றது. ஆம்! எங்கள் தமிழீழத் தாயகத்தின் சமகால வரலாறு என்பது எம்மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கையின் தேவைக்கான காரணங்களை உலகுக்கு தெளிவாக்கியுள்ளது, அச்சுயநிர்ணய உரிமையைப் பயன்படுத்தி தமது வரலாற்றுத் தாயகமான தமிழீழத் தேசத்தை மீள அமைப்பதில் மக்களுக்கு உள்ள உறுதியையும் அதற்காக அவர்கள் செய்து வரும் ஒப்பிட முடியா தியாகங்களையும் கண்டு உலகு மலைத்து நிற்கின்றது. அதை அடைவதற்கான அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய வலிமைமிகு தலைமையாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஐயந் திரிபின்றி இனங்காண்கிறது. ஆனாலும், சர்வதேச சந்தைநலன்கள் , சர்வதேச இராணுவச் சிந்தனைகள் , ஆதிக்க விஸ்தரிப்புக் கொள்கைகள், பிராந்திய வல்லாதிக்க உணர்வுகள் என்பவற்றால் வழிநடத்தப்படுவது உலக அங்கீகாரம் என்பதினால் தமிழீழ மக்களினது வரலராற்றுத் தாயகமான தமிழீழத்தை அங்கீகரிப்பதற்கான சர்வதேச செயற்பாடுகள் இன்னமும் வெளிப்படையாக ஆரம்பமாகவில்லை என்பது நாமனைவரும் அறிந்த உண்மை. இதனைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி வரும் சிறிலங்கா தன்னிடம் உள்ள எதையும் இழந்தாலும் பரவாயில்லை தமிழர்களின் தாயக விடுதலையை மட்டும் தடுத்து விட்டால் போதும் என்ற நோக்கில் தனது வெளிநாட்டுக் கொள்கைகளை வெளிப்படுத்தி, இந்த சர்வதேச இராணுவ வல்லாதிக்க – சந்தை நல நடவடிக்கைகளுக்குத் தீனி போட்டு, அதன் மூலம் பெறக் கூடிய நிதி வளங்கள், ஆயுத வளங்கள், இராணுவப் பயிற்சிகள், தொழில்நுட்ப பயிற்சிகள் என்பவற்றினைக் கொண்டு தமிழ்மக்களை இன அழிப்புச் செய்து தமிழர் பிரச்சினைக்கு இராணுவ அடக்குமுறைத் தீர்வொன்றைக் கண்டுவிடலாம் எனத் துடியாய்த் துடிக்கின்றது. இந்தப போக்கு இலங்கைத் தீவில் யுத்தமே பொருளாதாரத்திற்கான முதன்மை நடவடிக்கை என்ற நிலையையும் தோற்றுவித்துள்ளதை சர்வதேச ஆய்வாளர்கள் உறுதி செய்கின்றனர். இதனால் இனியும் சிறிலங்கா யுத்தத்தை நிறுத்தி தமிழர்களுக்கு பாதுகாப்பான அமைதி வாழ்வை அளிக்கும் எண்ணமுள்ள அரசாங்கம் என யாருமே கருத இடமில்லை. இந்நிலையில் தமிழீழ மக்களையும் அவர்களது அரசு நோக்கிய அரசான தமிழீழ விடுதலைப் புலிகளையும் அங்கீகரித்து தமிழீழ மக்கள் மீதான நவகாலனித்துவ அந்நிய அரசான சிறிலங்காவின் சர்வாதிகாரம் ஒழிய உலக அமைப்புகள்

நாடுகள் காலம் தாழ்த்தாது முன்வரல் வேண்டும். இது தமிழீழ மக்களுக்கு மட்டுமல்ல இரு அணுவாயுத நாடுகளை கொண்டதாக மாறி விட்ட தென் ஆசியாவின் அமைதிக்கும் பாதுகாப்புக்கும் அதன் வழி உலகின் அமைதிக்கும் பாதுகாப்பிற்கும் மிகமிக முக்கிய தேவைகளில் ஒன்றாக இன்று உள்ளது. ஏனெனில் இன்று தமிழர்களின் இறைமையை மட்டுமல்ல இந்தியாவின் இறைமையையும் மதியாத சர்வாதிகார அரசு தான் என்பதை சிறிலங்கா நிரூபித்து நிற்கிறது. தமது சர்வாதிகாரத்தனத்தை நிலைநாட்ட எதையும் செய்ய வல்ல சர்வாதிகார அரசாக திகழும் சிறிலங்கா, தமிழீழ மக்களுக்கு மட்டுமல்ல உலகிற்கே ஆபத்தை விளைவிக்க கூடிய அரசாகவும் உள்ளது. ◉

## உங்கள் தொடர்புகட்கு

**AUSTRALIA**
TCC
P O Box 375
Preston
Victoria 3072

**CANADA**
WTM
64 Eaton Avenue
Toronto
Ontario M4J 2Z5

**DENMARK**
LTTE
P.O.Box 47
7400 Herning

**FRANCE**
TCC
341 Rue Des Pyrenees
75020 Paris

**GERMANY**
TCG
Postfach 340251
51624 Gummersbach.

**ITALY**
TCC
Via Mariano Stabile - 49
90139 Palermo

**NETHERLANDS**
TCC
Grt. Hertoginnelaan-106
2517 EL Den Hagg

**NORWAY**
TCC
P.O.BOX 1699 Vika
0110 Oslo

**SWEDEN**
TCC
Glomminge Grand-25
3rd Floor
16362 Spanga

**SWITZERLAND**
WTTC
Joses Str - 110
8005 Zurich

**UNITED KINGDOM**
UTO
Eelam House
202 Long Lane
London SE1 4QB

**U.S.A**
W.T.C.C
170-10 Cedarcroft Road
Suite 1-L
Jamaica
New York 11432.

## சிறிலங்கா இராணுவத்தின்.......

படையினரை இழந்த சிறிலங்கா இராணுவம் காயப்பட்டவர்கள் பலருடன் தப்பினோம் பிழைத்தோம் என்று இரவின் துணையால் தமது பழைய நிலைகளுக்கு ஓடித் தப்பினர். இச் சம்பவத்தின் பொழுது 10 இராணுவ சடலங்கள் விடுதலைப் புலிகளால் கைப் பற்றப்பட்டன. ஏ.கே.எல். எம்.ஜி.க்கள் உட்பட பல ஆயுதங்கள், இராணுவ உபகரணங்கள் விடுதலைப் புலிகள் வசமாகின. இந்த வீரஞ் செறிந்த சண்டையின் பொழுது தாயகத்தைக் காக்கும் புனிதப் பணியில் பதினைந்து விடுதலைப் புலிகள் வீரச்சா வெய்தினர். ★

# சந்திரிகா அரசாங்கத்தின் கையறுநிலை

தமிழரின் விடுதலைப் போராட்டத்தை நசுக்கி, தீவைச் சிங்கள அரசின் ஆதிக்கத்தின்கீழ் கொண்டு வரும் அரசியல் இலக்குடன் சந்திரிகா அரசாங்கம் வரைந்த அரசியல் இராணுவத் திட்டங்கள் அனைத்துமே ஒன்றன்பின் ஒன்றாய் தோல்விச் சகதிக்குள் புதைந்து வருகின்றன.

தமிழரின் தேசிய இனப்பிரச்சனைக்கு சந்திரிகா அரசாங்கம் தயாரித்த மூலோபாயத் திட்டம், 'போர் மூலம் சமாதானம்' காணல் என்பதாகும்.

தமிழர் தேசியத்தின் தலைமைச் சக்தியான விடுதலைப் புலிகள் இயக்கத்தை போர் மூலம் எதிர்கொண்டு – அழித்து, தமிழினத்தின் கோடரிக் காம்புகளாக விளங்கும் தமிழ்க்குழுக்களை தமிழ் மக்களின் அரசியல் சக்தியாக்கி– அவர்களைக் கொண்டே தமிழினத்தின் அடிமைச் சாசனத்தை எழுதிவிப்பது சந்திரிகா அரசின் தந்திரோபாயத் திட்டமாக இருந்தது.

போர் என்ற சாக்கில் தமிழினப் படுகொலையை கட்டவிழ்த்துவிட்டு முடிந்தளவுக்கு தமிழ் மக்களை இம்சித்து – தமிழ் மக்களைத் தண்டிப்பது பேரினவாதத்தின ஆசை.

தனது இராணுவ –அரசியல் திட்டங்களின் உண்மையான நோக்கங்களை உலக சமூகம் அடையானம் காணாதவாறு தடுப்பதற்காக தீர்வு யோசனைகள் –மனித உரிமைக் குழுக்கள் அமைப்பு– சிவில் நிர்வாகம் என்ற தந்திரோபாயங்களையும் உபயோகித்தது. இதன் வாயிலாக தமிழ் மக்களையும்

மயக்கலாம் என்று அது எண்ணியது. போர் மூலம் சமாதானம் என்ற மூலோபாயத்தை இரண்டு வகையான கோசங்களாக்கியது.

புலிகளுக்கு இராணுவத் தீர்வு– தமிழ் மக்களக்கு அரசியல் தீர்வு என சாணக்கியத் திட்டம் வரைந்தது.

தமிழரின் தேசிய இன அபிலாசைகளைக் கொன்று புதைக்கக் கூடிய ஒரு திட்டத்தை, அரசியல் தீர்வுப் பொதியென பெயர் சூட்டி தமிழ் மக்களின் தலையில் கட்டியடிக்க அம்மையார் முயற்சித்தார்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கென இதுவரை தயாரிக்கப்பட்ட திட்டங்களில் இது முற்போக்கானது – சிறந்தது என்றும், சமஸ்டி அமைப்பின் சாரங்கள் திட்டவரைவில் உண்டென்றும் சந்திரிகா அரசாங்கம் சர்வதேசத்திற்கு விளம்பரம் செய்தது.

பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் பரிசீலனை, பகிரங்க விவாதங்கள், சிங்கள மக்களுக்கான விளக்கக் கூட்டங்கள்– வீதி நாடகங்கள் மூலம் பிரச்சாரம் என சந்திரிகா அரசாங்கம் அமர்க்களப்படுத்தியது.

தமிழரின் தாயக நிலத்தைப் பிரித்து, தமிழரின் தேசிய தனித்துவங்களை சிதைக்கும் நாசகார நோக்கங்களைக் கொண்டிருந்த இந்த அரசியல் பொதியை புலிகள் இயக்கம் நிராகரித்திருந்தது.

Liberation Tigers Of
TAMIL EELAM
புலிகளின் குரல்

எனினும் தமிழ் மக்களுக்கு அதிகளவு உரிமை வழங்கும் தீர்வு யோசனை இதுவென்று, இந்த நாசகாரத் திட்டத்தையே வர்ணித்துவரும் சிங்கள தீவிரவாத சக்திகளும் சந்திரிகாவின் தீர்வுப்பொதிக்கு எதிராக சன்னதம் பூண்டன.

தமிழ் இனத்தைக் குழப்பவும் – சர்வதேச சமூகத்தை மயக்கவுமென சந்திரிகா அரசாங்கம் வரைந்த இந்த சாணக்கியத் திட்டத்தை –இறுதியில் சிங்கள தீவிர சக்திகளே முறியடித்தன.

சிங்களத்தின் எதிர்க்கட்சிகள் –பௌத்த சங்கங்கள்– சிங்களப் பத்திரிகை உலகம் உட்பட கணிசமான தொகையான பொதுசன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்தோரும் இணைந்து தீர்வுப் பொதியைத் தீண்டத் தகாததாக்கினர்.

சிங்களத் தீவிரவாத சக்திகள் அஞ்சுவதுபோல் தீர்வுப் பொதியில் ஒன்றுமே இல்லை என்று திருவாளர் பீரிஸ் போன்றோர் உண்மை உரைத்தபோதும், பொதிக்கு சிங்கள தேசத்தில் பலத்த எதிர்ப்பு கிளம்பியது.

இதனால், தமிழர் தேசியத்தை நுட்பமான முறையில் சிதைக்கும் யோசனைகளைக் கொண்ட சந்திரிகாவின் தீர்வுப் பொதி செத்து வீழ்ந்தது.

சந்திரிகா அரசாங்கத்தின் நவபேரினவாதத்தை, மரபுவழிப் பேரினவாதம் தோற்கடித்துவிட்டது.

இதேசமயம், சந்திரிகா அரசாங்கத்தின் போர் முயற்சியும் ஸ்தம்பித நிலைக்கு வந்துள்ளது.

புலிகளை ஒழிப்பதற்கான இறுதிப் படை நடவடிக்கையென இது வர்ணித்த ஜயசிக்குறுய் நடவடிக்கையின் இன்றைய இழுபறிநிலை– அதனது போர்த்திட்டம் முடமாக்கப்பட்டுவிட்டதை பகிரங்கமாக வெளிக்காட்டியபடி உள்ளது.

மரபுவழிச் சமர் மூலம் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளை ஆக்கிரமித்து யுத்தத்தில் புலிகளை வெல்லமுடியும் என்ற சந்திரிகா அரசாங்கத்தின் போர்த் திட்டத்திற்கு வன்னிச் சமர் முனையில் வைத்து புலிகள் இயக்கம் தக்க பதிலடி கொடுத்துவருகின்றது.

இதனால், யுத்தத்தை வென்று இனப்பிரச்சனையைத் தீர்த்தல் என்ற அம்மையாரின் பேரினவாதக் கனவு இப்போது கலைந்துவருகின்றது.

சந்திரிகா அரசாங்கத்தின் போர்த் திட்டத்தை மேலும் பலவீனமாக்கத்தக்க வகையில் சிங்களத்தின் பொருண்மிய நிலையும் கவலைக்கிடமாகி வருகின்றது.

போரின் பக்கவிளைவுகளால் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தீவைவிட்டு வெளி யேறுகின்றனர். அரசுக்கு வருமானம் ஈட்டிக் கொடுத்த பல்வேறு துறைகளும் இப்போது நட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. தாக்குதல்களில் சிக்கி அரச சொத்துக்கள் பெருமளவில் அழிக்கப்படுகின்றன. இதனால், போரைத் தொடர்வதற்குத் தேவையான பொருண்மிய வளத்தைப் பெறுவதில் அம்மையாரின் அரசாங்கம் பெரிய நெருக்கடிகளைச் சந்தித்துவிட்டது.

தமிழ் மக்களின் நிவாரணத்தை வெட்டி அதனால் கிடைக்கும் பணத்தை போர் முயற்சிக்கு திருப்ப வேண்டிய பரிதாபகரமான நிலையில் அம்மையாரின் அரசாங்கம் உள்ளது.

இதேவேளை, தமிழ் மக்களது –குறிப்பாக இராணுவ ஆட்சிக்குள் வசிக்கும் மக்களின் மனங்களை வெல்லவென, அவர்களின் இதயங்களைக் கொள்ளை கொள்ளவென அது பயன்படுத்திய தந்திரோபாயங்களும் இப்போது பிசுபிசுத்துவிட்டன.

இவையெல்லாம் போர்மூலம் தமிழரின் இனப் பிரச்சனையைத் தீர்க்கமுடியும் என்ற சந்திரிகா அரசாங்கத்தின் கொள்கையின் தோல்வியையே புலப்படுத்துகின்றன. இந்த் கொள்கைத் தோல்வியை அம்மையாரும் உணர்ந்து கொண்டுள்ளார் என்பதை மாகாணசபைத் தேர்தல்களை நடாத்த அவர் பின்னடிப்பதில் இருந்து புரிந்து கொள்ளலாம்.

சந்திரிகா அரசாங்கம் சந்தித்துள்ள இந்த இராணுவ– அரசியல்–பொருண்மிய இயலாமைகளை– அதன் கொள்கைத் தோல்விகளை சிங்களத்தின் எதிர்க் கட்சிகளும் கண்டறிந்து சந்திரிகா அரசாங்கத்திற்கு எதிரான பிரச்சாரத்தை தீவிரமாக்கியுள்ளன. ✷

## ஐ.நா.சபை நோக்கி.....

வெய்யிலையும் பொருட்படுத்தாது தமிழீழ மக்கள், கூட்டம் கூட்டமாக குவியத் தொடங்கினார்கள். சுவிஸ்லாந்தின் பகுதிகளில் மட்டுமன்றி இங்கிலாந்து, பிரான்ஸ், யேர்மனி, இத்தாலி, டென்மார்க் போன்ற நாடுகளிலிருந்தும் மக்கள் ஜெனீவாவை நோக்கி திரண்டனர். சூரிச் பிரதான புகையிரத நிலையத்திலிருந்து மட்டும் விஷேடமாக ஒழுங்கு செய்யப்பட்ட புகையிரதத்தின் மூலம் பல்லாயிரம் மக்கள் ஜெனீவாவுக்கு பயணம் செய்தனர். 'LTTE' என பெயர் பலகை தாங்கி வந்த இவ்விஷேட புகையிரதம் சுவிஸின் பல முக்கிய நகரங்களுக்கூடாகவே ஜெனீவாவை வந்தடைந்தது. பேருந்துகள், விமானங்கள், புகையிரதங்கள், தனியார் வாகனங்கள் என்று ஏராளமான போக்குவரத்து சாதனங்களில் குவிந்த மக்களால் ஜெனீவா நகர் நிரம்பி வழிந்தது.

பிற்பகல் 2 மணியளவில் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் திரண்ட நிலையில், அமைதிப் பேரணியானது ஜெனீவா பிரதான புகையிரத நிலையத்திலிருந்து ஐ. நாடுகள் செயலகத்தை நோக்கி நகர ஆரம்பித்தது. மாணவர்கள், பெண்கள் முற்பகுதியில் செல்ல, எம் தாயகத்தில் நடைபெறும் சகிக்க முடியாத– மனித உரிமை மீறல் சம்பவங்களைச் சித்தரிக்கும் இரு. ஊர்திகளில் காயக்கட்டு குழுவினர் பின்தொடர்ந்தனர். அத்தோடு கூடவே பல அமைப்புக்கள், கழகங்கள், பொது நிறுவனங்கள் என்பனவும் தத்தம் கொடிகளை தாங்கிய வண்ணம் பேரணியில் கலந்து கொண்டனர். எம் தாயகத்தின் தேசிய கொடியான புலிக்கொடியையும் எம் தேசிய தலைவரின் உருவப் படத்தையும் தாங்கிய வண்ணம் எங்கள் தலைவர் பிரபாகரன், எங்கள் தேசம் தமிழீழம், எமக்கு வேண்டியது சுதந்திர தேசம், சிறிலங்காவே எங்கள் மீது அடக்குமுறை செய்யாதே, எங்களின் விடிவு தமிழீழம்தான் என்ற கோசங்கள் வானைப் பிளக்க, ஐ.நா. சபையை நோக்கி நகரத் தொடங்கிய பேரணி, 2 கிலோ மீற்றருக்கும் குறைவான தூரத்தை கடப்பதற்கே பல மணிநேரம் காத்திருக்க வேண்டியிருந்தது. கறுப்புநிற நீளக் கால்சட்டையும் வெள்ளை நிற மேலங்கியும் அணிந்த தொண்டர்களால் நன்கு ஒழுங்குபடுத்தப்பட்டு வரிசைக்கிரமமாகச் சென்ற நீண்ட ஊர்வலமானது ஐ.நா.சபையின் முன்றலை சென்றடைந்தது.

### தமிழீழத்தின் தேசியக் கொடி

ஐ. நா. சபை முன்றலில் அமைக்கப்பட்ட மேடையின் மூன்பு கொழுத்தும் வெய்யிலையும் பொருட்படுத்தாது மக்கள் குழுமியிருக்க, மலரப்போகும் தமிழீழ தேசத்தின்– தேசியக் கொடியை சுவிஸ் ஒருங்கிணைப்பாளர் ஏற்றிவைத்தார். ஐ.நா. முன்றலில் ஏறுது பார் கொடி ஏறுது பார் என்னும் கொடிவணக்கப் பாடலுடன் ஏறிய கொடி மிக் விரைவில் ஐ.நா. சபையிலும் ஏறவேண்டும் என்ற ஆவலில் மக்கள் காட்சியளித்தனர். கொடியேற்ற வைபவத்தைத் தொடர்ந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சுவிஸ் பொறுப்பாளர் வருகைதந்த அனைவரையும் அனைத்து நாட்டவரையும் வரவேற்று உரையாற்றினார். தொடர்ந்து சிங்கள பேரினவாதிகளால் திட்டமிட்டு தமிழ் மக்களுக்கெதிராக மேற்கொள்ளப்படும் அடக்கு முறைகளையும் அழிவு அனர்த்த நடவடிக்கைக ளையும் மனித உரிமை மீறல்களையும் சர்வதேச உலகிற்கு எடுத்துக்காட்டி தமிழினத்தின் நியாயமான நீதியான விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிக்கக் கோரியும் சுயநிர்ணய உரிமை சுதந்திரம் என்பவற்றை வலியுறுத்தியும் ஐ.நா. சபையிடம் கையளிக்கப்பட்ட மனுவின் சாராம்சத்தை அனைவருக்கும் அறியப்ப டுத்தினார் சுவிஸ் தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பின் முக்கிய செயற்பாட்டாளர்.

### பத்திரிகையாளர் மாநாடு

திங்கள் – காலை 1030 மணியளவில் கூட்டப்பட்ட பத்திரிகையாளர் மாநாட்டிலும் ஐ.நா. சபையிடம் கையளிக்கப்பட்ட மனுவின் சாராம்சம் அறியப்படுத்தப்பட்டது. பல வெளிநாட்டு, உள்நாட்டு பத்திரிகையாளர்கள் கலந்துகொண்ட இம்மாநாட்டில் பல மனித உரிமை அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

### சொற்பொழிவுகளும் இசைத்தட்டு வெளியீடும்

பேரணி முடிவுற்று ஐ.நா முன் கூடியிருந்த மக்கள் வெள்ளத்தின் மத்தியிலே சிறப்புப் பேச்சாளராகக் கலந்துகொண்ட தமிழ்நாடு, சுப. வீரபாண்டியன், யேர்மனி–கலை பண்பாட்டுக் கழகத்தின் பிரதிநிதி திரு. கா. சிவநாதன், தமிழர் மனித உரிமை மையம் (பிரித்தானியா) டியற்றி மைக்டொனால்ட், உலக கல்வி மேம்பாட்டு நிறுவனம் (அமெரிக்கா) கரன் பாக்கர், திரு. பாலசுந்தரம் (பிரான்ஸ்), திரு. ச. பத்மநாதன் (பிரித்தானியா), பெண்கள் விடுதலை அமைப்பு (பிரித்தானியா) பூங்கோதை, ஆத்தூரோ பொட்சி (அகதிகள் உதவி நிறுவனம்), தமிழர் மனித உரிமை மையம் (பிரான்ஸ்) திரு. கிருபாகரன், தமிழர் ஒருமைப்பாட்டு அமைப்பு – மட்லின், மிக்கேல் மத்தியூ (அமெரிக்கா), பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் (டென்மார்க்) திரு. அருந்தவராஜா, திரு. சந்திரன் (இத்தாலி), திரு. ஆதவன் (டென்மார்க்) ஆகியோர் உட்பட பல பிரமுகர்களின் சொற்பொழிவுகளும் இடம்பெற்றன.

இப்பேரணி, சொற்பொழிவுகளுக்கிடையில் 'விடுதலை வரும் நாள்' என்னும் இசைத்தட்டும் வெளிமிடப்பட்டது. நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும் என்னும் ஈழத்தின் பிறப்பை எடுத்துப் பாடிய பாடலுடன் அமைதியாக கொடியிறக்கப்பட்டு புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் என்னும் தாரக மந்திரம் வானைப் பிளக்க ஐ.நாடுகள் சபையில் அடுத்த புதிய தேசம் தமிழீழம்தான் என்பதை ஆணித்தரமாக கொண்டு பேரணி நிகழ்வுகள் யாவும் முடிவுற்றன. ✷

# விசேட அதிரடிப்படை கொமாண்டோக்களின் தரைநகர்வு முறியடிப்பு

இம் மாதம் 19ம் திகதி, மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை கைப்பற்றும் நோக்கில் சிங்களப் படைகளால் மேற்கொள்ளப்பட்ட தேசபால எனும் குறியீட்டுப் பெயர் கொண்ட இராணுவ நடவடிக்கை விடுதலைப் புலிகளின் உக்கிர எதிர்த் தாக்குதலால் முறியடிக்கப்பட்டுள்ளது. இம் மாதம் 19ம் திகதி தமிழ்க் கூலிக் குழுக்களின் துணையுடன் சிங்களப் பொலிசாரின் விசேட அதிரடிப் படைக் கொமாண்டோக்களால் மேற்கொள்ளப்பட்ட மும்முனை தரைநகர்வு முயற்சி விடுதலைப் புலிகளின் போரணிகளால் முறியடிக்கப்பட்டுள்ளது. ஜெயசிக்குறுய் களமுனையில் ஏற்பட்டு வரும் பாரிய தோல்விகளையும், அண்மையில் கிளிநொச்சி உருத்திரபுரம் பகுதியில் ஏற்பட்ட பேரிழப்பையும் திசைதிருப்பும் நோக்கில் படையினரால் மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்பு முயற்சி அதன் இலக்குகள் ஈடேறாத நிலையில் அதன் ஆரம்ப கட்டத்திலேயே கைவிடப்பட்டுள்ளது. இந் நடவடிக்கைக்கென 20 பஸ் வண்டிகளில் பொலநறுவை மாவட்டம் மின்னேரிய இராணுவ முகாமிலிருந்து படையினர் அனுப்பப்பட்டனர் என்பதோடு, இவர்கள் தாம் கைப்பற்றும் பிரதேசங்களில் முகாம் அமைத்து நிலைகொள்ளும் ஏற்பாடுகளுடனேயே சென்றனர் எனவும் இராணுவத்திற்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. 19ம் திகதியன்று அதிகாலை 2.00 மணிக்கு பாண்டிருப்பு, மண்முனை, வவுணதீவு ஆகிய பிரதேசங்களில், இருந்து படையினர் மும்முனைத் தரைநகர்வை ஆரம்பித்தனர்.

முன்னகர்ந்த படையினரை கொக்கட்டிச்சோலையிலும், அரசடித்தீவிலும் எதிர் கொண்ட விடுதலைப் புலிகள் உக்கிர எதிர்தாக்குதலை தொடுத்தனர். ஈற்றில் 5 விசேட கொமாண்டோக்களைப் பலி கொடுத்து, பல ஆயுதங்களை இழந்த நிலையில் காயமடைந்த சகாக்களை தூக்கிக் கொண்டு படையினர் புறமுதுகிட்டோடினர். இவ் வெற்றிகர எதிர்த் தாக்குதலில் விடுத்லைப் புலிகள் தரப்பில் எவ்வித இழப்புகளும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இவ் இராணுவ நடவடிக்கை தொடர்பாக நடவடிக்கையின் ஆரம்ப கட்டங்களில் அறிக்கை விடுத்த பாதுகாப்பமைச்சு, தாம் பத்திற்கும் மேற்பட்ட விடுதலைப் புலிகளைக் கொன்றதாகவும், புலிகள் படையினரின் தாக்குதல்களை எதிர்கொள்ள முடியாத நிலையில் புறமுதுகிட்டோடுகின்றனர் எனவும் தெரிவித்தது. தற்போது நடவடிக்கை பிசுபிசுத்து விட்ட நிலையில் அரசு மௌனம் சாதித்து வருகின்றது. பாரிய தோல்வியுடன் புறமுதுகிட்டோடிய படையினர் தமிழ் மக்களுக்கு சொந்தமான வீடுகளையும், குடிசைகளையும் எரித்து சாம்பலாக்கியதோடு ஒரு பொதுமகனையும் சுட்டுக்கொன்று தமது இயலாமையை காட்டியுள்ளனர். அண்மைக்காலங்களில் தென்தமிழீழத்தில் படையினரால் தொடர்ச்சியாக தரைநகர்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றபோதும், ஒவ்வொரு தடவையும் அவை பாரிய இழப்புகளுடன் கைவிடப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. ✸

## தமிழ்மக்கள் மேல் அடுத்த.....

பணம் கொடுத்து அதனை ஆதரிக்கும் கட்டாயத்துக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர்.

இதற்கிடையே "In the land where death is business" என்ற தலைப்பில் சிறிலங்காவின் அரச சார்பற்ற நிறுவனங்களின் கூட்டமைப்பின் தலைவரான றிச்சாட் றீச் ( Richard Reoch), 23.08.98 ம் திகதிய பிரித்தானிய The Catholic Times பத்திரிகைக்கு எழுதிய கட்டுரை ஒன்றில் சர்வதேச நாடுகள் மத்திய கிழக்கு, வட அயர்லாந்து , தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகளுக்கு சமாதானத்தைக் கொண்டு வருவதில் காட்டியது போன்ற அக்கறையை இலங்கைத்தீவில் சமாதானத்தைக் கொண்டு வருவதில் காட்டாமைக்கு கண்டனம் தெரிவித்துள்ளார். இவர் தமது கட்டுரையில் கல்வி மருத்துவம் என்பவற்றுக்கு செலவிடப்படும் தொகையை விட பல மடங்கு தொகையை சிறிலங்கா யுத்தத்தில் செலவிடுவதைச் சுட்டிக்காட்டி ஒரு ஆண்டுக்கு 44 பில்லியன் ரூபாக்களுக்கு மேல் யுத்தத்தினை நடாத்தச் செலவிடுவதாக புள்ளிவிபரங்களுடன் எடுத்துக்காட்டியுள்ளார். இந்த யுத்தத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ள மனித சேதங்கள் அளப்பரியது எனக்கூறும் இவர் இந்த யுத்தத்தால் அகதிகளாக இடம் பெயர்ந்தவர்களின் தொகையையும் யாருமே இதுவரை சரிவரக் கணக்கிடவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார். 750.000 மக்கள் நிவாரண உதவிகளில் உள்நாட்டில் தங்கியுள்ளதாகவும் 500,000 க்கு மேற்பட்ட மக்கள் வெளிநாடுகளில் குறிப்பாக வட அமெரிக்கா, ஐரோப்பா போன்ற நாடுகளில் அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர் என எடுத்து விளக்கும் இவர் சிறிலங்காவின் இராணுவ் வைத்தியசாலைகள் கை, கால், பார்வை இழந்தவர்களால் நிரம்பி வழிவதாக கூறி சிறிலங்காவின் இராணுவ ஆற்றாமையையும் எடுத்து விளக்கியுள்ளார். சிறிலங்கா உலகிலேயே தற்கொலை வீதம் அதிகமான நாடாகிவிட்டது எனக் கூறும் இவர் ஒவ்வொரு 100,000 மக்களுக்கு 47 பேர் தற்கொலை செய்வதாகவும் இது சில இடங்களில் 118 ஆக கூட காணப்படுவதாகவும் கூறுகின்றார். யுத்தத்தால் கொல்லப்பட்டவர்களை விட இரண்டு மடங்கு தொகையினர் தற்கொலை புரிந்துள்ளதாகவும் சிங்கள வெறியுடன் முழு இலங்கைத் தீவையும் பௌத்த நாடாக்க வேண்டுமென்னும் சிங்கள பௌத்த பேரினவாதம் முனைப்புடனேயே காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார். கொழும்பில் உள்ள விகாரை ஒன்றில் காவியுடை அணிந்த பௌத்த பிக்குகள் யுத்தத்தை ஆதரித்துக் கூடி நின்றதைக் தான் நேரில் கண்டதாகவும் விகாரையின் சுவர்கள் எங்கும் யுத்தத்தை நடாத்தி முழுத்தீவையும் வெற்றி கொள்ளுமாறு அரசாங்கத்தைத் தூண்டும் இனவெறிக் கோசங்கள் பொறிக்கப்பட்டிருந்தன எனவும் கூறியுள்ளார். பிரேதப் பெட்டி விற்பவர்களும் அஞ்சலிக்கு மலர் வளையங்கள் விற்பவர்களும் கோடி கோடியாக உழைத்து மாடி மாடியாக கட்டுவதாகவும், இவ்யுத்தத்தின் விளைவாக மரணம் வியாபாரமாக்கப்பட்ட நாடாக இத்தீவு விளங்குகிறது எனவும் அவர் பரிதாபமாக கூறி சிறிலங்காவின் யுத்த வெறியின் விளைவுகளை தெளிவாக விளக்கியுள்ளார்.

இவ்வாறாக 'எக்கோனோமிக்ஸ்' சர்வதேச சஞ்சிகையும் யுத்தத்தை வைத்துப் பணம்பண்ணும் சிறிலங்கா யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வராது என தெளிவாக எடுத்து விளக்கியுள்ளது. இவ் எதிர்வு கூறல்களை மெய்ப்பிக்க கூடிய வகையில் சிறிலங்கா தனது பாதுகாப்பு வரியை அதிகரித்து தமிழ் மக்கள் மேல் யுத்தத்தை மேலும் மேலும் வலுப்படுத்த கங்கணம் கட்டி நிற்கின்றது. ★

## இந்திய அரசின் தடையை......

பருத்தித்துறை நோக்கி பயணித்துக் கொண்டிருந்தது. இக்கப்பல் தமிழீழ அரசு நோக்கிய அரசின் தன்னாதிக்க கடற்பரப்புக்குள் முல்லைத்தீவிலிருந்து மூன்று கடல் மைல் தொலைவில் தென்பட்ட பொழுது தமிழீழ விடுதலைப் புலிகளினால் பாதுகாப்புச் சோதனைக்காகத் தடுத்து நிறுத்தப்பட்டது. கடந்த வருடம் சிறிலங்கா அரசாங்கம் சரக்கு கப்பல் ஒன்றினூடாக ஆயுதக் கடத்தல் செய்து தனது தமிழீழ மண்ணிலுள்ள ஆக்கிரமிப்புப் படைகளுக்கு அவற்றை விநியோகிக்க முயன்றமை கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து தமிழீழக் கடற்பரப்பில் காணப்படும் கப்பல்கள் யாவும் இராணுவ இலக்குகளாகவே கருதப்பட்டு பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்திருந்தமை யாவரும் அறிந்ததே. இதற்கமைய, இக்கப்பலும் தமிழீழக் கடற்பரப்பில் பாதுகாப்பு விசாரணைக்காகத் தமிழீழ விடுதலைப் புலிகளால் தடுக்கப்பட்டதை அடுத்து இக்கப்பலின் தலைமை மாலுமி, சிறிலங்கா அரசாங்கத்திற்கு விவரம் தெரிவித்து தம் கப்பலையோ தம்மையோ தாக்க வேண்டாமென வேண்டுகோள் விடுத்தார். ஆயினும், அவரின் வேண்டுகோளை அலட்சியப்படுத்திய சிறிலங்கா, அக்கப்பல் மீது நான்கு குண்டுகளை வீசி அக்கப்பலைக் கடலில் மூழ்கடித்தது. ஆயினும், தமிழீழ விடுதலைப் புலிகளினால் மீட்கப்பட்ட 17 இந்திய பணியாளர்களும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக இந்திய தூதரகத்திடம் – சிறிலங்கா அப்பணியாளர்கள் விடுதலைப் புலிகளுடன் தொடர்பானவாகள் என்று அவர்களை விசாரிக்க ஏடுத்த முயற்சிகளுக்கும் இடமளிக்கப்படாது – இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இதற்கிடையே, ரத்வத்தைக்கும் சந்திரிகாவுக்கும் இடையிலுள்ள கருத்து வேறுபாடுகளை – அதிகாரப் போட்டிகளை – வெளிப்படுத்தக் கூடிய வகையில், சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சும் ஜனாதிபதியின் செயலகமும் முன்னுக்குப் பின் முரணான அறிக்கைகளை வெளியிட்டனர். முதலில் சிறிலங்காப் பாதுகாப்பு அமைச்சகம் கொழும்பிலிருந்து யாழ்குடா நாட்டிற்கு வர்த்தகர்களுடைய பொருட்களுடன் சென்ற கப்பலை தமிழீழ விடுதலைப் புலிகள் கடத்தி முல்லைதீவுக்கு கொண்டு சென்று விட்டதாக செய்தி ஒன்றைக் கட்டவிழ்த்து விட்டது. ஆயினும், சிறிலங்கா ஜனாதிபதியின் செயலகம் விடுத்த அறிக்கையில் – தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு பொருட்களுடன் சென்ற கப்பல் ஒன்றை தமது விமானப்படை தாக்கியழித்து விட்டதாக மார்பு தட்டிக் கொண்டது. இருந்த போதிலும் இந்த இட்டுக்கட்டிய கதையையும் மாற்றி அமைத்து பருத்தித்துறைக்கு பொருட்களை ஏற்றிச் சென்ற கப்பலின் மாலுமி விடுதலைப் புலிகளுடன் தொடர்பு வைத்திருந்தார் எனவும் அதனால் அக் கப்பலைத் தாம் தாக்கியழித்து விட்டதாகவும் மேலும் ஒரு கதையை சிறிலங்கா அளந்துள்ளது.

இந்த மூன்றாவது நியாயப்படுத்தல் கப்பலின் சொந்தக்காரரோ அல்லது மாலுமிகளோ சிறிலங்கா அரசாங்கத்திடம் நட்ட ஈட்டுக் கோரிக்கைகள் எதையும் கேட்க முடியாதவாறு, இந்தியா தமிழீழ விடுதலைப் புலிகளை சட்ட விரோதமாக்கிய விவேகமற்ற செயற்பாட்டை சிறிலங்கா தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தியுள்ளதாக அவதானிகள் கருதுகின்றனர். ஏனெனில், தென்னாசியாவின் பாரம்பரிய இனங்களில் ஒன்றான தமிழீழ மக்களின் தேசிய விடுதலை இயக்கத்தை இந்தியா சட்ட விரோதமாக்கியமையினால், இந்திய மக்களுக்கு எதிரான எந்த நடவடிக்கையையும் இதனுடன் இணைத்து நியாயப்படுத்துவதற்கு இந்திய அரசின் எதிர்ச் சக்திகளுக்கு இந்தியா இடமளித்து விட்டது. இவ்வகையில், இந்திய மக்களுக்கு எதிரான ஆக்கிரமிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு அவர்களுக்கு சொந்தமான கப்பலைத் தாக்கியழித்து அவர்களது உயிர்களுக்கும் உடமைகளுக்கும் சேதம் விளைவிக்க விளைந்த சிறிலங்கா தற்பொழுது, யாழ் குடா நாட்டில் பொது மக்களின் பயன்பாட்டிற்கு தடை செய்யப்பட்டுள்ள பொருட்களையும் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் முச்சக்கர வண்டிகள் உழவு இயந்திரங்களையும் தனது இராணுவத்தினுடைய பாவிப்புக்கு அனுப்பப் பயன்படுத்திய இக்கப்பலின் மாலுமி விடுதலைப் புலிகளுடன் தொடர்பானவர் என்ற உண்மைக்கு மாறான செய்தியை பரப்பியுள்ளது. இதன் மூலம் தனி மனிதன் ஒருவர் இந்திய – சிறிலங்காச் சட்டங்களை மீற முயன்றவேளை அவருக்கு எதிராக எடுக்கப்பட்ட சட்டரீதியான ஒழுங்கு நடவடிக்கையாக இச் சம்பவம் சிறிலங்காவால் மாற்றப்பட்டுள்ளது.

இந்த அபாயம் உணரப்பட்டதினாலேயே, இந்தியாவில் உள்ள பல அமைப்புக்கள் விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடை இறுதியில் இந்தியாவுக்கே எதிரான செயற்பாடுகளுக்கே இந்தியாவின் எதிரிகளால் பயன்படுத்தப்படும் என எச்சரித்து அந்த அர்த்தமற்ற தடையை அகற்றும்படி கோரிவந்தனர். இதில் இந்தியா காட்டிய அலட்சியத்தால் இன்று இந்தியக் குடி மக்கள் சிறிலங்காவால் அவமானகரமான முறையில் நடாத்தப்பட்டு குண்டு வீசி கொல்லப்பட இருந்த நேரத்தில் அவர்களது உயிர்களை எந்த தமிழீழ விடுதலைப் புலிகளை இந்தியா தடை செய்ததோ அதே விடுதலைப் புலிகள் பாதுகாத்த வரலாற்றுச் சம்பவம் முல்லைக் கடலில் பதிவாகியுள்ளது.

இனிமேலாவது இந்தியா கண் திறந்து தென்னாசியாவின் அமைதியையும் பாதுகாப்பையும் கருத்தில் கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தனது பார்வைகளை மாற்றி தமிழீழ மக்களின் பாதுகாப்புக்கும் அமைதிக்கும் பொறுப்பாக உள்ள அவர்களின் ஒரே தேசிய விடுதலை இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையில் தமிழீழத்தில் நடைபெறும் அரசு நோக்கிய அரசிற்கு சர்வதேச அங்கீகாரம் கிடைக்க கூடிய முன்மாதிரிச் செயற்பாடுகளில் இறங்க வேண்டும் என்பதையே இக்கப்பல் விவகாரம் எடுத்து கூறுகின்றது.

இதேபோல், உலகின் ஒரு புனிதமான தேசிய விடுதலை இயக்கத்தை – சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் தமிழீழ மக்கள் சக்தியை – எந்த வுற்றோ வில்சன் அமெரிக்கா ஜனாதிபதியாக இருக்கையில் சுயநிர்ணய உரிமை என்ற தத்துவத்திற்கே வடிவம் கொடுத்தாரோ அதே அமெரிக்கா– தன் முன்னோர்களின் உயர்ந்த எண்ணங்களில் கரி பூசக் கூடிய வகையில் தன் ஆதிக்க எல்லையுள் தடை செய்தது யாவரும் அறிந்ததே . அமெரிக்காவுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளால் எவ்வித அச்சுறுத்தலும் இல்லாத நிலையில் உலகில் எங்காவது பொது மக்களுடைய கட்டிடங்களுக்கு சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பவர்கள் பயங்கரவாதிகளாக கருதப்படுவர் என்ற பொது விவரணத்திற்கு கீழ் அந் நடவடிக்கை எடுக்கப்பட்டதாக நியாயப்படுத்தல்கள் கூறப்பட்டன. ஆயினும் அவ்வாறான குற்றச்சாட்டுக்கள் எதுவும் சுதந்திரமான நீதி விசாரணைகளால் தமிழீழ மக்களின் தேசிய விடுதலை இயக்கத்தின் மேல் யாராலும் நிரூபிக்கப்படவில்லை. இந்நிலையில் ஊகங்களை தம் சொந்த நலன்களுக்கு காரணமாக்கி தமிழர்களின் மனதை மட்டுமல்ல நீதிக்காகவும் அமைதிக்காகவும் மனித உரிமைகளுக்காகவும் குரல் கொடுக்கும் அனைத்துலக நெஞ்சங்களையும் புண்படுத்தும் அத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஆனால், இன்றோ சிறிலங்கா பகிரங்கமாக அதுவும் அக்கப்பலின் மாலுமியின் வேண்டுகோளையும் அலட்சியம் செய்து பொது மக்களின் சொத்திற்கு சேதம் விளைவிக்கும் அரச பயங்கரவாதத்தை மீண்டும் செய்துள்ளது. இந்நிலையில் சிறிலங்கா அரசாங்கத்தை பயங்கரவாதப் பட்டியலில் அமெரிக்கா சேர்த்தாலே அதனுடைய கருத்துக்கள் அர்த்தமுடையதாக அமையும். இல்லையேல் அமெரிக்கா பயங்கரவாதத்திற்குத் துணைபோகும் நாடென்ற அவப்பெயரையே சம்பாதிக்கும். இறுதியாக இலங்கைத்தீவில் சிறிலங்காப் படைகளின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளே தமிழீழ மக்களின் அமைதியையும் பாதுகாப்பையும் பாதிக்கும் ஒரே காரணியாக விளங்கி அங்கே அமைதி வழி அரசியல் தீர்வுக்கு தடைக்கற்களாக உள்ளன. இதனால் இந்துமாக்கடலில் வர்த்தகம் செய்யும் நாடுகளும் இந்துமாக்கடலின் நாடுகளும் சுமுகமான வர்த்தக பொருளாதார அரசியல் முயற்சிகளை நடாத்துவது வர வர சிக்கல் நிலை அடைந்து வருகிறது. எனவே சிறிலங்காவின் படைகளை விலக்கி தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசுக்கும் இடையிலான பேச்சு வார்த்தைகளுக்கான சூழ்நிலை ஒன்றை தோற்றுவிப்பதில் ஐக்கிய நாடுகள் சபையும் உலகின் அமைதி விரும்பும் அனைத்து மக்களும் அமைப்புக்களும் உடன் செயற்பட வேண்டிய நேரம் இது என்பதையே சிறிலங்காவின் இவ் இந்திய கப்பல் அழிப்பு உலகுக்கு எடுத்து விளக்குகின்றது. ★

# மரித்த பின்னும் நீளும் வாழ்வு



## போராளியின் குருதிச்சுவடுகள்

குறிஞ்சி மகள் பூப்பெய்தும் குளிர்வாடைக் காலம். திரும்புகிற திசையெல்லாம் விரும்புகிற பசுமை. இயற்கையின் தூரிகையாய் இடைவிட்டு வருடிப் போகும் சாரல்மழை. அதை குடைபிடித்து தடுக்காத குறும்புத் தனத்தோடு குடும்பிமலைக்காடு. நிமிர்ந்து நனையும் பச்சையில் மட்டுமே இச்சை இருப்பதுபோல் மரங்களில் மட்டுமென்றில்லாது மலைச்சரிவுப் பாறைகளும் பாசிப்பசலையைப் பூசிக் குளிர்ந்திருக்கும். மேலிருந்து ஒரு விசை திரும்பிப் பார்த்தால், மலையோடு கைகுலுக்கிக் கொண்டே கடலுக்கு விடை சொல்லும் மேகத்தின் விசாலம் தெரியும். புல்லுக்கும் வயலுக்கும் பசுமையின் பேதம் இருப்பது புரியும். குளிருக்குப் போர்வை தராத மலையிடம் கோபித்துக் கொண்டு தள்ளிப் போகும் அருவி, வெள்ளிப் பாம்பாய் நெளியும். காற்றுக்கு ஊசி தந்த காலநிலையைக் கண்டித்து தேகம் சிலிர்த்து ஊசிபெறும். சொக்க வைக்கும் வெண்மையுடன் கொக்குகள் குசலம் விசாரித்துக் குந்தியிருந்து பந்தி பரிமாறும், வெள்ளித் தட்டுக்களாய் குளங்கள். உரத்துப் பேச ஆளில்லாத உன்னத வனத்திலே ஒரு மழைக்கும் மறுமழைக்கும் இடைப்பட்ட அந்த அமைதிதான் உலக மகாசங்கீதம். மௌனத்தின் சுருதியை மனதிற்குள் ரசித்தபடி மலையில் ஏறிக்கொண்டிருந்தொம்.

ஏறிக்கொண்டிருந்தவர்களில் யூட்டும் ஒருவன். இயற்பெயர் சந்திரசேகரம் சதீஸ்குமார். வயது இருபது களின் பிற்பகுதி. சராசரி உயரம். சற்று வெள்ளையான முகம். அடர்த்தியான மீசை. ஆனால், பெரும்பாலும் மீசையில்லாத முள்உரோமம் கொண்ட முகத்துடனும் ஒட்டவெட்டிய முடியுடனுமே காட்சியளிப்பான். மட். புனித மிக்கேல் கல்லூரியில் உயர்தரம் படித்து முடித்தவன். வரைபடவியலில் திறமையான மாணவன். படிப்பை முடித்துக் கொண்டு நேரே போராட்டத்தில் இறங்கி, வலது கை மணிக்கட்டின் கீழ்பகுதியை களத்திலே இழந்தவன். ஆனாலும் எல்லோரையும்போல பலதரப்பட்ட பொருட்களையும் சுமந்தபடி வழுக்குப்பாறைகளின் மேலும், மரங்களில் தொற்றியும் மலைச்சரிவில் ஏறிக்கொண்டிருந்தான்.

சரிவின் சில இடங்களில் சமதரையும் இருக்கும். மழைக் காலங்களிலே அதிலே செழித்து நிற்கும் புற்களையும் குழைகளையும் உண்ண காட்டெருமைக ளும், யானைகளும் ஏறுவது வழக்கம். அத்தகைய யானையொன்று திடீரென எங்களை எதிர்கொண்டது. திரும்பியும் ஓடமுடியாது- கிடு கிடு பள்ளம். முன்னே யானை சுட்டாலும் எங்களுக்கு மேலேதான் விழப் போகிறது. செய்வதறியாது திகைத்து நின்றவேளை, மனித உடல் வாசனையை நுகர்ந்த யானை திடுக் கிட்டுத் திரும்பி லத்தி போட்டவாறே ஓடத்தொடங் கியது. எல்லோரும் நிம்மதிப் பெருமூச்சு விட்டோம்.

"இந்த யானை விரண்டுபோய் எங்களை நோக்கி ஓடி வந்தால் எப்படி இருந்திருக்கும்?". "இப்ப யானை செய்ததை நாங்கள் செய்திருப்போம்".

இந்த நகைச்சுவையை மற்றவர்கள் புரிந்து கொள்ளத்

கொண்டிருந்தது. சிரித்த சிரிப்பில் கண்ணோரம் பனித்திருந்தது. கொஞ்சம் கூடக் கறையில்லாத இயல்பான ஆனந்தச் சிரிப்பு. அது சாமானியனின் சந்தோசச் சிரிப்பல்ல, உலகியலில் உயிர் வாழ்தலுக்கான உயரிய தத்துவச் சிரிப்பு. சமர்க்களத்தில் ஈழைநோயை வென்ற சேகுவராவின் வெற்றிச் சிரிப்பு. பார்வையில்லாமலே எழுத்தாக்கங்களைப் படைத்த ஹெலன் கெல்வரின் பெருமைச் சிரிப்பு. நாற்காலியில் இருந்தவாறே நாட்டை நிருவகித்த ருஸ்வேல்டின் சாதனைச் சிரிப்பு. காலில்லாமலே கடலோடித் திரிந்த கிட்டுவின் தன்மானச் சிரிப்பு. ஒருபுறம் மடக்கப்பட்டால் மறுபுறம் முளைத்துக் கொள்ளும் உயிரோட்டமுள்ள மனிதன் இவன். இல்லாவிட்டால் "கேணியா" சத்திர சிகிச்சை முடித்து சில மாதங்களே ஆன நிலையில் ரைபிள், கோல்சருடனும் பாரமான 'கிட்' பாக்குடனும் கிட்டத்தட்ட செங்குத்தான மலைச்சரிவில் ஏறும்போது இப்படிச் சிரிக்க முடியாது. வழுக்கி விட்டாலோ பிடிப்பதற்கு கையும் இல்லை. இத்தனைக்கும் முன்போருமுறை, ஏறுவதற்கு சிரமமான மலைக்கல் ஒன்றின்மேல் கயிறு வீசி, அதைப் பிடித்துக் கொண்டு ஏறி, இடுப்பிலே சேர்த்துக் கட்டியிருந்த 'பெயின்ட்' மற்றும் 'பிரஸ்சினால்' அந்தக் கல்லின் சாய்வான இடத்தினில் பெயர்களை எழுதிவிட்டு இறங்கும்போது இடுப்பில் அடிபட விழுந்த அனுபவமும் உண்டு.

தேடிச் செல்வது இவனது பிறவிக் குணம். வெட்ட வெட்ட முளைவிடும் அறுகுபோல அழிக்க முடியாத மனிதர்களில் இவனும் ஒருவன். இவனிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டியது அதிகம் என்று தோன்றியது.

துப்பாக்கியால் சுடுவதில் அவனுக்கு அபார ஆசை. எல்லாவகையான ரைபிள்களையும் சுட்டுப் பார்க்க வேண்டும் என்று ஒரு வெறி. கனரக ஆயுதங்கள் திருத்தப்படும்போது பரீட்சார்த்த சூடுகளை பொழியும் வேலைக்கு முந்தி நிற்பான். பாரமான அந்தத் துப்பாக்கிகளை இடுப்போடு சேர்த்தணைத்து 'பட பட'வென்று சுட்டுத் தள்ளும் சந்தர்ப்பம் கிடைத்துவிட்டால் முகத்தில் ஒரு அசாதாரண திருப்தியைக் காணலாம். கனரகத் துப்பாக்கியாளர்களால் குறியைச் சுட முடியவில்லை என்றால் "யூட்டை அழைக்கவா?" என்று சிறப்புத் தளபதியவர்கள் தார்மீக எச்சரிக்கை விடுக்கும் அளவிற்கு சராசரிக்கும் மேலான குறியாளனாக இருந்தான். சிறு ரைபிள்களை இடது பக்கம் அணைத்துக் கொண்டு மொட்டையான வலது கையை மகசீனில் முட்டுக்கொடுத்தபடி குருவிகளையும் கொக்குகளையும் சாதாரணமாக விழுத்துவான். சந்தர்ப்பத்தில் பன்றி, மான் போன்ற வேட்டை விலங்குகளையும் வீழ்த்தியதுண்டு. வலது கைக்கு 'பாட்டாவை' முட்டுவைத்தபடி 'புசப்' போட்டிக்கு ஆட்களை அழைக்கும் குறும்பும் உண்டு. குறுகிய காலத்திலேயே இடது கையால் பழகிய எழுத்துக்கள் அழகாகவும் உறுப்பமைவுடனும் இருக்கும். கையை இழந்ததை ஒரு பின்னடைவாக அவன் கருதியதில்லை. சவாலாகவே எடுத்துக் கொண்டான். தனக்கு முன்னே நின்ற தடைக்கல்லை படிக்கல்லாக செதுக்க முயன்று வெற்றியும் கண்டான்.

இயக்க ஒழுக்க விதிகள் எத்தருணத்திலும் மீறப்படல் கூடாது என்பதில் மிகவும் அவதானமுள்ளவன். சலுகைகளையும் எதிர்பார்ப்பதில்லை. இராணுவ நெருக்குதல்கள் மிகுந்த 94 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் குடும்பிமலைக் காடுகளுக்குள்ளே இருந்த எமது பாசறைகளில் உரத்துக் கதைப்பதும் சிரிப்பதும் தடைசெய்யப்பட்ட விவகாரங்கள். மருத்துவம், களஞ்சியம் போன்றவை ஒன்றாகவே இருந்ததனால் இருப்பிடத்தைக் காட்டித் தரக்கூடிய சகல செயற்பாடுகளும் நிறுத்தப்பட்டிருந்தன. பட்டினி கிடந்தாலும் பக்கத்தில் வரும் மானைச் சுட முடியாது. பெரும்பாலான பகல்பொழுதுகள் பொலித்தீன் கொட்டிலின்கீழ் சோர்வாகவே கழிய வேண்டும். ஆனால், யூட்டைச் சுற்றி எப்போதுமே ஒரு உற்சாகக் கூட்டம் இருக்கும். வெட்டப்பட்ட தடி போன்ற அவனது கையின் முனையை சில குறும்புக்காரர்கள் முகர்ந்து பார்த்துவிட்டு "ஆமாம். அப்படித்தான்" என்பதுபோல தலையை ஆட்டுவார்கள். அவர்களின் முகங்கள் அப்பாவிகள் போலிருந்தாலும் கொடுப்பிற்குள் சிரிப்பிருக்கும். அவர்களிடையே உண்மையான அப்பாவியும் ஒருவர் இருப்பார். என்ன விடயம் என்று அவர் கேட்டால் அருகில் இருப்பவர் முகத்தைத் தீவிரமாக் வைத்துக் கொண்டு "கொஞ்ச நாட்களாக யூட் அண்ணனின் கையில் சந்தனம் போல மணம் வீசுகிறது" என்பார். அந்த அப்பாவியும் ஆர்வம் பொங்க யூட்டின் கையை முகர்ந்து பார்ப்பார். எலும்பு துருத்திய அந்தக் கை அவரது மூக்கில் 'நச்' என்று இடிக்கும். இடி சிறியதென்றாலும் வாங்கிய இடம் மூக்கு என்பதால் கண்ணிலே வெள்ளி பறக்க மல்லாந்துவிடுவார் அப்பாவி. எல்லோரும் அடக்கிக் கொண்டு சிரிக்க, அம்பிளியர் என்று பெயரெடுத்த ரதன் (பிரபல மின்னணுவியல் வல்லுனன், கமிரா கலைஞன், சிறந்த சண்டையாளன், அணித்தலைவன். இப்போது மேஜர் ரதன்) "ஹெ.. ஹெஹ்.. ஹெ.. எ..ஏ" என்று தன் தனித்துவமான முழக்கச் சிரிப்பைக் கொட்ட, 'சிரித்தவர்கள் குந்தவும்' என்று பொறுப்பாளரின் தகவல் வரும். தான் சிரிக்காவிட்டாலும் சிரிப்பின் காரணம் தான் என்பதால் யூட்டும் குந்துவான். இதற்குள் இடிபட்டவர் சமாதானமாகி இன்னுமோர் அப்பாவியைக் கொண்டு வரப்போய்விடுவார். தண்டனைச் சாத்தியங்கள் நிறைய இருந்தபோதும் இதுபோன்ற செயன்முறைச் சிரிப்புக்களுக்காக

தொடர்ச்சி 11 ம் பக்கம்.....

**அவன் அழிந்தாலும், அலாதியான தத்துவம் ஒன்றுண்டு. போரின் முடிவான சுதந்திரத்தை தமிழீழத்தில் அனைவருமே அனுபவிப்போம். அவ்வாறாயின் அதற்கான எமது தேசியப் பங்களிப்பு செய்யப்பட்டுவிட்டதா? நாம் உழைக்காமல் உண்ணப்போகும் திருடர்கள் அல்ல என்பதை உறுதிப்படுத்தி விட்டோமா?**

தாமதித்தாலும், யூட் முந்திக் கொண்டான். "அஹ் ஹஹ் ஹஹ் ஹா.." என்று கெக்கலிக் கொட்டிக் கைதட்டிச் சிரித்தான்.

ஒரே ஒரு உள்ளங்கை எப்படிக் கைதட்ட முடியும்? வியப்போடு திரும்பிப் பார்த்தால், விரித்து வைக்கப்பட்டிருந்த இடது கையின் மேல் வலது மணிக்கட்டின் கீழ்ப்பகுதி 'படீர் படீர்' என மோதிக்

இருந்தாலும் வீறாப்புடன் "உங்களுடைய பெயரெல்லாம் எழுதியிருக்கிறன், ஏலுமென்றால் ஏறிப்பாருங்கள்" என்று சவால் விடும்போது முகத்தில் பெருமிதமே இருக்கும். ஊற்றங்கரைக் கோயில் கிணற்றிலே இருகை உள்ளவர்களை உட்காரவைத்து ஒருகையால் தண்ணீரள்ளித் தலையிலே வார்த்துவிடும்போது, தன்னம்பிக்கையும் தாய்மையும் தெரியும். சவால்களைத்

# உட்கட்சிப் பூசலுக்குள் அரசாங்கம் ! நெருக்கடிக்குள் ஜயசிக்குறுய் !!

**போர்** முயற்சிகளில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை நிலையாலும் – விரைவில் காலியாகப்போகும் பிரதமர் பதவியை நிரப்புவது தொடர்பாகவும் பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினுள் சர்ச்சைகள் எழுந்துள்ளன.

போரை முடித்துவிட்டு தேர்தலை நடாத்த வேண்டும் என ரத்வத்தவும்– போரும் தேர்தலும் ஒருங்கே நடைபெற வேண்டுமென சந்திரிகா அம்மையாரும் அண்மையில் சச்சரவுபட்டுக் கொண்டது தெரிந்ததே.



போரை விரைவாக முடிக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் இராணுவம்– கடற்படை– வான்படையென முப்படைகளுக்கும் பொறுப்பாக ஒரு பிரதான கட்டளைத் தளபதியை நியமித்து, போரை விரிவுபடுத்த அம்மையார் திட்டமிட்டுள்ளரர். இந்த நியமனத் திட்டம், ரத்வத்தவின் போர் நெறிப்படுத்தலில் அம்மையாருக்கு ஏற்பட்டுள்ள அதிருப்தியையே காட்டுகிறது. சந்திரிகா – ரத்வத்த உறவில் ஏற்பட்டுவரும் விரிசலுக்கு உதாரணங்களாக, இவற்றை செய்தியாளர்கள் காட்டுகின்றனர்.

இதேசமயம், தான் வகிக்கும் பிரதமர் பதவியை தனது மகன் அனுரா பண்டாரநாயக்காவுக்கு வழங்க, சிறிமாவோ அம்மையார் விரும்புவதாக செய்திகள் கூறுகின்றன. ஆனால், பிரதான எதிர்கட்சியான ஐ.தே. கட்சியிலிருந்தபடி பொ.ஐ.முன்னணி அரசாங்கத்தை காட்டமாக கண்டித்துப் பிரச்சாரம் செயதவர் அனுரா என்பதால், அவரை தமது பிரதமராக ஏற்கும் நிலையில் அனேக அரசாங்கப் பிரமுகர்கள் இல்லை என்றும் கூறப்படுகின்றது. எனினும், ரத்வத்தவுடனான உறவில் ஏற்பட்டுள்ள முறுகல்நிலை காரணமாகவும் – தாயின் இறுதி ஆசையை நிறைவேற்ற வேண்டும் என்ற விருப்புக் காரணமாகவும் அனுராவைப் பிரதமராக்குவது தொடர்பாக சந்திரிகாவும் சிந்திப்பதாக அவதானிகள் கூறுகின்றனர்.

ஆனால், சிறிமாவுக்குப் பின்னர் பிரதமர் பதவியானது ரத்வத்தவுக்கே வழங்கப்பட வேண்டும் என்று சிங்களத்து அரசியல் சக்திமிக்க நபரான மல்வத்த மகாநாயக்க தேரர் பகிரங்கமாகவே அபிப்பிராயம் கூறியுள்ளார்.

மகாநாயக்கர் மற்றும் சக்திமிக்க சில பௌத்த பிக்குகள் உடபட முக்கிய அரசாங்கப் பிரமுகர்களை தனது இல்லத்திற்கு அழைத்த ரத்வத்த, அவர்களுக்கு விருந்தளித்து ஆதரவு கோரிதாக கொழும்புச் செய்திகள் கூறுகின்றன. இந்தப் பிரமுகர்களுக்கு ஊடாக சந்திரிகா அம்மையாருக்கு அழுத்தம் கொடுத்து பிரதமர் பதவியைக் கைப்பற்ற, ரத்வத்த முயல்வதாகவும் தெரிகின்றது.

இத்தகைய உட்பூசலுக்குள் பொ.ஐ. முன்னணி அரசாங்கம் சிக்குண்டுள்ள இதேவேளை, வன்னிச் சமர் முனையில் ஜயசிக்குறுய் படைமினர் நகரமுடியாது முடங்கிப் போயுள்ளனர்.

பதினைந்து மாத காலமாக நடைபெறும் ஜயசிக்குறுய் சமரில் – கடந்த ஒன்பது மாதங்களாக மாங்குளத்தைக் கைப்பற்றுவதற்கான சண்டைகளிலேயே ஜயசிக்குறுய் படைமினர் ஈடுபட்டுள்ளனர். இத்தகைய நீண்டகாலச் சண்டைகளை நடாத்தியும் மாங்குளத்தை நெருங்க முடியாது படைமினர் திண்டாடுகின்றனர்.

மாங்குள சண்டையரங்கம் நாற்பது கிலோ மீற்றர்கள் நீள முன்னரங்க நிலைகளைக் (F.D.L.) கொண்ட பரந்த மரபுவழிச் சமர் அரங்கமாக இப்போது விரிவடைந்துள்ளது. ஒட்டிசுட்டான் பகுதியிலிருந்து வவுனிக்குளம் பகுதி வரை இந்த சண்டையரங்கம் பரந்துள்ளது.

மாங்குளத்தைக் கைப்பற்றுவதற்காக பல்வேறு தந்திரோபாயத் தாக்குதல் திட்டங்களை –படைத் தலைமை – பயன்படுத்திப் பார்த்துள்ளது. தோல்வியே பதிலாகக் கிடைத்துள்ளது.

மாங்குளத்தை நோக்கி சந்தடியற்ற கெரில்லா நகர்வு என்றும் – புலிகளின் முன்னரங்கங்களை பகிரங்கமாக உடைத்துத் தள்ளியபடி – புல்டோசர் பாணியிலான – மரபுவழி நகர்வு முறைகள் என்றும் பல தாக்குதல் திட்டங்களை பயன்படுத்திவிட்டது. ஒவ்வொரு முயற்சியும் படைமினருக்கு பலத்த இழப்புக்களையே ஏற்படுத்தியுள்ளதுடன் – முயற்சிகளில் தோல்வியும் கண்டுள்ளது. மாங்குளம் – கிளிநொச்சி என வன்னியின் இரண்டு சமர் முனைகளும் –இன்று–சிங்களப் படைமினருக்கு சிம்ம சொப்பனமாகவே மாறிவருகின்றன. ★

# ஆட்சி அதிகாரத்தை தக்க வைப்பதற்கு சந்திரிகா கைக்கொள்ளும் வழிமுறைகள்

"சிறிலங்காவின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்த போர் தொடர்பாக வழங்கும் உத்தரவாதங்கள் நிறைவேற்றப்பட முடியாதவையாகும்" என்று ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் தர்மசேன பண்டா தெரிவித்தமை, எதிர்க்கட்சியினரின் குற்றச் சாட்டு ஒன்றுதான் என்று நோக்குதல் பொருத்தப்பாடானதல்ல. இது கடந்த கால நிகழ்வுகளிற்பாற்பட்ட அனுபவத்தின் வெளிப்பாடு ஒன்று என்று கூறுதலே சரியானதாகும்.

இதேவேளை, இதனைத் தனியாக அமைச்சர் ரத்வத்தவின் கூற்றுக்கள் தொடர்பானவை எனக் கூறுவதைவிட பொ. ஐ. முன்னணியின் தொடர்பானவை எனக் கூறுதலே பொருத்தப்பாடானவையும் ஆகும். ஏனெனில், பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்த போன்றே ஜனாதிபதி சந்திரிகாவும், "யுத்தம் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது" "யுத்தம் விரைவில் முடிவுக்குக் கொண்டு வரப்படும்" எனவும் தெரிவித்து வருகின்றார்.

ஆனால், தளநிலமையோ அதற்கு மாறாக உள்ளது. அதாவது, யுத்தம் மிகவும் கடுமையாக மாறிக் கொண்டே செல்கின்றது. யுத்தம் முன்னரைவிட செலவீடானதாகவும், இழப்பீடானதாகவும் மாறியுள்ளது என்பதை அனைவரும் இன்று ஒப்புக் கொள்ளுவதாக உள்ளது. ஒவ்வொரு இராணுவ முயற்சியின் பொழுதும் இன்று இராணுவம் சந்திக்கும் இழப்பானது இதனை வெளிப்படுத்துவதாக உள்ளது.

எடுத்துக்காட்டாக ஜயசிக்குறு நடவடிக்கை ஆரம்பமாகி இன்று 15 மாதங்கள் நிறைவடைந்துவிட்டன. ஆனால் இந்த நடவடிக்கை பூர்த்தியானதாகத் தெரியவில்லை. இந்த நடவடிக்கை திட்டமிட்டபோது அதிகபட்சம் மூன்று மாதத்திற்குள் இது பூர்த்தியாகும் எனத் திட்டமிடப்பட்டது. இன்று மேலதிகமாக ஒரு வருடம் கூடிவிட்டபோதும் ஜெயசிக்குறு இன்னும் முடிவுக்கு வரவில்லை.

ஜெயசிக்குறு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்த முன்னேற்ற வேகமும் இன்றில்லை. ஐ.தே.க. உறுப்பினர் தர்மசேன் பண்டா கூறியிருப்பது போன்று ஜெயசிக்குறு நடவடிக்கை கடந்த ஆறு மாதத்தில் ஒன்றரைக் கிலோ மீற்றர் மட்டுமே நகர்ந்துள்ளது என்பது பிழையான தொன்றல்ல. இவ்வருடத்தில் ஜெயசிக்குறு துருப்புக்கள் குறிப்பிட்ட அளவில் ஒன்றையும் செய்யவில்லை என்பதே உண்மையானது.

அதேசமயம் இராணுவம் ஆளணி, தளபாடங்கள் என்பனவற்றோடு கிளிநொச்சி நகரில் அதிகமான பகுதிகளையும் இழந்துள்ளது என்பதே களநிலவரமாகும். இந்த நிலையில், யுத்தம் இறுதிக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கின்றது, விரைவில் யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்படும் எனவும் அரச தரப்பு கூறிக் கொள்வது வேடிக்கையானதாகும்.

அத்தோடு சந்திரிகா அரசாங்கத்தைப் பொறுத்து யுத்தத்தில் வெற்றி என்பது மட்டும்தான் நிறைவேற்றப்படமுடியாத வாக்குறுதியாக இருக்கப் போவதில்லை. அதன் தேர்தல் வாக்குறுதிகள், மற்றும் அது தற்பொழுது வழங்கும் வாக்குறுதிகள் எதுவுமே நிறைவு செய்யப்படப் போவதில்லை. ஏனெனில் சந்திரிகாவின் ஆட்சிக்காலம் இறுதிப் பாகத்தை நெருங்கத் தொடங்கியுள்ளது. அதாவது ஆட்சிக் காலத்தில் இன்னும் மூன்றில் ஒரு பகுதியே மீதமாக உள்ளது. இந்த நிலையில் சந்திரிகா தனது ஆட்சிக் காலத்தை நீடிப்பதானால் அதற்கு முறைகேடான ஜனநாயக விரோதச் செயல்களிலேயே ஈடுபட வேண்டும். அதாவது மாகாணசபைத் தேர்தல்களை நிறுத்தி வைத்தது போன்று ஜனநாயக விரோதச் செயல்களை கைக்கொள்வதைத் தவிர வேறொரு வழியும் அவருக்கு இருக்கப் போவதில்லை.

ஆனால், இவ்வழி முறைகளை சந்திரிகா தொடர்ச்சியாக மேற்கொள்ள மாட்டார் என எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் அவரின் கடந்த கால நடவடிக்கைகளே அவர் தமது ஆட்சி அதிகாரத்தை தக்க வைக்க எத்தகைய செயற்பாடுகளிலும் ஈடுபடுவார் என்பதையே வெளிக்காட்டுவதாக உள்ளது. இந்தவகையில் பார்க்கையில் அவர் கடந்தகால ஐ.தே.க. ஆட்சியாளர்கள் எவரையும்விட எந்தவகையிலும் குறைந்தவர் அல்ல என்றே கூறலாம்.

★

# மனங்களை வெல்லும் தந்திரங்களும் மக்களை அடிமைகொள்ளும் சூழ்ச்சிகளும்

யாழ்குடாநாடு கைப்பற்றப்படும் போது முப்பதினாயிரம் தமிழர்கள் வரையில் கொல்லப்படும் சாத்தியமுள்ளது என்ற கணிப்புக்கு மத்தியில் அதைச் செய்வதற்குத் தயாரான நிலையில் யாழ்ப்பாணம் மீதான படையெடுப்பை சந்திரிகா அரசாங்கம் ஆரம்பித்தது.

ஆனால், புலிகள் இயக்கத்தின் முன்னேற்பாட்டு நடவடிக்கைகளினால் - குடாநாடு - இந்த அனர்த்தத்திலிருந்து பாதுகாக்கப்பட்டது.

வலிகாமத்திற்கான மரபுச்சமர் முடிந்தபின் - அரசின் அழைப்பிற்கு மத்தியில் - திரும்பிச்சென்ற மக்களில் ஆயிரத்திற்கும் அதிகமானோர் காணாமல் போயினர்.

இந்நிலையில் மாபெரும் வலிகாம இடப்பெயர்வு இல்லாமல், வலிகாமச்சமர் நடந்திருக்குமானால் முப்பதினாயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்ற கணிப்பு குறைந்தளவு தொகையாகவே இருந்திருக்கும்.

மக்கள் இல்லாப் பகுதிகளில் நடைபெறும் இன்றைய ஜயசுக்குறுய் மரபுச்சமரின் தீவிரத்தன்மையை அவதானிக்கும் போது - இத்தகையதொரு சமர் வலிகாமம் போன்ற மக்கள் அடர்த்தி மிக்க பிரதேசத்தில் நடந்திருந்தால் நிலைமை எப்படி இருந்திருக்கும் என்று ஊகிக்கலாம்.

இனவெறி நோக்குடன் - சமர் அரங்கிலிருந்து 25 கி.மீற்றர் தொலைவிலிருந்த மக்கள் குடியிருப்புக்கள் மீது (சுதந்திரபுரம், வள்ளிபுரம், உடையார்கட்டு) ஒரு குண்டுத்தாக்குதலை சிங்களப்படைகள் திட்டமிட்டு நடாத்த முடியுமானால், சமர் நடைபெறும் வேளையில் வலிகாம மக்கள் அங்கே இருந்திருந்தால் எத்தகைய அனர்த்தத்தை படையினர் ஏற்படுத்தியிருப்பர் என்பதை எளிதாக உணரலாம்.

அன்றைய பலாலிப் பெருந்தளத்திலிருந்து ஏறக்குயை 25 - 30 கி.மீற்றர் நீள அகலத்தில் சுமார் 5 இலட்சம் மக்களையும் கொண்டிருந்த வலிகாமத்தில் சமர் முடியும்வரை அதன் மக்களை அங்கேயே தங்கியிருக்க அனுமதித்திருந்தால் நிலைமை எவ்வாறு இருந்திருக்கும் ?

சண்டைகள் என்ற சாட்டிலும், புலிக்களையெடுப்பு என்ற போர்வையிலும் பல்லாயிரம் தமிழர்கள் அழித்தொழிக்கப்பட்டிருப்பர். வலிகாமத்தின் இளைஞர் சக்தி காணாமல் போயிருக்கும்.

வலிகாம இடப்பெயர்வு, வலிகாமம் வாழ்மக்களின் உயிர்காப்பு நடவடிக்கையாகியதை வரலாறு சொல்லும்.

இதேவேளை, போலித்தேர்தல் ஒன்றை நடாத்தி - ஜனநாயகம் திரும்பிவிட்டது என்று காட்டி, புலிகள் நடாத்தும் ஆயுதப்போராட்டத்தை மக்கள் ஆதரவற்ற பயங்கரவாதமாகச் சித்தரிக்க அம்மையார் முயற்சிக்கின்றார்.

இந்த நோக்கத்திற்காக தமிழ்க்குழுக்களையும் தேசியப் பிரக்ஞையற்ற சில தமிழ்ப்புத்திஜீவிகள் மற்றும் இலக்கியவாதிகளையும் சந்திரிகா அரசாங்கம் விலைகொடுத்து வாங்கியுள்ளது. விடுதலைப் போராட்டத்திற்கெதிரான பிரச்சாரப்படையில் இவர்களையும் போர்வீரர்களாக்கி உலக சமூகத்தை தன்வயப்படுத்த அது முயற்சிக்கின்றது.

ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசத்தை விடுவிக்கப்பட்ட பகுதிபோல சித்தரிப்பதிலும்:-

ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர்களை வென்றெடுக்கப்பட்ட மனிதர்களாகக் காட்டுவதிலும்:-

இராணுவ நிர்வாகத்தை சிவிலியன் நிர்வாகமாகத் திரித்துக் கூறுவதிலும் சந்திரிகா அரசாங்கம் சக்தியைச் செலவிடுகின்றது.

தென்தமிழீழத்திலும் வன்னியிலும் இனஅழிப்புக் கடமையை இதயசுத்தியுடன் செய்யும் இராணுவத்தினரும் அவர்தம் தளபதிகளும் கடமைக்காக யாழ்ப்பாணம் அனுப்பப்பட்டதும், நட்பு முகமூடி அணிவித்து நடிக்க வைக்கப்படுகின்றனர். ஆட்பற்றாக்குறையை ஈடுசெய்ய யாழ்ப்பாணத்திலிருந்து படையினர் ஜயசுக்குறிய் முனைக்கு அனுப்பப்படும்போது முகமூடி அகற்றப்பட்டு சுயமுகத்துடன் அனுப்பப்படுகின்றனர்.

இதயத்தை வெல்லவென்று யாழ்ப்பாணத்தில் ஏதேதோ செய்வதாகக் கூறிக்கொண்டு வன்னியிலும் தென் தமிழீழத்திலும் தமிழரின் இதயத்தை ரவைகளால் துளைத்தெறிகின்றனர்.

யாழ்வாசிகளின் மனங்களை வெல்லமுயல்வதாகச் சொல்லிக்கொண்டு கொழும்பு - மலையகம் வாழ் தமிழர்களது மன அமைதியைக் குலைத்து - பீதியை விதைத்து வருகின்றனர்.

யாழ்குடாநாட்டிற்குள்ளேயே ஒரு புறம் படைத்தளத்தையும் மறுபுறம் நட்பு முகமூடியையும் காட்டி, தமிழரின் விடுதலையுணர்வை நசுக்க இராணுவம் முயற்சிக்கின்றது. பேரினவாதத்தின் இந்த இரட்டை வேடம் ஈழத்தமிழினத்திற்கு நன்கு பரிச்சயமானதொன்றாகும்.

## காவலும் காட்சியும்



சந்திரிகா அரசாங்கம் உருவாக்கிய யாழ்நகரபிதாக்களும், யாழ்நகரின் இராணுவ இணைப்பதிகாரிகளும் ஒரே அரசியல் பணியையே ஆற்றுகின்றனர்.

தமிழ்மக்களின் ஆயுதம் தரித்த விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதே அந்தப் பொதுப்பணியாகும். ★

**உண்மையில் யாழ்ப்பாண மக்களைக் கவர்வதோ ஈழத்தமிழர்களது மனங்களை வென்றெடுப்பதோ சந்திரிகா அரசாங்கத்தின் நோக்கமல்ல. மாறாக உலக சமூகத்தின் இதயத்தையும் - மனத்தையும் வெற்றிகொண்டு தனது பேரினவாத அரசியலைத் தொடர்வதே அம்மையாரின் திட்டம்.**

போரைக் காரணம்காட்டி - குடாநாட்டை இரத்தபூமியாக்கி அதை ஈழத்தமிழர்களுக்கு ஒரு படிப்பினையாக்கி -விடுதலைப்போராட்டத்தை கைவிடச் செய்விக்க சதித்திட்டம் தீட்டியிருந்த சந்திரிகா அரசாங்கம் இப்போது அதே குடாநாட்டை ஒரு அரசியல் காட்சிப் பெட்டகமாக்கி குடாநாட்டு மக்களை மயக்கவும் - உலகசமூகத்தை ஏமாற்றவும் முயற்சிக்கின்றது.


மின்சாரம் - தொலைபேசி - தாராள சினிமா -கசிப்பு என்பவற்றைக் கொடுத்து, போராட்டத்தில் - பாதிக்கப்பட்ட மக்களது மனங்களை - இதயங்களை வெல்ல அம்மையார் வியூகம் வகுத்துள்ளார் போலுள்ளது.

உண்மையில் யாழ்ப்பாண மக்களைக் கவர்வதோ ஈழத்தமிழர்களது மனங்களை வென்றெடுப்பதோ சந்திரிகா அரசாங்கத்தின் நோக்கமல்ல. மாறாக உலக சமூகத்தின் இதயத்தையும் - மனத்தையும் வெற்றிகொண்டு தனது பேரினவாத அரசியலைத் தொடர்வதே அம்மையாரின் திட்டம்.

இதைச் சாதிப்பதன் மூலம் தமிழினத்திற்கெதிரான போரை நீடித்து போரில் வெற்றிகாண அம்மையார் துடிக்கின்றார். அதாவது போர்வழி மூலம் தமிழரின் இனப்பிரச்சினையைத் தீர்க்க விரும்புகின்றார். போரில் புலிகள் இயக்கத்தை வென்று தமிழினத்தை சரணடையச் செய்வித்து தமிழரின் தேசியத் தனித்துவத்தை அழிப்பதுதான் இந்தச் சூழ்ச்சித் திட்டத்தின் அரசியல் இலக்காகும்.

# அம்பகாமம் - கிளிநொச்சி சண்டைகள்

**அம்பகாமம் - கிளிநொச்சி சண்டைகளை விபரித்து மனக்கண்முன் நிறுத்தும் கட்டுரை**



ஜயசிக்குறுய் முன்னரங்க நிலைகளின் (F.D.L.) நீளம், இப்போது பிரமாண்டமான அளவில் விரிவடைந்துள்ளது.

கரிப்பட்ட முறிப்பை படையினர் கைப்பற்றியதைத் தொடர்ந்து ஜயசிக்குறுய் முன்னரங்க நிலைகள் மாங்குளத்தின் வாசலிலேயே அமைக்கப்பட்டன.

அப்போதய மாங்குள முன்னரங்க நிலைகளின் நீளம் சுமார் நான்கு கிலோ மீற்றர்களாகும்.

புளியங்குளம் மற்றும் கனகராயன்குளம் பகுதிகளைவிட்டு புலிகள் பின்வாங்கி மாங்குளத்தைச் சூழ அரணமைத்த போது மாங்குள முன்னரங்க நிலைகளின் நீளம் சுமார் இருபது கிலோ மீற்றர்களாக இருந்தன.

மாங்குளத்தைக் கைப்பற்றும் இலக்குடன் சண்டைகள் ஆரம்பமாகி - தீவிரமடைந்தன.

புலிகள் அமைத்து வைத்திருந்த அந்த இருபது கிலோ மீற்றர்கள் நீள முன்னரங்கத்தில் எங்காவது ஒரு உடைப்பை ஏற்படுத்தி மாங்குளத்திற்குள் புக படையினர் பலதடவைகள் முயன்றனர்.

எந்த ஒரு முயற்சியும் வெற்றியில் முடியவில்லை. பதிலாக, படையினர் பாரிய உயிரிழப்பையே சந்தித்தனர்.

இந்த நிலையில் நேரடிச் சண்டையைத் தவிர்த்து-புலிகளின் முன்னரங்க நிலைகளை மேவி நகர்ந்து-கடக்க படையினர் முயன்றனர்.

படையினரின் இந்த தாக்குதல் தந்திரத்தால், முன்னரங்க நிலைகளை மேலும் அதிக தூரத்திற்கு நீட்ட வேண்டிய தவிர்க்க முடியாத தேவை புலிவீரர்களுக்கு எழுந்தது. ஜயசிக்குறுய் ஒரு வருட பூர்த்தியை அடைந்த வேளையில், மாங்குள முன்னரங்க நிலைகள் சுமார் முப்பது கிலோ மீற்றர்கள் நீளத்தைக் கொண்டிருந்தன.

ஆனால், ஒரு வருட பூர்த்தி நிறைவடைந்த இரண்டு வாரங்களின் பின்-மே, 28ஆம் திகதி-ஜயசிக்குறுய் முன்னரங்கின் கிழக்குப் பகுதி எல்லையாக விளங்கிய அம்பகாமம் பகுதியையும் மேவி, படையினர் மேற்கொள்ள முயன்ற ஒரு படை நகர்வைத் தொடர்ந்து, முன்னரங்க நிலைகளை மேலும் நீட்ட வேண்டிய கட்டாயத்தை புலிகள் இயக்கம் எதிர்கொண்டது.

அது மே, 28ஆம் திகதி.

அம்பகாமம் பகுதியில் இருந்த முன்னரங்க நிலைகளில் நிலை கொண்டிருந்த புலிவீரர்கள் படை நகர்வை எதிர்பார்த்து காத்திருக்க, படையினர் முன்னரங்க முடிவு நிலைகளுக்கும் அப்பால் - அதை மேவி சந்தடியற்ற நகர்வைச் செய்தனர்.

புலிகளும் தந்திரோபாய அமைதி காத்தனர். சில நூற்றுக் கணக்கான சிங்களப் படைகள் புலிகளின் முன்னரங்க அரண்களுக்குப் பின்னால் ஒரு சில கிலோ மீற்றர்கள் உள்ளே வந்து நிலைகொண்டனர்.

மரபுவழிச் சண்டைகளான நேரடிச் சண்டைகளுக்கே நன்கு பழக்கப்பட்ட சிங்களப் படைகள்-அன்றையதினம்-கெரில்லாப்போர் முறைக்கு உரித்தான மரபுவழியற்ற முறையில் நகர்வைச் செய்தனர். சுமார் 1500 பேரைக் கொண்ட அன்றைய நடவடிக்கை அணியில் ஏறக்குறைய 300 கொமாண்டோக்களைக் கொண்ட அணி உள்ளே நுழைந்து, பிரதான அணியின் வருகைக்காக காத்திருந்தது.

மரபுவழிப் படையான சிங்களப்படைக்கு இத்தகைய மரபுவழியற்ற நகர்வு சுலபமானதாக இருக்கவில்லை.

மரபுவழியற்ற சண்டை முறைகளில் உலகப் புகழ்பெற்ற புலிச்சேனை, உள்ளே புகுந்து சிங்களச் சிறப்பு அணியையும் - உதவ ஆயத்தமாகிக் கொண்டிருந்த பிரதான காலாட்படை அணியையும் பிரித்துவைக்கும் தந்திரோபாயத் தாக்குதலை நடாத்தி தொடர்புகளை அறுத்தது. உள் நுழைந்த அணியை முற்றுகைக்குள் வீழ்த்தியது.

கெரில்லா முறையில் உள்நுழைந்த சிங்களத்தின் சிறப்பு அணியினர் மீது புலிகள் மரபுப் போர்ப் பாணியில் எறிகணைத் தாக்குதலைத் தொடுத்தனர். அதேவேளை, கெரில்லாத் தந்திரோபாயங்களைப் பயன்படுத்தி உள் நுழைந்து தாக்கினர். உள்ளே வந்த பகையணி சிதைந்து - ஓட்டமெடுத்தது. போகும் திசை தெரியாது திக்குமுக்காடியது. சிதைந்த பகையணி விரட்டி, விரட்டி வேட்டையாடப்பட்டது.

இந்த சிங்கவேட்டை இரண்டு நாட்கள் நீடித்தது. முடிவில் 50ற்கும் மேற்பட்ட படையினரைக் கொன்று சுமார் 200 படையினரை உடற் சேதத்திற்குள்ளாக்கிய புலிவீரர்கள், பகைவனின் முயற்சியை முறியடித்ததுடன்-காட்டுச் சண்டையில் பகைவனுக்கு ஒரு பாடம் படிப்பித்தனர்.

பின்னரங்கம் வந்து படையினரை உற்சாகப்படுத்தி -படை நடவடிக்கையை நடாத்திய ரத்வத்தவினதும், தலுவத்தவினதும் இராணுவ ஆசைகளுக்கு புலிகள் இயக்கம் மேலும் ஒரு பதிலடி கொடுத்தது.

இந்தச் சண்டையைத் தொடர்ந்து முன்னரங்க நிலைகளை மேலும் நீட்ட வேண்டிய தேவை புலிகளுக்கு எழுந்தது. படையினர் மேவி நகர முயன்ற பகுதிகளுக்கும் முன்னரங்க நிலைகள் விரிவுபடுத்தப்பட்டன. இப்போது, மாங்குளம் சண்டையரங்கை மையமாகக் கொண்ட ஜயசிக்குறுய் முன்னரங்க நிலைகளின் நீளம் சுமார் நாற்பது கிலோ மீற்றர்களாக வளர்ந்தது.

கண்டி வீதிக்கு கிழக்கே ஒட்டுசுட்டான் பகுதியிலிருந்து-கண்டிவீதிக்கு மேற்கேயுள்ள வவுனிக்குளம் பகுதி வரையான சுமார் நாற்பது கிலோ மீற்றர் நீள முன்னரங்க நிலைகளை ஜயசிக்குறுய் சமரரங்கம் கொண்டுள்ளது.

இது காரணமாக, மிக நீண்டதொரு முன்னரங்க நிலைகளைக் கொண்டவாறு மரபுச் சண்டையிடும் புதிய இராணுவப் பரிமாணத்தை தமிழீழ விடுதலைப் போர் சந்தித்துள்ளது.

நான்கு கிலோ மீற்றர் நீள முன்னரங்குடன் ஆரம்பமான மாங்குளம் சமரரங்கு, இப்போது நாற்பது கிலோ மீற்றர்கள் நீள ஜயசிக்குறுய் முன்னரங்கமாக நீண்டு, விரிந்துள்ளது.

முன்னரங்க நிலைகளை நீட்டி-விரிவாக்க புலிகளை நிர்ப்பந்தித்தால் அது அவர்களுக்கு பாதகமான இராணுவ விளைவுகளைக் கொடுக்கும் என்று சிங்களத்தரப்பு கருதியது.

அளவுக்கு மிஞ்சி முன்னரங்க நிலைகள் நீண்டு-விரிந்தால் புலிகளின் ஆள்-ஆயுத பலம் ஐதாக்கப்படும் அது புலிகளின் எதிர்ப்பு வலுவை சிதைத்துவிடும் என்று சிங்களத் தளபதிகள் நம்பினர்.

இதனால், படையினர் தாமும் பரண் நிலைகொண்டு புலிகளையும் பரப்பி-நிலைகொள்ள வைத்தனர்.

ஆனால், படைத்தரப்பு கணித்ததுபோல விளைவுகள் ஏற்படவில்லை.

களத்தை விரிவாக்கி, முன்னரங்க நிலைகளை நீட்டுவதன் மூலம் புலிகளுக்கு ஆட்பற்றாக்குறைப் பிரச்சினையை ஏற்படுத்த விரும்பிய பகைத் தலைமையின் திட்டம், படைத் தரப்பையே ஆட்தேவை நோயில் வீழ்த்திவிட்டது.

முன்னரங்க நிலைகளை 'எலாஸ்ரிக்' இழுப்பதுபோல இழுத்து-நீட்டி, புலிப் பலத்தை ஐதாக்கிப் பலவீனப்படுத்தலாம் என்ற திட்டமும் பகைத் தரப்பிற்கு நடைமுறைச் சாத்தியமற்ற பகற்கனவாகியது.

மே, 28 அம்பகாமம் பகுதிக்கு அப்பால் ஒரு மரபுவழியற்ற நகர்வைச் செய்து படுதோல்வி கண்ட பகைவன் - ஐந்து நாட்கள் கழித்து - யூன், 4ஆம் திகதி கிளிநொச்சி சமர் முனையில் ஒரு மரபுவழி நகர்வைச் செய்ய முயன்றான்.

யூன், 4 காலை 6.30 மணி. புலிகளிடம் பறிகொடுத்த கிளிநொச்சியின் மையப் பகுதியை மீளக் கைப்பற்றும் திட்டத்துடன் படைகள் நகர்ந்தன.

பிரதான பாதையான கண்டிவீதியை ஒரு

முனையாகவும்-திருநகர் பகுதியை இரண்டாவது முனையாகவும்-அருகில் உள்ள கணேசபுரம் பகுதியை மூன்றாவது முனையாகவும் கொண்டு கவசப்படையின் உதவியுடன் பகைவன் நகர்வுச் சண்டையைத் தொடக்கி யிருந்தான்.

இரண்டாவது முனையான திருநகர் சண்டைமுனை பெரியதாகவும் ஆக்ரோசமானதாகவும் இருந்தது. இடித்தெறிந்தபடி-உள்நுழையும் 'புல்டோசர்' நகர்வு முறையை படையினர் மேற்கொண்டனர்.

திருநகர் பகுதியிலிருந்த புலிகளின் முன்னரங்க நிலைகள் சிலவற்றை தாக்கி-உடைத்த படையினர் நிலை கொள்ள முயன்றபோது சண்டைகள் கடுமையடைந்தன.

இந்த நகர்விற்காக கிளிநொச்சிக்குப் பரிச்சயமான படையணிகளையே பகைத் தலைமை பயன்படுத்தியது.

முன்னர் கிளிநொச்சியின் மையப்பகுதி புலிகளால் கைப்பற்றப்பட்டபோது அந்தப் படைமுகாமில் நிலைகொண்டிருந்த படையணிகளையே இந்த நகர்விற்குப் படைத்தலைமை பயன்படுத்தியது. ஒரு வகையில் ஒரு பதிலடியாக அல்லது ஒரு இராணுவச் சவாலாகவே இந்த நகர்வை படைத்தலைமை கருதியது.

இந்த 'புல்டோசர்' நகர்விற்காக 5வது கஜபாகு படைப் பிரிவையும்-7வது இலகு காலாட்படைப் பிரிவையும்-1வது எஸ்.எவ். அணியையும் படைத் தலைமை பயன்படுத்தியது.

இதில் 5வது கஜபாகு அணியும்-7வது காலாட் படையும் முன்னர் கிளி நொச்சியில் நிலைகொண்டிருந்தன.

முன்னைய கிளிநொச்சிப் படைத் தளத்தின் முன்னரங்க நிலைகளை 5வது கஜபாகு அணியே காவல் செய்திருந்தது. இது ஒரு இரத்த வெறிகொண்ட கொலையணி.

'சத்ஜய' நடவடிக்கையைத் தொடர்ந்து வந்த அன்றைய நாட்களில்- தமது வீடுகளைப் பார்வையிடவும்-தேங்காய் உட்பட உணவுப் பொருட்களை எடுத்து விற்றுச் சீவிக்கவெனவும் சென்ற எமது மக்கள், முன்னரங்க நிலைகளிலிருந்து முன்னேவந்து ரோந்து செய்த இந்த கொலைகார அணியிடம் அகப்பட்டு துடிதுடிக்கக் கொல்லப்பட்டி ருந்தது குறிப்பிடத்தக்கது.

கிறிஸ்தவ மதகுரு ஒருவர் உட்பட 100ற்கும் சற்று அதிகமானோர் இந்தக் கொலைகாரப் படையின் கைகளில் சிக்குண்டு பலியானார்கள்.

இந்தக் கொலைப் படையான 5வது கஜபாகு படையணியைச் சேர்ந்த படையினரே-புலிகளின் திருநகர்ப்பகுதி முன்னரங்க நிலைகளை உடைத்து உட்புகுந்து மாட்டியவர்களாவர்.

நிலை கொள்ள வந்த கொலை அணி மீது புலிகளின் பீரங்கிப் படையணி சரமாரியான சூடுகளை வழங்கி பகையணியை சிதைத்தது. சிதைந்த சிங்களத்து அணியை-புலிகளின் தாக்குதலணிகள்-வளைத்துத் தாக்கி பெருநாசத்தை ஏற்படுத்தின.

காலை 6.30 மணியிலிருந்து மாலை 4.00 மணிவரை நடந்த இந்தக் கடும் சண்டையில் 200 படையினர் வரை பலியாகினர். 400ற்கும் அதிகமானோர் உடற்சேதம் அடைந்தனர். சுமார் 200 துப்பாக்கிகளை புலிவீரர்கள் கைப்பற்றியி ருந்தனர்.

உள்நுழைந்த கொலைகார 5வது கஜபாகு படைப்பிரிவின் 50 சடலங்களை சேர்த்தெடுத்த புலிவீரர்கள், அவற்றை ஐ.சி.ஆர்.சி. ஊடாக சிங்களத்துக்கு அனுப்பிவைத்தனர். வேறும் சில கஜபாகுச் சடலங்கள் முன்னரங்கப் பகுதியில் சிதைந்து கிடந்தன.

சுமார் 10.00 மணிநேரம் தொடர்ந்து நடந்த இந்த வீரமிகு எதிர்த் தாக்குதலில் 42 புலிவீரர்கள் வீரச் சாவடை ந்திருந்தனர்.

சிங்களப் படைக்கு பாரிய உயிர்ச் சேதத்தை கொடுத்த இப்பெரும் சண்டை முடிந்து சரியாக நான்காம் நாள் (8-6-98) மீண்டும் கிளி-பரந்தன் படையினர் ஒரு நகர்வு முயற்சியை எடுத்தனர்.

இதுவும் 'புல்டோசர்' நகர்வு முறையாக இருந்தது.

8ஆம் திகதி அதிகாலை 5.30 மணிக்கு அதே திருநகர் முன்னரங்க நிலைகளில் சிலவற்றை தாக்கி-வெற்றிகொண்டு-மீண்டும் பகைப்படை உட்புகுந்தது. இம்முறை உட்புகுந்த பகையணியில் நூற்றுக் கணக்கானோர் இடம் பெற்றிருந்தனர்.

முன்னைய நகர்வு முயற்சியின் போது புலிகளின் பகுதிகளுக்குள் உள்புகு ந்திருந்தாலும் அங்கே நிலைகொள்ள முன்னர் அழிக்கப்பட்ட 5வது கஜபாகு அணியைப் போலல்லாது, இம்முறை படையினர் பிடித்த இடத்தில் தொடர்ந்தும் நிலைகொண்டிருக்க உட்புகுந்த அணிகள் முயன்றன.

இம்முறை சண்டை அனுபவம் மிக்க சிங்களத்து அணிகள் புலிகளின் நிலைகளுக்குள் புகுத்தப்பட்டன.

உள்நுழைந்த பகையணியில் 9வது கெமுனு படைப்பிரிவும்-7வது சிங்க றெஜிமென்டும் அடங்கியிருந்தன.

நான்கு மாதங்களுக்கு முன்னர், 10-2-98 அன்று கிளி-பரந்தன்-ஆனையிறவு தளம் மீது ஒரு பெரும் வலிந்த தாக்குதல் நிகழ்த்தப்பட்டதை அனை வரும் அறிவர். இந்த தாக்குதல் நடவடிக்கையின்போது பரந்தன் பகுதியில் நிலைகொண்டிருந்த 9வது கெமுனு பிரிவை தாக்கி அழிக்கும் சண்டையின்போது ஐம்பதிற்கும் மேற்பட்ட பெண்புலிகள் வீரச்சாவடை ந்ததும் குறிப்பிடத்தக்கது.

புலிகளின் பகுதிக்குள் நுழைந்த அணியில் இந்த 9வது கெமுனுவும் ஒன்றாக இருந்தது. உள்நுழைந்த இந்தப் பகையணிகள் கண்டிவீதிக்கு மேற்கே டிப்போச்சந்தி வரையான பகுதியை தம்வசப்படுத்த முயன்றன. கிளிநொச்சி நகரின் மையப்பகுதி புலிகளால் மீட்கப்பட்ட தாக்குதலுக்கு முன்னர்-கிளிநொச்சி தளப் படையினரின் முன்னரங்க நிலைகள் டிப்போ சந்திப்பகுதியில் அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

எப்பாடுபட்டாவது, நுழைந்த படைகளை நிலை கொள்ளவைக்க ஆனையிறவு கட்டளை மையம் விடாமுயற்சி செய்தது.

காட்டமான முறியடிப்புத் தாக்குதலை புலிகள் விடாது நடாத்திக்கொண்டு இருந்தனர். அதிகாலை தொடங்கிய சண்டை மதியத்தையும் தொட்டுக் கொண்டிருந்தது.

உள்நுழைந்த படைக்கான மேலதிக உதவிகளையும் கிளிநொச்சித்தள படையினருடனான நிலத் தொடர்பு களையும் புலிவீரர்கள் வெற்றிகரமாக தடைசெய்து சண்டையில் மேலோங்கினர்.

புலிகளின் எறிகணைத் தாக்குதல் களாலும்-முறியடிப்புத் தாக்குதல்களாலும் உள்நுழைந்த படையினர் சிதைந்து-சேதப்பட்டனர். இறுதியில் தமது படை நிலைகளை நோக்கி தப்பிப்பிழைக்க ஓட்டமெடுத்தனர்.

சண்டைகளில் சிக்கல்கள் ஏற்படும்போது பிடித்த நிலைகளை-அல்லது நிலைகொண்ட நிலைகளைக் கைவிட்டு படைகள் பின்வாங்குவது ஒரு இராணுவ தந்திரோபாயம். ஆனால், இந்தச் சண்டையில் படையினர் செய்தது பின்வாங்கல் அல்ல. பின்வாங்கல் என்றால் அதில் ஒரு ஒழுங்குமுறை இருக்கும்.

ஒரு அணி தற்காப்புச் சண்டையில் ஈடுபட, மறு அணி பின்னேறுவதும், பின்னர் பின்னேறிய அணி உதவிச் சூடுகளை வழங்க சண்டையிட்ட அணி பின்வாங்குவதும் என்று, ஒரு சக்கரச் சுழற்சிபோலவே இராணுவப் பின்வாங்கல் நடைபெறும். அது ஒரு திட்டத்திற்கு உட்பட்டு நடக்கும். இந்தப் பின்வாங்கல்



அவ்விதம் நடைபெறவில்லை. 4ஆம் திகதித் தாக்குதலின்போது அழிந்துபட்ட- உள்நுழைந்த- படையினர் போலவே தாமும் ஒட்டுமொத்தமாக அழிக்கப்படலாம் என்று படையினர் பீதியடைந்தனர். புலிகள் நடாத்திய முறியடிப்புத் தாக்குதலின் வீரியம் அவர்களை கலக்கியது. அதேவேளை, திட்டமிட்டுப் பின்வாங்கும் அளவுக்கு களநிலையும் படையினருக்கு சாதகமாக இருக்க வில்லை. ஆனையிறவு கட்டளைப் பீடத்தின் உத்தரவுகளுக்கு கட்டுப்படும் நிலையில் சண்டையின் தன்மை இருக்கவில்லை. அந்தளவுக்கு உள் நுழைந்த பகையணிகள் சின்னா பின்னமாகின. திக்குத்திசை தெரியாது அணிகள் சிதைந்தன. இந்த நிலையில் தப்பிப்பிழைக்க ஓடுவதுபோல உள்நுழைந்த படையினர் தலைதெறிக்க தமது தளம் நோக்கி திரும்பி ஓடினர்.

இந்தச் சண்டையின் போதும் 35 இராணுவச் சடலங்களை புலிகள் கைப்பற்றினர். இந்த உடலங்களில் கெமுனுச் சடலங்களே அதிக மானவையாகும்.

இரண்டாம் வருட ஜயசிக்குறுய் சண்டைகளை படைத் தலைமை தீவிரமான முறையிலேயே நடாத்த முனைகின்றது.

ஒரு வருட வயதை ஜயசிக்குறுய் அடைந்ததில் இருந்து இன்று வரையான இரண்டு மாத காலத்திலும் (மே, 13-ஜூலை 13, 98) நடந்த சண்டைகளை அவதானித்தால் சண்டை யின் தீவிரத்தன்மை புலப்படும்.

இந்த இரண்டு மாதச் சண்டைகளிலும் -படைத் தலைமை-பல்வேறுபட்ட நகர்வு உத்திகளையும்-தாக்குதல் உபாயங்களையும் கையாண்டுள்ளது.

புலிகளின் முன்னரங்கங்களை - வெற்றி கொள்வதற்கான நகர்வு முறைகளாக அது மரபுவழி நகர்வுகளையும்-மரபுவழியற்ற நகர்வுகளையும் பயன் படுத்தியது. மரபுப்போர் ஆயுதங்களை உபயோகித்தும் -சிறு ஆயுதங்களை பயன்படுத்தியும் சண்டைபோட்டது.

மே, 28ஆம் திகதி அம்பகாமம் தாக்குதல் மரபுவழியற்ற நகர்வாக இருந்த அதேவேளை, யூன் 4ஆம், 8ஆம் திகதிகளில் நடந்த கிளிநொச்சி சண்டைகள் மரபுவழி நகர்வு முறைகளைக் கொண்டிருந்தன.

இந்த வகைத் தாக்குதல் முறைகளை படையினர் குறுகிய கால இடைவெளிக்குள் இரு சமர் முனைகளிலும் (மாங்குளம்-அம்பகாமம்) அடுத்தடுத்து பயன்படுத்தியது, சண்டை யின் முக்கிய இராணுவ அம்சமாகும்.

எனினும், படைத் தலைமையின் இந்தப் புதிய தாக்குதல் திட்டங்களையும்-தந்திரோபாயங்களையும் வெற்றிகரமாக முறியடித்த புலிகள் இயக்கம், சமரின் போக்கை இன்றுவரை தன்வசம் வைத்திருக்கின்றது.

கிளிநொச்சி முன்னரங்கைத் தாக்கியது போல, ஒரு நேரடித் தாக்குதலை மாங்குளம் நகரை நோக்கிட 20-6-98 அன்று படையினர் நடாத்தினர்.

கண்டி வீதியில் அமைந்துள்ள மாங்குளம் சந்தியின் முன்னரங்க நிலைகளுக்கு பாதுகாப்பாக அங்கிருந்து சில கிலோ மீற்றர்கள் முன்னே அமைக்கப்பட்ட காப்பு நிலைகள் அமைந்திருந்த பகுதி மீது பகைவன் ஒரு நேரடித் தாக்குதலைத் தொடுத்து இருந்தான். இரண்டு நாட்கள் சண்டைகள் தொடர்ந்து நடந்தன. ஒரு சில காப்பு நிலைகளை மேவியதைத் தவிர சிங்களப் படைகளால் எதையும் சாதிக்க முடியவில்லை.

மாங்குளம் சந்தியின் முன்னரங்கத்தைப் பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்ட காப்பு நிலைகளை பாதுகாக்க நடந்த இரண்டு நாள் சண்டையில் 32 புலிவீரர்கள் வீரச்சாவடைந்தனர். அதேவேளை, 50ற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர். சுமார் 200 பேர் உடற்சேதத்திற்கு உள்ளாகினர்.

வன்னிக்களம், உண்மையில் எல்லா விதமான தரை அமைப்பையும் தன்னகத்தே கொண்டிருக்கும் ஒரு வித்தியாசமான பொருது களமாகவே காணப்படுகின்றது.

அடர்ந்த காடுகள் சார்ந்த இடங்களும் உண்டு. புதர்கள் கொண்ட சிறுகாடுகளும் உள்ளன.

வெறும் நிலங்களும்-வயல் பரப்பு களுமென பரந்த வெளியைக் கொண்ட தரையும் உண்டு.

வான் தாக்குதலைப் பொறுத்தளவில் இலக்குகளை துல்லியமாகத் தாக்கக் கூடிய வாய்ப்புகளைக் கொண்ட நில அமைப்பு உண்டு.

வன்னியின் இந்த தரையமைப்பை தனக்கு சாதகமாக்கி சண்டையை நடாத்தக் கூடிய கருவி வளங்களை (ராங்க்குகள்-பீரங்கிகள்-வேவு விமான ங்கள்-கிபீர்கள்) சிங்கள அரசு வைத்திருக்கின்றது. எனினும், அதனால் சமர் முனையில் வெற்றிகளைப் பெற இயலவில்லை.

போரியல் தந்திரங்களிலும்-போர்த் திறனிலும்-ஆட்பலத்திலும் புலிகள் இயக்கம் பாரிய வளர்ச்சிகண்டு வருகின்றது என்பதையே இந்த இராணுவ பரிமாணம் புலப்படுத்து கின்றது.

***நன்றி - விடுதலைப் புலிகள்***

# சகாப்தம் படைத்த ஸ்ராலின்கிராட்

## 12



மார்ஷல் சுய்க்கோவ்

**போ**ர்க்களத்தில் தகவல்கள் முன்னணியிலிருந்து டிவிஷன் தலைமை யகத்தின் வழியே படையின் தலைமையகத்தை அடைய ஒரு மணிநேரம், அல்லது சில சமயங்களில் அதற்கு அதிகமாக ஆகியதென்றால் நகர சண்டையில் இது அனுமதிக்கத்தகாததாக இருந்தது.

போர்க்களத்தில் ஒரு மணி நேர சண்டையில் அதுவும் இரவில் 2–3 கி.மீ. தூரம் முன்னேறும் எதிரியால் தற்காப்பில் ஓரிரு வடுக்களை மட்டும் ஏற்படுத்த முடிந்தது. நகரத்திலோ ஒரு சில இடங்களில் தற்காப்பு வரிசையின் ஆழம் சில நூறு மீட்டர்கள் மட்டுமே இருந்தது. இங்கே எதிரி இதே வேகத்தில் முனனேறுவது பேரழிவைக் குறித்திருக்கும். எதிர்பாரா நேரத்தில் தாக்குதல் தொடுக்கும் வாய்ப்பை எதிரிக்கு அளிக்காமலிருக்க எதிரியின் திட்டங்களை நாங்கள் முன்கூட்டியே அறிய வேண்டியிருந்தது. இதற்கு ஆயுதங்களை எப்போதும் பயன்படுத்தத் தக்க நிலையிலும் துருப்புகளை எந்த நிமிடத்திலும் துல்லியமான, விரைவான தாக்குதலுக்குத் தயாரான நிலையிலும் வைத்திருக்க வேண்டியிருந்தது. வேவுப் பிரிவுகள், புறக்காவல் அரண், கண்காணிப்பு மையங்கள், வோல்காவின் மறுகரையில் நிறுத்தப்பட்டிருந்த பீரங்கிப் பிரிவு, சேமப் பிரிவுகள், யூனிட்டுகளின் கமான்டர்கள், சகலவித ஆதரவு மற்றும் சப்ளை பிரிவுகள் ஆகியவற்றுடன் நல்ல தொடர்பு இல்லாமல் இந்தப் பணிகளை நிறைவேற்ற முடியாது. திட்டவட்டமான, இடையறாத தொலைபேசி, கம்பியில்லாத் தொலைபேசித் தொடர்பும், நன்கு ஆழ்ந்து சிந்திக்கப்பட்ட ஒளி அடையாள சமிக்ஞைகளும் தான் துருப்புகளின் செயல்முறைத் தலைமைக்கு உதவும், எதிரியின் தாக்குதலை முந்திக் கொண்டு முன்னால் செயல்பட வகை செய்யும்; பல நேரங்களில் எதிரி எங்கள் நிலைகளை அணுகிய போதே, எதிரியின் துருப்புகள் குவிந்திருந்த இடத்திலேயே, எதிரி துருப்புகளும் டாங்கிகளும் மறைவிடத்திலிருந்து வெளிவந்த போதே எதிரியைத் தாக்கினோம். தகவல் தொடர்பின்றி துருப்புகளை எங்களால் நிர்வகிக்க முடிந்திருக்காது. சாதாரண அல்லது மார்டர் பீரங்கியை உரிய தருணத்தில் திருப்பியிருக்க முடியாது. ஆபத்தான இடத்திற்கு எதிரியைத் தாக்க விமானப்படையையும் மற்ற சாதனங்களையும் அனுப்பியிருக்க முடியாது.

டிவிஷன்கள் மற்றும் படையின் கட்டளை மையங்கள் வோல்காவின் வலது கரையில், தற்காப்பின் முன்னணியிலிருந்து 300–1,000 மீட்டர்களில் இருந்தன. துருப்புகளுக்கு இவ்வளவு அருகில் நிர்வாக உறுப்புகள் இருந்ததால் எல்லா மட்டங்களிலுமிருந்த கமான்டர்களால் சண்டையின் போக்கையும் நில்வரத்தில் ஏற்படும் மாற்றங்களையும் உடனுக்குடன் கவனித்து உரிய தருணத்தில் முடிவுகளை எடுக்க முடிந்தது. உயர்மட்ட மேலாளர்கள் தமக்குக் கீழுள்ளவர்களுடன் தனிப்பட்ட முறையில் கலந்து பழகியதுதான் மிகவும் பயன் தந்த நிர்வாக முறையாக இருந்தது. ஆனால், இதனால் தொலைபேசி மற்றும் கம்பியில்லாத் தொலைபேசியின் முக்கியத்துவம் மறைந்துவிட்டது என்று பொருளாகாது. அவற்றின் இடையறாப் பணிக்கு ஏற்பாடு செய்வது மிகவும் கடினமானதாக இருந்தது.

கட்டளை மையங்கள், தகவல் தொடர்பு கம்பியிருந்த இடங்கள் அகியவற்றின் மீது இடையறாமல் குண்டுகள் வீசப்பட்டதால், அதுவும் விமானக் குண்டு வீச்சுகள் நடைபெற்றதால் தொலைபேசிக் கம்பிகள் முடிவின்றி எரிந்தன; அறுபட்டன; தகவல் தொடர்புப் பிரிவுகளுக்குப் பேரிழப்புகள் ஏற்பட்டன. வோல்கா வரை 62வது படை மும்முறை துண்டிக்கப்பட்டது. ஒரே நேரத்தில் மூன்று தனித் தனியிடங்களில் அது போரிட வேண்டி வந்தது. எதிரி குண்டுவீச்சின் பெரும் தாக்கத்தால் படையின் கட்டளை மையத்தில் வலுவான கம்பியில்லாத் தொலைபேசி சாதனங்களை வைத்திருப்பது இயலாததாயிருந்தது. துருப்புகளின் பின்னணியில் இருந்த பரவலான நீர்ப்பரப்பும் பெரும் தடையாக விளங்கியது.



படைத்தலைமையக மேலாளர் நி. இ. கிரிலோவ் தகவல் தொடர்பு பிரிவின் மேலாளர் கர்னல் – பின்னர் இவர் ஜெனரலானார் – எம். பி. யூரின் ஆகியோரின் கவலை நிரம்பிய முகங்கள் இப்போதும் என் மனக் கண்ணில் நிழலாடுகின்றன. இவர்கள் இரவு பூராவும் வரைபடங்கள், தேசப்படங்களின் முன் அமர்ந்தபடி தகவல் தொடர்பை எப்படி ஒழுங்கமைப்பது, துருப்புக்களை எப்படி நிர்வகிப்பது என்பவற்றில் மூழ்கியிருந்தனர்.

படையின் தலைமையகம் 5 தடவைகள் தன் கட்டளை மையத்தை இடம் மாற்றியது. அதாவது, இடையறா குண்டு மழைக்கிடையில் 5 தடவைகள் துருப்புக்களுடனான தகவல் தொடர்பு மாற்றியமைக்கப்பட்டது என்று இதற்குப் பொருள்.

புல நேரங்களில் ஒரே கம்பியில் 2–3 டிவிஷன்கள் இணையாக இணைக்கப்பட்டன. நிலையான தகவல் தொடர்பிற்காக இந்த டிவிஷன்கள் துணை மையங்களுடன் இணைக்கப்பட்டன. இவற்றுடனான தொடர்பு மூடிய வட்ட முறையில் ஏற்படுத்தப்பட்டது.

முக்கிய கண்காணிப்பு மையங்களிலும் எல்லா துணை மையங்களிலும் அவசர பணிக்குழுக்கள் தோற்றுவிக்கப்பட்டன.

கம்பித் தொலைபேசியோடு கூட சாதாரணமாக கம்பியில்லா தொலைபேசித் தொடர்பும் நிலவியது. மாலுமிகள் அடையாளக் கொடிகளையும் பயன்படுத்தினார்கள்.

படையின் முக்கிய தகவல் தொடர்பு மையத்தில் அதிக சக்தியில்லாத தகவல் தொடர்பு சாதனங்கள் இருந்தன. இம்மையம் கட்டளை மையதிற்கு வெகு அருகிலிருந்தது. சக்தி மிக்க சாதனங்களையுடைய துணை மையமோ மறுகரையில், படைத் தலைமையகத்திலிருந்து 10 கி.மீ. தொலைவில் அமைக்கப்பட்டிருந்தது. இதன் மூலம் தான் சேனையின் தலைமையகம், விமானப்படை மற்றும் பின்னணியுடன் தொடர்பு கொள்ளப்பட்டது.

உடனுக்குடன் செயல்பட எல்லாத் தகவல் தொடர்பு சாதனங்களிலும் ஒலிபெருக்கியைப் பயன்படுத்த நேரிட்டது. இதில், எங்களுடைய நடவடிக்கைகளைப் பற்றி எதிரி தெரிந்து கொள்ளாதவாறு மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டியிருந்தது.

கம்பியில்லாத் தொலைபேசி நம்பகமான தகவல் தொடர்பு சாதனமாயிருந்தது. சில சந்தர்ப்பங்களில் இது மட்டுமே ஒரே வழியாயிருந்தது. உதாரணமாக, கரோஹவ் குழுவுடனும் 13வது டிவிஷனுடனும் பெரும்பாலும் இப்படித்தான் தொடர்பு கொள்ளப்பட்டது.

62வது படையின் தகவல் தொடர்பு வீரர்கள் நிறைவேற்றிய இன்னுமொரு மிகக் கடினமான பணியைப் பற்றி இங்கே குறிப்பிட்டாக வேண்டும். வோல்காவின் அடியில் கம்பிகளை அமைத்ததுதான் அப்பணியாகும். படையிடம் இதற்கான விசேஷ வசதிகள் எதுவும் இருக்கவில்லை. படையின் கட்டளை மையத்திற்கும் வோல்காவின் கிழக்குக் கரைக்கும் இடையில் தொடர்பை ஏற்படுத்த சாதாரண தொலைபேசிக் கம்பியைத்தான் பயன்படுத்த வேண்டி வந்தது. மறுகரையில் படைத் தலைமையகத்தின் ரிசர்வ் கட்டளை மையம் இருந்தது. இதன்மூலம் தான் பக்கவாட்டுப் பகுதிகளிலிருந்த துருப்புகளும் பீரங்கிப் பிரிவும் மற்றும் பின்னணியும் நிர்வகிக்கப்பட்டன. அக்டோபரில், அதாவது கடுமையான சண்டைகளின் உச்ச கட்டத்தில், நகரத்தின் மத்தியிலும் தொழிற்சாலைப் பகுதியிலும் இயங்கிய துருப்புகளை நிர்வகிக்கவும் இம்மையம் பயன்படுத்தப்பட்டது.

கம்பியில் எடையைக் கட்டி அதை நீரடியில் இறக்கி அது ஆற்றின் அடித்தளத்தில் அப்படியே இருக்குமாறு செய்தனர். ஆனால், 3–4 நாட்கள் கழிவதற்குள்ளாகவே புதிய தகவல் தொடர்பு கம்பிகளை அமைக்கும் கட்டாயம் ஏற்பட்டது. நகரத்தில் சண்டைகள் ஆரம்பமானதிலிருந்து இறுதிவரை இப்படித்தான் நடந்தது.

வேவுவீரர்கள்! அஞ்சா நெஞ்சம் கொண்ட இவ்வீரர்களின் அற்புதமான தியாகங்களை எழுத்தில் வடிக்க காகிதம் போதாது. ஸ்டாலின்கிராட்டைப் பாதுகாத்து நின்றவர்களின் புகழ் மிகு வரலாற்றில் இவர்களின் பங்கு மகத்தானது.

எதிரி, எதிரியிருக்குமிடம், எதிரியின் திட்டங்கள், பலம், வாய்ப்புகள் ஆகியவற்றைப் பற்றி துல்லியமாக அறிந்திருப்பது என்றால், சண்டை எப்படி நடக்கும் என்று தெளிவாக கணிக்க முடியும். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சரியான முடிவெடுக்கும் வாய்ப்பு கிட்டும். அதன் மூலம் வெற்றிக்கு அடித்தளமிட முடியும் என்று பொருள். ஏனவேதான் ஸ்டாலின்கிராட் சமரின் போது நாளையும், இன்னும் ஒரு வாரம் கழித்தும் மட்டுமல்ல, எந்த ஒரு தருணத்திலும் எதிரி என்ன செய்யப்போகிறான் என்பதை அறிய உதவும் விவரங்களை வேவுப் பிரிவு சேகரிக்க வேண்டியிருந்தது. அப்போது தான் ஒருபோதும் திடுக்கிட்டு நிலை குலையாமலிருக்கலாம்.

எதிரியின் திட்டங்களைத் தவிடு பொடியாக்க வல்ல நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். எங்களுடைய சூழ்நிலைகளில் இப் பணியை நிறைவேற்றுவது கடின மானதாக, கிட்டத்தட்ட இயலாததாக இருந்தது. போர் வரிசைகள் மிகவும் நெருக்கமானவையாக இருந்தன.

**தொடரும்......**

# சிறிலங்காவின் சகல வளங்களும் யுத்தத்திற்கே ஆனால் அத்தனையும் அழிவுக்கே

சிறிலங்காப் பொலிசாருக்கு இராணுவப் பயிற்சி அளிக்க பாதுகாப்பு அமைச்சு திட்டமிட்டுள்ள அதேவேளை, பொலிசாரின் சம்பளத்தை 70 சதவிகிதத்தினால் அதிகரிப்பதற்கு சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அனுமதியளித்துள்ளதாகவும் தகவல்கள் கூறுகின்றன. பொலிசாருக்கு இராணுவப் பயிற்சி அளிப்பது என்பதும் அவர்களை யுத்த முனையில் இல்லாதுவிடினும் யுத்தப் பிரதேசத்தில் பயன்படுத்துவது என்பதும் பாதுகாப்பு அமைச்சின் நீண்டகாலதிட்டமாகவே இருந்து வருகின்றது. இதற்கு ஏற்ற விதத்தில் ஜனாதிபதி சந்திரிகா இவ்வருட இறுதிக்குள் மேற்கொள்ளவுள்ள இராணுவக் கட்டமைப்பு மாற்றத்துடன் பொலிஸ் படையும் பாதுகாப்பு அமைச்சின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் அதாவது கூட்டுப்படைத் தலைமையகத்தின் கீழ் கொண்டு வரப்படலாம் எனவும் நம்பப்படுகிறது.

சிறிலங்கா அரசு இவ்வாறான நடவடிக்கையை மேற்கொள்ளுவதற்கு ஆயுதப்படைக்கு ஆட்சேர்க்கும் முயற்சியில் தொடர்ச்சியாக ஏற்படும் பின்னடைவுகளே காரணமாகும். அதாவது இராணுவத்திற்கு கடந்த சில வருடங்களாக ஆட்சேர்க்க அரசாங்கம் எடுத்த முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்ததைத் தொடர்ந்து இந்த நடவடிக்கையில் அரசாங்கம் தீவிரம் காட்டத் தொடங்கியுள்ளது எனலாம். அதேவேளை ஊர்காவற் படையினரை இயன்றவரையில் பயன்படுத்திக் கொள்ள அரசாங்கம் முயற்சித்து வருகின்றது. அதன் ஓர் அங்கமாக குறுங்கால இராணுவப் பயிற்சியும், ஏ.கே. ரக தானியங்கித் துப்பாக்கிகளையும் பாதுகாப்பு அமைச்சு வழங்கி வருகின்றது. சந்திரிகா அரசாங்கத்தின் இந்த நிலைப்பாடானது இனப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காணும் முயற்சியில் அது காட்டும் அக்கறையின் அல்லது தீவிரத்தின் வெளிப்பாடு என்றே கூறவேண்டும். இல்லாவிடில் கட்டுக் கடங்காது சென்றுவிட்ட இராணுவச் செலவீட்டைப் பொருட்படுத்தாது அரசாங்கம் இவ்வாறு இராணுவப் படையினரையும் பொலிசாரையும் பலப்படுத்தும் முயற்சியில் இறங்கியிருக்காது. ஏற்கனவே யுத்தத்திற்கும் பெரும்தொகை நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் இதனால் அபிவிருத்திப் பணி பாதிக்கப்படுவதாகவும் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார். அவரின் அறிவிப்பின்படி வருடாந்தச் செலவீட்டில் யுத்தத்திற்கு 30 சதவீதம், அபிவிருத்திக்கு 20 சதவீதம் என்ற ரீதியில் செலவீடு செய்யப்படுகின்றது. அதைத்தவிர அரச ஊதியம் எனவும் ஓய்வூதியம் எனவும் பெரும்தொகை செலவிடப்படுகிறது எனவும் அவர் தெரிவித்தார்.

இதேசமயம், சிறிலங்காவில் பெரும் தொகையான நிதி அரச ஊழியர்களை சம்பளமாக சென்றடைகின்றது, அது கட்டுப்படுத்தப்பட வேண்டும் என சிறிலங்காவுக்கு உதவும் சர்வதேச நிதி அமைப்புக்களும் அறிவுறுத்தி வருகின்றன. இதனை ஜனாதிபதி சந்திரிகா கூட அண்மையில் வெளியிட்டிருந்தார். உலகிலேயே உழைக்காமல் ஊதியம் பெறும் மக்கள் சிறிலங்காவில்தான் உயர்வாக உள்ளனர் என்றார். இது பலரின் கண்டனங்களுக்கு உள்ளாகியிருந்தது. ஆனால், அவ்வாறு பேசிய சந்திரிகா தற்போது பொலிசாருக்கு எழுபது சதவீத சம்பள உயர்வை அறிவித்துள்ளார். ஏற்கனவே பொலிசார் உட்பட சிறிலங்கா ஆயுதப் படையினரது சம்பளமானது மிக மிக அதிகமானது எனச் சகலரும் அறிந்ததே. சாதாரணமான ஒரு சிறிலங்காச் சிப்பாய் ஒரு பட்டதாரியின் சம்பளத்தை விட உயர்வான சம்பளத்தைப் பெற்றுக் கொள்கிறான். இதேரீதியில் சந்திரிகா அரசாங்கம் தனது முழு வளத்தினையும் பயன்படுத்தியாவது யுத்தத்தில் வெற்றி பெற வேண்டும் ஏன்ற ரீதியில் முழுமுயற்சியில் ஈடுபடுகின்றது. ஆனால் ஏற்கனவே யுத்தத்தில் பெருந்தொகை வளத்தையும் தனது ஆட்சிக் காலத்தின் மூன்றின் இரண்டு பகுதியையும் செலவு செய்துள்ள சந்திரிகா அரசாங்கம் இதனால் பெறப்போகின்ற பயன் நிச்சயமாக அழிவைத் தவிர வேறொன்றாகவும் இருக்கப் போவதில்லை. ஏனெனில், யுத்தத்தில் சிங்கள ஆட்சியாளர்கள் எவருமே எப்பொழுதுமே வெற்றி பெற்றுவிட முடியாது. ஏனெனில் தமிழ் மக்கள் தமது உரிமைக்காக எதையும் சந்திக்க ஏற்கனவே தயாராகி விட்டனர். ★

அதாவது, ஆட்சியாளர்கள் மாறியுள்ளனரே தவிர ஒடுக்குமுறைகள் ஒழியவில்லை. ஆட்சி அதிகாரத்தைப் பெற்றபின் அதனை ஒடுக்குமுறைக்குப் பயன்படுத்தாமல் அவர்கள் இருக்கப் போவதில்லை. ★

# செய்தித் தணிக்கை அமுலாக்கல்களும் பொறுப்புணர்ச்சிக் குற்றச்சாட்டுகளும்

"இராணுவச் செய்திகள் மீதான தணிக்கையை அரசாங்கம் நீக்க வேண்டுமானால் வெகுசனத் தொடர்புத் துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் தமது பொறுப்புணர்ச்சியைத் தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டும்" என்று ஜனாதிபதி சந்திரிகா கூறியுள்ளார். இது செய்தித் தணிக்கை நீக்கப்படுவதற்கான சாத்தியப்பாடுகள் இல்லை என்பதை வெளிக்காட்டும் அறிவிப்பாகவே கொள்ளக்கூடியதாகும். ஜனாதிபதி சந்திரிகா ஆட்சிக்கு வரமுன்னர் வெகுசனத் தொடர்புத் துறையுடன் மிக நெருக்கமாகவே இருந்தார். இதில் 17 வருடகாலமாக ஆட்சியில் இருந்த ஐ.தே.கட்சியின் ஆட்சியை ஒழித்து சந்திரிகாவின் பொ.ஐ.முன்னணியை ஆட்சிக்குக் கொண்டு வருவதில் வெகுசனத் தொடர்புச் சாதனங்களுக்கும் பங்குண்டு. அப்போது வெகுசனத் தொடர்புத் துறையின் செயற்பாடுகளுக்கு சந்திரிகாவிடம் போதுமான வரவேற்பும் இருந்தது.

ஆனால், செய்தித் தொடர்புத் துறையினர் அன்று ஐ.தே.கட்சிக்கு எதிராக தமது கண்டனங்களைத் தெரிவித்தபோது அவை உயிருக்கு அச்சுறுத்தல் எழக்கூடிய அபாயத்தை விளைவிக்கக் கூடியனவாகவும் இருந்தது. அப்படியிருந்தும் வெகுசனத் தொடர்புத் துறையினர் ஐ.தே.க. ஆட்சிக்கு எதிராகப் பலமாகக் குரல் கொடுத்தனர்.

அவ்வாறு செயற்பட்ட பத்திரிகைகள் ஐ.தே.கட்சியில் உள்ள ஊழல் மோசடிகளை மட்டுமல்ல சூரியகந்த புதைகுழி விவகாரத்தில் இருந்து இராணுவ பீடத்திற்குள் காணப்படும் முரண்பாடுகள், நடந்துகொண்டிருந்த போர் குறித்த விமர்சனங்கள் எனப் பலவற்றையும் ஆராய்ந்தோடு இவற்றுள் அரசு விடும் தவறுகள் குறித்தும் விமர்சனம் செய்தன. இவ்வாறாக நடந்தகொண்ட பத்திரிகைகளே இன்று பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொள்ளவில்லை எனச் சந்திரிகாவினால் குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ளன. அவ்வாறானால் முன்பு பொறுப்புணர்வுடன் நடந்துகொண்ட வெகுஜனத் தொடர்பு நிறுவனங்கள் எவ்வாறு பொறுப்புணர்வை இழந்தன?

ஜனாதிபதி சந்திரிகாவின் குற்றச்சாட்டின் பிரகாரம், பொறுப்புணர்வு அற்ற ரீதியில் வெகுசனத் தொடர்பு நிறுவனங்கள் தகவல்கள் வெளியிடுவதானது இராணுவ ரகசியங்களை புலிகள் அறிந்து கொள்ள வாய்ப்பாக இருக்கிறது என்பதாகும். ஆனால் இது எத்தனை தூரம் உண்மையானது? கொழும்பில் இருந்து வெளிவரும் எந்தப் பத்திரிகையிலோ அன்றி இராணுவ ஆய்வாளர்களோ சரி இராணுவ செயற்பாடுகள் குறித்து திறந்த மனத்துடன் விமர்சனங்களை முன்வைக்கின்றனவா?

சகல பத்திரிகையாளர்களும் சரி, இராணுவ ஆய்வாளர்களும் சரி யுத்தம் குறித்து இராணுவத் தரப்பு வழங்கும் புள்ளிவிபரங்கள் என்பனவற்றின் அடிப்படையிலேயே செய்திகளை வெளியிடுகின்றன.

இந்த நிலையிலும், வெகுசனத் தொடர்புத் துறையினர் தமது பொறுப்புணர்ச்சியை நிரூபிக்குமாறு கோரப்படுகின்றனர். இது வெகுசனத் தொடர்புத் துறையினர் ஒட்டுமொத்தமாகவே தம்மைத் திருப்திப்படுத்தக் கூடிய நிலையில் நடந்து கொள்ள வேண்டுமென பொ.ஐ.முன்னணி அரசாங்கம் எதிர்பார்க்கப்படுவதாகவே அர்த்தப்படும்.

பொ.ஐ.முன்னணியின் இந் நிலைப்பாடானது, பத்திரிகைச் சுதந்திரத்தை பணயப் பொருள் ஆக்குவதாக உள்ளது. ஆனால், இத்தனைக்கும் சந்திரிகாவோ ஆட்சிக்கு வருமுன் பத்திரிகைச் சுதந்திரம் பற்றியும் கருத்துச் சுதந்திரம் பற்றியும் நிரம்பவே பேசியவராகும். இதேசமயம், மேற்கு நாட்டில் கல்வி கற்ற சந்திரிகா குமாரதுங்க வெகு சனத் தொடர்பு சாதனங்களின் சுதந்திரத்தை மதிப்பார் என இத்துறையைச் சார்ந்தவர்களால் நம்பப்பட்டது. ஆனால் ஆட்சிக்கு வந்தபின்னர் சந்திரிகா முன்னைய ஆட்சியாளர்களைப் போலவே நடந்து கொண்டார். அதாவது ஆட்சிக்கு வரும்வரையில் கருத்துச் சுதந்திரம் பற்றியும் ஜனநாயக உரிமைகளைப் பற்றியும் பேசும் எதிர்க்கட்சிகள் ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர் முன்னைய ஆட்சியாளர்களைப் போலவே நடந்து கொள்கின்றனர். எடுத்துக் காட்டாக எழுபதுகளில் சிறிமாவோவின் ஆட்சிக் காலத்தின்போது கருத்துச் சுதந்திரம் நசுக்கப்படுவதாகப் பிரச்சாரம் செய்துவந்த ஐ.தே.கட்சி 17 வருட ஆட்சிக் காலத்தில் தானும் அதையே செய்தது. இன்று ஐ.தே.கட்சியைக் குறைகூறி ஆட்சிக்கு வந்தவர்களும் அதையே செய்கின்றனர்.

## மரித்த பின்னும்.......

யூட்டைச் சுற்றியிருக்கும் கூட்டம் குறைவதில்லை. நகைச்சுவைக்கு அவன் நாவுதான் விளைபூமி. இருப்பு நிச்சயமல்ல என்ற ஏக்கத்தின் இடைவெளிகளைச் சிரிப்பும் சிந்தனையும் கொண்டு நிரப்புவான். அழுகை அவன் அகராதியில் இல்லையென்றாலும், இரக்கம் அவன் இயல்புகளில் ஒன்று. ஒழுக்கம் வழுக்கத் தொடங்கும் இடங்களில் தண்டிப்பதற்கும் அவன் தயங்கியதில்லை. கடமைகள் மீறப்படுவதை அவன் கடுகளவும் மன்னித்ததில்லை. உரையாடலை எடைபோட்டே உள்ளத்தைப் புரிந்து கொள்வான். பலவீனங்களைக் கூட பயமின்றி ஒத்துக் கொள்வான். கண்ணுக்குள் பார்வையிட்டு கற்பனையைக் கிரகிப்பான். உழைப்பும் உண்மையும் அவனது நம்பிக்கைக்குரிய ஆயுதங்கள். தவறுகளை எப்போதும் தப்பாமல் ஏற்றுக் கொள்வான். ரோசமும் கோபமும் அவனது நிலையான கையிருப்பு. துணிச்சலை அவன் தூளியில் ஆடும்போதே தேடி வைத்திருக்க வேண்டும். அறிவு அவனோடு இருப்பதற்காய் பெருமைப்பட வேண்டும். அவனது ஆன்மா கம்பீரமானது. அதிலே ஊனமில்லை. கூனவில்லை. அதனால் அவனது கருத்துக்களின் வீரியம் கதிரொளியைப் போலிருந்தது. எங்கள் பிராந்தியத்தின் எதிரி முகாம்களுக்கெல்லாம் அவன்தான் தார்மீகப் பொறுப்பாளன். எந்தெந்த அதிகாரிக்கு எப்போதெப்போது லீவு? இப்போது போய் வந்தால் மறுபடி எப்போது? எவனுக்குத் தெரியாவிட்டாலும் இவனுக்குத் தெரியும். குண இயல்பு தொடக்கம் குடும்பச் சண்டைவரை அத்தனை விவகாரங்களும் அத்துப்படி இவனுக்கு. விளையாட்டோ விருந்தோ வேறுவகைக் கூட்டமோ, களியாட்டமோ, பயணமோ அனைத்தும் அறிவான். இவனது அனுமானங்கள் செயலானபோது வெகுமானங்கள் ஆயின. கொட்டில் கட்டியிருக்க விரும்பினால் எதிரியின் வட்டின் மேலே கைவைக்க வேண்டும் என்ற வரலாற்றுக் கொள்கை இவன் வாய்வழி உதிர்ந்ததுதான். மூன்றாம் கட்டப் போரில் அது முற்றிலும் நிரூபணம் ஆயிற்று. மனவியல் சார்ந்த போரியல் அறிவில் மட்டில்லாப் புலமை கொண்டவன். தோல்விகள் வெற்றிகளின் இடைவெளிகள்

தொடர்ச்சி 13 ம் பக்கம் —

# ஒரு நாள்

அது 19-07-97. பெரியமடு என்னும் அக்கிராமம் தன் குடிமக்களைப் பிரிந்து, போராளிகளை அரவணைத்தவண்ணம் விடிகிறது. கண்டி வீதிக்குக் கிழக்கேயும் நெடுங்கேணி வீதிக்கு வடக்கேயும் அமைந்திருக்கிறது அது. சுமார் நூறு குடும்பங்களையே தன்னில் கொண்டிருந்திருக்கும். அதில் இருந்து இரண்டு மைல் தொலைவில் நைனாமடு என்னும் இடத்தில் போராளிகளும் ஜயசிக்குறுய் இராணுவமும் அடிக்கடி கைகலந்து கொண்டிருக்கின்றனர். இரணைமடு அணையில் அலைகள் வந்து மோதுவதைப் போல இராணுவத்தின் முன்னேற்ற முயற்சியும், அதனைத் தவிர்க்கும் புலிகளின் செயற்பாடும் அமைந்துள்ளது. அக்கிராமத்தில்தான் அப்போர்க்களப் பிரதேசத்திற்குரிய பிரதான மருத்துவ முகாம் அமைந்திருக்கிறது. பதுங்ககழிகள், நிலக்கீழ் அறைகள் என பாதுகாப்பு ஏற்பாடுகள் பாரிய குண்டுத் தாக்குதல்களுக்கு முகம் கொடுக்கக் கூடியவகையில் அமைக்கப்பட்டிருக்கிறது. காயங்களுக்கு அவசர சிகிச்சை அளிப்பது, நோயாளிகளைப் பராமரிப்பது, களஞ்சியம் எனத் தனித்தனியாக இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

அன்று காலை வழமைக்கு மாறாக அங்கிருக்கும் போராளிகள் செயலில் உற்சாகம் தென்படுகிறது. முகங்களில் மகிழ்ச்சிப் பிரவாகமெடுக்கின்றது. நேற்று மாலை இவர்கள் இருக்கும் இடத்திற்கு அருகாமையில் கிபிர் குண்டு போட்டது. அதில் எவருமே வீரச்சாவடையவோ அன்றி காயப்படவோ இல்லை. ஆனால் சில வீடுகளைக் காணவில்லை. பல மரங்கள் அகால மரணமடைந்திருந்தன. முறிந்து விழுந்த தென்னை மரங்களில் இருந்து சிதறிய தேங்காய்களை இவர்களில் சிலர் சேகரிக்கிறார்கள். தொதல் செய்யும் முயற்சிகளில் ஈடுபடுகிறார்கள். இந்நிகழ்வு தைப் பொங்கல் போன்ற நாட்களில் அதிக சிறார்கள் இருக்கும் மகிழ்ச்சிகரமான இல்லச் சூழ்நிலையை ஞாபகப்படுத்துகிறது. துன்பங்களும் துயரங்களும் சூழ்ந்த நிலையில் இன்பமாய் இருக்க இவர்களிடம் கற்றுக்கொள்ளலாம். தொதல் தாச்சி அடுப்பில் ஏற்றப்பட்டுவிட்டது. நெருப்பு சுவாலை விட்டு எரிகிறது. இருவர் பச்சைப் பனை மட்டை மூலம் தொதலைக் கிண்டிக் கொண்டிருக்கிறார்கள். அவ்வேளையில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கும் ராஜன் பலமாகக் கேட்கிறான், 'டொக்டர் காய்ச்சல்காரருக்கு தொதல் கொடுக்கலாமோ?'

அப்பொழுது செல் குத்தும் சத்தம் கேட்கிறது. சில வினாடிகளில் எறிகணை மழை பொழிவதற்கான முழக்கமே இது. எல்லோரும் உடனேயே பதுங்ககழிக்குள் செல்கிறார்கள். வழக்கம்போல் நெடுக்காகவும் கிடையாகவும் எறிகணைகள் அப்பிரதேசத்தில் வீழ்ந்து வெடிக்கின்றன. 'சரி இன்று முழுக்க இப்படியே கழியப் போகுது' ஒருவன் சிரித்தபடியே கூறுகிறான். சிறிது நேரத்தில் எல்லாம் ஓய்ந்துவிட்டது. பொந்துகளை விட்டு வெளிவரும் நண்டுகளைப் போல ஒவ்வொருவராக வெளிவருகிறார்கள்.

"அடிப்பிடிக்கப் போகுது, அடிப்பிடிக்கப் போகுது" என்று கூறியபடியே ஓடிப்போன ராஜன், ஒரு மட்டையால் தொதலைக் கிண்டிய வண்ணம் மறு கையால் எரியும் விறகுகளை வெளியால் எடுத்து நெருப்பை அணைக்கிறான். "பதம் சரிவந்திட்டுது" அவன் கூற, மீண்டும் 'கும்.... கும்....' செல் குத்தும் சத்தம் கேட்கிறது. உடனே சுடச் சுட தாச்சியையும் தூக்கிக் கொண்டு பதுங்ககழிக்குள் செல்கிறார்கள். "அடாது செல் அடித்தாலும் விடாது தொதல் கிண்டுவோம்" இவன் பலமாகச் சொல்வது கேட்கிறது. மீண்டும் அமைதி.

வோக்கியில் அறிவித்தல் வருகிறது. "உங்களுக்குரியது வருகிறது." உடனேயே எல்லோரும் காயக்காரரை ஏற்றுக் கொள்வற்காகத் தயாராகின்றார்கள். வில்லிவிருந்து புறப்பட்ட அம்பாய் விரைந்து வந்து கிறீச் என 'பிறேக்' பிடித்து நின்ற சிறு பற்றைபோல் உருமறைக்கப்பட்டிருந்த பிக்கப் வாகனத்தில் இருந்து ஐந்து விழுப்புண்ணடைந்தோர் இறக்கப்படுகிறார்கள். அவர்களுக்கான சிகிச்சைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படுகின்றன. அந் நிகழ்வானது முடுக்கி விடப்பட்ட சில ரோபோக்களின் செய்றபாட்டை ஒத்திருக்கினறது. அதில் ஒரு இயந்திரத் தன்மை காணப்படுகிறது. எனினும் அது அவர்களின் சிறப்புத் தேர்ச்சியை வெளிப்படுத்துகின்றது போலும். பூரண பரிசோதனைக்காக ஆடைகள் மளமளவென வெட்டி அகற்றப்படும்போது அவன் அதை அவதானிக்கின்றான். ஐவரில் மூவரின் அடிவயிறு முழுவதும் வட்டக்கடி (Ring worm) ஆக்கிரமித்திருந்தது. "சே எவ்வளவு கஸ்டப்பட்டாலும் இதை ஒழிக்க ஏலாமல் இருக்கு. என்ன செய்யிறது? குளிசையோ அல்லது பூச்சி மருந்தோ குறைந்தது ஆறு கிழமை தொடர்ந்து பாவிக்க வேண்டும். எல்லோருக்கும் ஒரே நேரத்தில் மருந்து கொடுக்க வேண்டும். போதிய அளவு இல்லை. ஒவ்வொரு நாளும் குளிச்சு, உடுப்புத் தோய்ச்சு காயப்போட்டு சுத்தமாக இருக்க வேணும். கள்முனையில் இது சாத்தியமில்லை. லேசான ஆடைகளை அணியிறதுக்கு இராணுவ உடையின் யதார்த்தம் இடம்கொடுக்காது. காயப்போடுகின்ற உடுப்பும் செல் அடியில் காயப்பட்டுப் போகுது. ஒரு சில கிழமைகளுக்கு மாற்று உடுப்பு வாறதே கடினமாக இருக்கும்" என பலவகையில் எண்ணங்கள் மனதில் ஓட அதனை வெளிக்காட்டாமல் அவன் உயிர்காக்கும் சிகிச்சையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறான். தேவையான சிகிச்சைகள் அளிக்கப்பட்டு உறுதி செய்யப்பட்டதும் மேலதிக சிகிச்சைக்காக பின் தளங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறார்கள்.

சிறிது நேரத்தில் மீண்டும் அறிவித்தல் வருகின்றது. "உங்களுக்குரியது இன்னும் இரண்டு வருகின்றது." வாகனம் வந்தவுடன் இருவரும் வேகமாக இறக்கப்படுகிறார்கள். ஒருவரின் கால் முழங்காலுக்குக் கீழ் சிதைந்து தொங்குகிறது. முகம் வெளிறிக் காணப்படுகின்றது. இரத்தம் பாரிய அளவில் வெளியேறியிருக்க வேண்டும். மற்றவருக்கு மேல் தொடையில் காயம். காலுக்குரிய பிரதான நாடி சேதமடைந்திருக்க சந்தர்ப்பம் உண்டு. எனவே நாடியினை சத்திர சிகிச்சை மூலம் திருத்தியமைக்க வேண்டும். (Vascular surgery). 'குறைந்தது ஆறு மணித்தியாலங்களுக்குள் இவரை அனுப்பி வைக்க வேண்டும். இல்லையேல் கீழ் அவயம் முற்றாக அகற்ற

**- தூயவன் -**

வேண்டியேற்படலாம். ஆனால் முதலாமவருக்கு சரியான முறையில் சரியான முறையில் குருதிப் பெருக்கை நிறுத்திக் கட்டுப்போட வேண்டும் என்றால் என்பை வெட்ட வேண்டும். பூரண மயக்கத்தில்தான அதனைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால், அவர் குறைந்தது ஆறு மணித்தியாலங்கள் பயணிக்க முடியாது. எனவே சாதாரண நோ நிவாரணியுடன் (Pain killer) என்பை வெட்ட வேண்டியதுதான். மேற்படி விடயங்களை கொண்டு உடனே அவன் செயலில் இறங்குகின்றான். நோ நிவாரணி கொடுக்கப்பட்டு இன்னுமொருவரின் உதவியுடன் என்பு வெட்டும் கம்பி வாளினால் சற சறவென என்பை அறுக்கிறான். மற்றவர்களுக்கு வேதனையைக் கொடுக்கும் செயல்களை ஒட்டுமொத்த நன்மை கருதி மேற்கொண்டாலும், செய்பவனுக்கு அது மனவேதனையை ஏற்படுத்துவது தெரிகிறது. காயமடைந்தவன் வலியை உணர்ந்து முகம் சுளிக்கும்போது இவனின் வேகத்தில் தடை ஏற்படுகின்றது. குருதி ஏற்றுதல், மட்டை வைத்துக் கட்டுதல் போன்ற ஏனைய இன்னோரின்ன சிகிச்சைகளை செய்து முடித்தபின்னர் "வாகனத்தில் ஏற்றுங்கோ" அவன் கூறுகின்றான். அப்பொழுது வாகனத்திற்குப் பொறுப்பாக நிற்பவர் "டொக்டர் கொஞ்சம் பொறுக்க ஏலாதோ? இன்னும் இரண்டு கேஸ் வருகுதாம். சேர்த்து ஒரு வாகனத்தில் அனுப்பலாம்தானே..?. "தயக்கத்துடன் வெளிவரும் இக்கேள்வி அவனிற்கு சங்கடத்தை ஏற்படுத்துகின்றது. இதனூடு வாகனங்களின் தட்டுப்பாடு, எரிபொருள் பற்றாக்குறை போன்ற பிரச்சினைகளை ஞாபகமூட்டுகிறான் போலும். "இல்லை இதை உடன் அனுப்பவும், மிச்சத்தை வந்தவுடன் பார்ப்பம்" அவன் பதில் கூற, உடனே வாகனத்தில் காயமடைந்தவர்கள் அனுப்பப்படுகின்றனர். இவன் நேரத்தைக் கணக்குப் பார்க்கின்றான். 'காயமடைந்து மூன்று மணித்தியாலங்கள் கடந்துவிட்டன. இந்த றோட்டில் பயணிக்க நாலு மணித்தியாலங்கள் வேணும். வாகனமோ! முற்றிய தொழுநோயாளிக்கு பிரியமில்லாமல் பணிவிடை செய்பவன் விரல்களைப் போலவே வீதியில் பயணிக்க முடியும். என்ன செய்வது..?. மேற்படி எண்ணியவாறே மீண்டும் வரும் காயங்களை ஏற்க, பொருட்களைத் தயார்படுத்த்ச் சொல்லுகின்றான். பின் அடுத்த வளவினுள் காய்ச்சல்காறர் இருக்கும் வீட்டிற்குச் செல்கின்றான். அங்கு பதினைந்து பேர்வரையில் சிகிச்சை பெறுகின்றார்கள். பத்து பேருக்கு மலேரியா, இருவருக்கு வயிற்றோட்டம். மூவருக்கு சாதாரண காயத்தில் கிருமித் தொற்று ஏற்பட்டு ஒவ்வொரு காலும் யானைக்கால் மாதிரி வீங்கி இருக்கின்றது. மலேரியாவால் பாதிக்கப்பட்டவரில் இருவருக்கு அன்றுடன் மருந்து முடிகின்றது. ஆனால் அவர்கள் பலவீனமாக இருப்பதால் சில நாட்களாவது கட்டாய ஓய்வு எடுக்க வேண்டும். இப்படி எண்ணியபடியே அவன் அவர்களுக்குரிய சிகிச்சைகளை சரிபார்க்கையில், அப்பகுதிப் பொறுப்பாளர் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு இவன் அருகில் வருகின்றார். "டொக்கர் காய்ச்சல் மாறினவர்கள் இருக்கினமோ? ரீம் டமெய்ச்சாக போயிட்டுது, பொசிசன் கவர்பண்ண ஆட்கள் காணாது" எனக் கேட்கிறார். அவனுக்கு சங்கடமான நிலை. உடல் நிலையைப் பொறுத்தவரையிலும் எவரையும் அனுப்ப முடியாது. ஆனால் களநிலையைப் பொறுத்தவரை மருந்து முடிந்த இருவரையும் அனுப்பலாம். என்ன செய்வது?' அவன் யோசித்துக் கொண்டிருக்க அந்த இருவரும் "டொக்டர் நாங்க போறம். எங்களுக்கு மருந்து முடிஞ்சுதுதானே?" கேட்கிறார்கள். "சரி போங்கோ." அரைமனதாய் சம்மதிக்கின்றான். ஏனையோரைப் பார்த்து கவனமாய் இருங்கொ. உங்கட பாதுகாப்புக்கு நீங்கள்தான் பொறுப்பு. பின் தளங்களில் எவரும் காயப்படக் கூடாது என கட்டாய ஓடர் வந்திருக்கு" என இவன் கூறி அவ்விடத்தை விட்டு வெளியில் வரவும், மீண்டும் செல் குத்தும் சத்தங்கள் கேட்க நிலவறை ஒன்றினுள் செல்கின்றார்கள். செல்கள் இவர்கள் இருந்த பகுதிகளிலேயே சரமாரியாக விழுந்து வெடிக்கின்றன. நிலக்கீழ் அறை அதிர்கின்றது.



காயமுற்ற சகபுலிக்கு சோர்வகற்றும் சுடுபானம் தாயின் பரிவோடு தயாரிக்கும் புலிவீரன்.

தொடர்ச்சி 15 ம் பக்கம் —

# சந்திரிகாவின் சமாதானச் சலசலப்பு.... பெரும் இனஅழிப்புக்கான அறிகுறியா??

மாகாணசபைத் தேர்தலைப் பிற்போட்டு, புதிய வான்கலன்களை கொள்வனவு செய்து, யுத்த முன்னெடுப்புக்கு முன்னுரிமைகொடுத்து, தலையாய இராணுவ நடவடிக்கையான ஜெயசிக்குறுவை முழுமூச்சுடன் நடத்திமுடிக்கின்ற வழிவகைகுறித்து சிங்களம் தலையைப் பிய்த்துக்கொண்டு, யோசித்துக் கொண்டிருக்கையில், கடந்த சில தினங்களுக்குமுன், சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா அம்மையாரின், பேச்சுவார்த்தை குறித்த செய்தி, வெளிவந்தது. இந்தச் சூழ்நிலையில் விசித்திரமாகப் பட்டதால், சற்றுக்கூடுதலான கவனத்தை, சந்திரிகா அம்மையாரின் பேச்சுவார்த்தை குறித்த செய்திபெற்றது. செய்தித் தாபனங்களின் தலைப்புச் செய்தியாக அது அலங்கரித்தது.

பாரிய இனஅழிப்புக்கான படை நகர்த்துகையை மேற்கொள்ள, படை பலத்தைப் பெருக்கி படைக்கல ஆயத்தங்களைச் செய்துகொண்டு, பேச்சுவார்த்தைக்கான அறிவிப்பை சந்திரிகா அம்மையார் எப்படி மேற்கொண்டார்? ஏன் மேற்கொண்டார்? என்று அவதானிகள் புருவங்களை உயர்த்தினர். அதிலும் சர்வதேச மத்தியத்துவத்துடன் பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருப்பதாக அவர் தெரிவித்திருப்பதாக வெளிவந்த செய்தியால் சிங்களம் புருவத்தை உயர்த்தியதென்பதைவிட மனம் புழுங்கிக்கொண்டதென்பதே உண்மை.

தமிழ்மக்களைப் பொறுத்தவரை, அவர்களால் இதை விளங்கிக் கொள்ளமுடியவில்லை. தமிழ்மக்களின் தேசியதனித்துவத்தைக் காப்பாற்றி, தமிழீழ தேசிய விடுதலை என்ற இலட்சியஉறுதியை உயிர்மூச்சாய்க் கொண்ட விடுதலைப் புலிகளுடன் பேசுவதென்பதும், அதிலும் சர்வதேச மத்தியத்துடன் அதனை மேற்கொள்வதென்பதும், சிங்களத்தின் தமிழினஅடக்குமுறைக் கோட்பாட்டை ஆட்டம்காணச் செய்துவிடும் என்பதில்

**- சுப்பு -**

சிங்களம் தெளிவாக இருக்கையில் இந்த அறிவிப்பு எப்படி வந்தது? ஏன் வந்தது? என்பதில் தமிழ்மக்கள்கூட குழப்பமடைந்திருக்கலாம்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு விடுதலைப் புலிகளை, இராணுவ ரீதியாகப் பலவீனப்படுத்திய பின்பே ஏற்பட முடியும் என்பது சந்திரிகாஅரசின் நிலைப்பாடு. அதாவது பௌத்த சிங்களப் பேரினவாதம் விரும்புகின்ற தீர்வு என்பது, விடுதலைப் புலிகள் பலமாக இருக்கின்ற நிலையில் சாத்தியமில்லை என்பதே அதன் தாற்பரியம். விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்தினால் மாத்திரமே, தமிழீழத் தேசிய இனம் பலவீனப்படும். அதன்பின்னரே கொடுப்பது எதுவாக இருந்தாலும் ஏற்றுக்கொள்ளும் நிலையைத் தமிழர்கள் அடைவார்கள் என்பது சிங்களத்தின் கணக்கு. இதற்கு சந்திரிகாவும் விதிவிலக்கல்ல.

விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்தல், தமிழ்த்தேசிய இனத்தின் பலத்தை அழித்தல் என்ற பிரதான இலக்கை அடைய மேற்கொள்ளப்பட்ட, ஐக்கிய தேசியக் கட்சி காலத்தில், புலிகளுக்கு இராணுவத்தீர்வு, தமிழ்மக்களுக்கு அரசியல்தீர்வு என்ற கோசத்துடனான இனஅழிப்பு யுத்தம், இன்று அதன் பெயர் மாற்றப்பட்டு, சந்திரிகாவால் சமாதானத் துக்கான யுத்தம் என்ற பெயரில் மேற்கொள்ளப்படுகின்றது.

இதனையே பிரதானப்படுத்தி, சமாதானத்தைத் தோற்றுவிக்க வேண்டுமாகில், புலிகளைத் தோற்கடித்தாகவேண்டும் என, லக்ஸ்மன் கதிர்காமர் உலகம்பூராவும் சென்று, பிரசங்கம் பண்ணுகின்றார். விடுதலைப் புலிகள் அமைப்பு பயங்கரவாத அமைப்பு என, உலகநாடுகள் பிரகடனப்படுத்தவேண்டும் என, கெஞ்சியும் கொஞ்சியும் உருக்கமான வேண்டுகோளையும் விடுத்துவருகின்றார்.

பிரதிப் பாதுகாப்பமைச்சர் ரத்வத்தையோ, ஜெயசிக்குறுவின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, மாகாணசபைத் தேர்தலைப் பிற்போட அமச்சரவைக்குள்ளே பெரும் கலகத்தையே உண்டு பண்ணிமிருக்கின்றார்.

இந்த நிலையில், சந்திரிகா அம்மையார் சமாதானப் பேச்சுவார்த்தைகுறித்தான சமிக்கை செய்வது சந்தேகத்துக்கிடமானது என்ற நிலைப்பாட்டிற்கே, சிறீலங்காவின் அரசியல் இராணுவ நகர்வுகளை அவதானிக்கும் அனைவரும் வரமுடியும்.

சொல்லி வைத்ததுபோல், அடுத்துவந்த நாட்கள், அதனை தெளிவுபடுத்தின. சிறீலங்கா சனாதிபதியின் செயலாளர் பாலபெட்டபெந்தி, சந்திரிகா அம்மையார் ஆகியோர், வெளிவந்த செய்தியில் உண்மையில்லை என மறுத்தனர்.

வெளிநாட்டுச் செய்திநிறுவனம் ஒன்றிற்கு சனாதிபதி சந்திரிகா அளித்த பேட்டியின் வார்த்தைப் பிரயோகங்கள் திரிபுஅடைந்து, பொருள்மாற்றமடைந்துள்ளதாக அவர்கள் அங்கலாய்த்தனர். மூன்றாம் தரப்பு மத்தியத்துவம் என்ற பேச்சுக்கே இடமில்லை என அவர்கள் மீண்டும் அடித்துக்கூறினர்.

இடையில் யாராவது ஒருவர், பேச்சுவார்த்தையை ஆரம்பித்துவைக்கின்ற தொடர்பாளராக அல்லது செய்தி காவுகின்றவராக இருக்கலாம் என்பதே சந்திரிகாஅரசின் நிலைப்பாடு.

சர்வதேச மத்தியத்துவம் என்பது எவ்வளவு வில்லங்கமானது என்பதைச் சிங்களம் நன்கு புரிந்து வைத்திருக்கின்றது. ஒரு இனத்தை அடக்கியாண்டு, அழிவுகள் செய்து, அதன் தேசிய தனித்துவத்தை மறுத்து, அதன் தேசிய அடையாளங்களை அழிக்க போராடிக் கொண்டிருக்கும் பௌத்த சிங்களப் பேரினவாத அரசு, தேசிய இனத்தின் தனித்துவத்தையும், தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையையும் உலகம் ஏற்றுக்கொண்டுள்ள நிலையில், சர்வதேச மத்தியத்துவத்தை எப்படி வரவேற்கும்?

சர்வதேச மத்தியத்துவம் என்பது ஒருபோதும் கிடையாது என சந்திரிகா மீண்டும் உரைத்ததில், சிங்களம் உச்சிகுளிர்ந்திருக்கலாம். இது உள்நாட்டுப்பிரச்சினை, பயங்கரவாதப்பிரச்சினை என சந்திரிகா அரசும் சரி அடுத்துவரும் அரசுகளும் சரி தொடர்ந்து கூறிக் கொண்டிருக்க முடியாது. சர்வதேச மத்தியத்துவம் தேவையா இல்லையா என்பதை, சிங்கள அரசாங்கம் தீர்மானிக்க முடியாத கட்டம் வரும் வரை, அவர்களால் இதைக் கூறிக் கொண்டிருக்கமுடியும். ஆனல் நிலைமை வேகமாக மாற்றமடைந்து வந்து கொண்டிருப்பதும், உலகத்தின் பார்வை பட்டுவிட்ட ஒரு இனப்பிரச்சினை இது என்பதும் மறைக்கமுடியாத உண்மை.

இந்த நிலையில், மிகமோசமான ஆபத்தான சதிநாசகாரவலையொன்று பின்னப்பட்டு, தமிழ்மக்களை நோக்கி அதுவீசப்படத் தயாராக இருக்கின்றது என்பது ஆழ்ந்து அவதானிக்கப்பட வேண்டியுள்ளது.

மாகாணசபைத் தேர்தலை பிற்போட்டு' ஜெயசிக்குறுவை பூர்த்தி செய்ய முன்னுரிமை கொடுக்கப்பட்டமை, வன்னியில் படைபலம் அதிகரிக்கப் பட்டுக்கொண்டிருப்பது, ரத்வத்தையின் இவ்வருட இறுதிக்குள் ஜெயசிக்குறு முழுமைபெறும் என்ற புதிய காலக்கெடு, செய்தித் தணிக்கை தொடர்ந்து அமுலில் இருப்பது, அதற்கிடையில், விடுதலைப் புலிகளால் ஏற்றுக்கொள்ளப்படமுடியாத முன்நிபந்தனையை முன்வைத்து, இடைத்தரகர் ஒருவருக்கூடாக சமானதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபட ஆவல்கொண்டிருப்பதாக சந்திரிகா மேற்கொண்ட புதிய சமாதானச் சலசலப்பு இவையாவும், ஒரு பயங்கரமான செய்தியைக் காவிவருகின்றன. அதாவது, மிகமோசமான தமிழின அழிப்பு ஒன்றுக்கு சிங்களம் தயாராகிவருகின்றது என்பதை மேற்படி சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

சந்திரிகாஅரசின் தலைவிதியோடு குறிப்பாக ரத்வத்தையின் தனிப்பட்ட சுயகௌரவத்தோடு சார்ந்த பிரச்சினையாக இது இல்லாமல், பௌத்த சிங்களப் பேரினவாதத்தின் தமிழினஅழிப்புக் கோட்பாட்டின் தலைவிதியைத் தீர்மானிக்கும் யுத்தமாக, ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கை பரிமாணம் பெற்றுள்ளதால், இதனை வெற்றிகொள்ள சிங்களம் என்ன விலையும் கொடுக்கத் தயாராகும் என்பதுடன், மனித நாகரீகத்திற்குச் சவால்விடும், எந்த நாசகார அழிவையும் அது செய்யத் துணியும் என்பதும் எதிர்பார்க்கப்படவேண்டியதே. அடுத்து வரும் நாட்கள் அல்லது வாரங்களில், சிங்களம் இந்த அவலத்தை தமிழ்மக்கள்மீது திணிக்க முற்படலாம். ஆனால் அதற்கெதிராக விடுதலைப் புலிகள் என்ன பாதுகாப்பு வியூகங்களை அமைத்து வைத்திருக்கின்றனர்? களநிலையை எப்படி எதிர்கொள்வர்? என்பவை, எமது ஊகங்களுக்கு அப்பாற்பட்டவை. ஆனால் ஒன்று மாத்திரம் உறுதியானது: அதாவது, ஜெயசிக்குறு என்பது சிங்கள அர்த்தத்தில், சிங்களத்திற்கு வெற்றி நிட்சயமாய் இருக்கப்போவதில்லை என்பதே. ★

**சர்வதேச மத்தியத்துவம் என்பது எவ்வளவு வில்லங்கமானது என்பதைச் சிங்களம் நன்கு புரிந்துவைத்திருக்கின்றது. ஒரு இனத்தை அடக்கியாண்டு, அழிவுகள் செய்து, அதன் தேசிய தனித்துவத்தை மறுத்து, அதன் தேசிய அடையாளங்களை அழிக்க போராடிக்கொண்டிருக்கும் பௌத்த சிங்களப் பேரினவாத அரசு, தேசிய இனத்தின் தனித்துவத்தையும், தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையையும் உலகம் ஏற்றுக்கொண்டுள்ள நிலையில், சர்வதேச மத்தியத்துவத்தை எப்படி வரவேற்கும்?**

## மரித்த பின்னும்.....

அல்ல, இணைப்புப் பாலங்கள் என்று இடைக்கிடை சொல்லுவான்.

ஊர்மனைகளையும் வீடுகளையும் விட மலைகளையும் காடுகளையுமே யூட் அதிகம் நேசித்தான். தோதான மலைகளில் மறைவான குடில்களைப் போட்டு அந்தப் பிராந்தியத்தைத் தனது ஆதிக்கத்தின்கீழ் கொண்டு வருவதில் அலாதிப் பிரியமுள்ளவன். அவ்வாறான மலைக் கொட்டில் ஒன்று கட்டப்பட்டுக் கொண்டிருந்த போது, அது அமைந்திருந்த இடம் யானைகளின் போக்குவரத்துப் பாதை என்பது அறவே தெரியாது. பணியில் எப்போதுமே ஆர்வமுள்ள யூட், வெளிவேலை மட்டுமே முடிந்திருந்த கொட்டிலினுள் தன் வேலையைத் தொடங்கியிருந்தான். தலைவரினால் அப்போதுதான் முதன் முதலாக எமது மாவட்டத்திற்குத் தரப்பட்ட ஒரு புதிய கருவியும் அவனிடம் இருந்தது. மதிய உணவின் பின்னான சிறிது ஓய்வில் பாயில் சற்று சரிந்து ஆசுவாசப்படுத்திக் கொண்டிருந்தபோது ஒரு போராளி ஓடி வந்தான். இயல்பிலேயே நகைச் சுவைப் பண்புள்ளவன் அவன். "அண்ணே .. அண்ணே " என்று அவசரமாக அழைப்பதும், என்னவென்று கேட்டால், "இரண்டு மான்கள் ஓடி வந்து சரண்டர் பண்ணினால் எப்படி இருக்கும்" என்று அப்பாவி போல் கேட்டுவிட்டு நையாண்டியாகச் சிரிப்பதும் வழக்கம். எனவே அவன் பதறி ஓடி வந்ததோ "யானை துரத்தி வருகிறது" என்று அலறியதோ நம்பப்படவில்லை. காதில் அணிந்திருந்த கெட்போனையும் மீறி, 'தொம்.. தொம்' என்ற ஓசை கேட்டபோதுதான், விசயம் முதலை வந்த கதையாக மாறிவிட்டது தெரிந்தது. பாய்ந்து வெளியே வந்து பார்த்தபோது அந்தப் பிரமாண்டமான மிருகம் கொட்டிலுக்கு மிக அருகாமையில் முன்னங்கால் இரண்டையும் தூக்கி பெருமெடுப்பில் பிளிறியது. குடலை வெளியே வரவைக்கும் கோரப் பிளிறலில் உறைந்து நின்றபோது, யூட் மீண்டும் கொட்டிலுக்குள் போக எத்தனித்தான். ஓடுவதற்காக கையைப் பிடித்து இழுத்தபோது. "முடியாது அந்தக் கருவி உள்ளே இருக்கிறது. அதை விட்டு என்னால் வரமுடியாது" என்றான். அவனை ஒருவாறாக பின்னே இழுத்துவிட்ட பின்புதான் யானையைச் சுட முடிந்தது. தன் பொறுப்பிலுள்ள பொருளை இழந்து தலைகுனிவதிலும், ஆபத்தை எதிர் கொள்வது நல்லது என எண்ணிய அவனின் ரோச உணர்வு, அவனின் உடலில் ஓடிய தமிழ் இரத்தத்தின் மறைக்க முடியாத வெளிப்பாடு என்றே கருதவேண்டும். 94 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில், அச்சுவேலியில் யுத்த சூனியப் பிரதேசத்தில் அலைந்து திரிந்து புதிய இடங்களைப் பார்வையிடுவது அவனது பொழுதுபோக்கு. வரைபடங்களில் இருக்கும் புதிய இடங்களை நேரிலே போய்ப் பார்ப்பதில் ஆர்வம் அதிகம். தருணம் கிடைக்கும் போதெல்லாம் புதுப்புது இடங்களுக்குப் போய் அவ்விடத்தின் பாரம்பரியம் பற்றி அப்பகுதி முதியவர்களிடம் பேசித் தெரிந்துகொள்ளுவது அவனுக்கு வாடிக்கை. தலைவரின் படங்களையும் அவரது வசனங்களையும் ஆர்வமாகச் சேர்ப்பான். சிங்களத்தைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் கூட சிங்கள மொழி சார்ந்த அவனது கேள்விகளில் திணறியிருக்கிறார்கள். "உண்மையில் நீங்கள் சிங்களவர்தான். தமிழரல்ல" என்று அவர்கள் கூறும் சம்பவங்களும் உண்டு. மேலைத்தேய, சுதேச மரக்கறிகளைப் பயிரிடுவதில் அவன் வல்லுனன். தேனீர் தயாரிக்கும் அடுப்பினுள்ளே இரண்டு குச்சிகளைச் செருகிவிட்டு, "இப்போது அந்தத் தேனீருக்கான எனது பங்களிப்பைச் செலுத்தி எனது பங்குரிமையைப் பெறுகிறேன். உழைக்காமல் தின்பவன் திருடன்" என்பான். அந்தளவிற்கு உழைப்பில் நம்பிக்கை கொண்டிருந்தான்.

ஆனாலும், துணிச்சலாக எதையாவது செய்ய வேண்டும் என்ற உந்தல் இருந்ததினால், களத்தையே அதிகம் விரும்பினான். கொழும்பு றோட் கடப்பதானால் முதலாவது அணியிலேயே போக விரும்புவான். அவ்வாறான நேரடி மோதலில் மார்பிலே காயமடைந்தும்கூட ஆர்வம் குறையவில்லை. ஊருக்குள் போய் பதுங்கித் தாக்குதல் செய்வதில் அதிக ஆர்வம் காட்டுவான். எதிரியின் அனைத்துப் பலவீனங்களையும் அலசி, எப்படி எப்படி அவனை ஏமாற்றித் தொல்லைப்படுத்தலாம் ' என்று ஆராய்ந்து கொண்டே இருப்பான். தன் வாழ்வின் கடைசித் தருணம் வரை துப்பாக்கி ஏந்திச் சுடக்கூடிய ஒரு போர்வீரனாக இருக்கவே விரும்பினான். கடைசியாக புளியங்குளத்தில் வைத்து ஜயசிக்குறு படையெடுப்பிற்கு எதிரான சமரில் வீரச்சாவடையும் போதும், தான் விரும்பியவாறே துப்பாக்கியை வைத்திருந்தான். கோல்சரையும் அணிந்திருந்தான்.

யூட்டைப் பற்றிய இந்த விடயங்கள் சிலருக்கு மிகையாகத் தோன்றினாலும், அவனை அறிந்தவர்கள் இதுவும் முழுமையற்றது என்றே கூறுவர். அவன் அழிந்தாலும், அலாதியான தத்துவம் ஒன்றுண்டு. போரின் முடிவான சுதந்திரத்தை தமிழீழத்தில் அனைவருமே அனுபவிப்போம். அவ்வாறாயின் அதற்கான எமது தேசியப் பங்களிப்பு செய்யப்பட்டுவிட்டதா? நாம் உழைக்காமல் உண்ணப்போகும் திருடர்கள் அல்ல என்பதை உறுதிப்படுத்தி விட்டோமா?

**- இராசமைந்தன் -**

# தாயகம் நோக்கிய பயணம்

## முதலாம் பாகம்

### அத்தியாயம் இருபத்தியிரண்டு

(தொடர்ச்சி)

திரும்பவும் சேரிக்கு முன்பனிக்காலம் வந்தது. மண்டெக்கின் 'மீட்பாளர் குழு'வுக்கு தூரிகை தயாரிக்கும் மாவட்டத்தின் ஒரு பகுதியின் பாதுகாப்பைத் திட்டமிடும் வேலை ஒதுக்கப்பட்டது. டொவ் தனது நேரத்தையோ, ஒன்றில் கழிவு நீர் கால்வாய்களிலோ அல்லது காப்பரண்களில் போலிப் பிரயாண பத்திரங்களைத் தயாரிப்பதிலோ ஈடுபட்டிருப்பதில் செலவழித்தான். உண்மையாகவே சுவரின் கீழான அவன் பயணங்கள், வாரத்துக்கு ஓரிரு முறைகள் வண்டாவின் வீட்டில் கௌரவமான உணவுகளை உட்கொள்ள வாய்ப்பளித்தன. தன்னுடைய வெளியே போகும் பயணங்களில் போராட்ட உடல் நிலை சரியற்றவர்களையும் வயது முதிர்ந்தவர்களையும் வெளியே அழைத்துச் செல்வான். திரும்பி வரும்போது ஆயுதங்களையும், வானொலி உதிரிப் பாகங்களையும் கொண்டு வருவான்.

1943களின் முன்பனிக் காலத்தில் இறப்பு விகிதம் பயங்கரமாக அதிகரித்தது. ஆரம்பத்தில் சேரிக்குள் விரட்டப்பட்ட ஐந்து இலட்சம் பேரில், ஐம்பதினாயிரம் பேரே இவ்வருட முடிவில் உயிரோடிருந்தனர்.

தை மாத நடுப்பகுதியில் ஓர் நாள் வண்டாவின் வீட்டுக்குச் செல்லவிருந்த ஒரு நாளில், அவன் கழிவு நீரோடையில் இறங்க முன்பு மண்டெக்கும், றெபேக்காவுமாக அவனை ஒரு பக்கத்தில் கூப்பிட்டிருந்தனர். "எமக்கு ஒன்றாக இருந்து கதைத்துப் பேச இந்த நாட்களில் நேரம் கிடைக்கவில்லை." மண்டெக் ஆரம்பித்தான். "டொவ், நீ கடைசிமுறை வார்சோவிலிருந்தபோது நாங்கள் எல்லோரும் இந்த விசயத்தைப் பற்றிக் கலந்தாலோசித்து ஒரு முடிவெடுத்தோம். நீ சுவருக்கப்பாலேயே இருப்பதையே நாங்கள் விரும்புகிறோம்." என்றாள் றெபேக்கா.

"ஏதாவது விசேடமான கடமையை எனக்காக ஒதுக்கியிருக்கிறீர்களா?" டொவ் கேட்டான்.

"இல்லை, உனக்கு விசயம் புரியவில்லை"

"நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?"

"எங்களில் சில அங்கத்தவர்களை வெளியே அனுப்பிவிட வேண்டும் எனக் கருதுகிறோம்" என்றாள் றெபேக்கா.

டொவ்வுக்கு இது புரியவில்லை. 'மீட்பாளர் குழு'வுக்கு அவனது சேவை தேவை. ஸட்.ஓ.பி யிலிருந்த எவருக்குமே கழிவுநீர் வாய்க்கால் பாதைகள் அவனுக்குத் தெரிந்ததுபோல் நன்றாகத் தெரியாது. ஸட்.ஓ.பி. ஒரு தற்காப்புப் போரை நிகழ்த்தத் திட்டமிட்டிருக்குமானால், இப்போதுதான் அவனது சேவை எப்போதையும் விடப் பெறுமதி வாய்ந்ததாக இருக்கும். இதைவிட அவன் தயாரித்த போலி ஆவணங்களும், பிரயாண அனுமதிப் பத்திரங்களும் நூறுக்கும் மேற்பட்டவர்களைப் பத்திரமாகப் போலந்துக்கு வெளியே கொண்டு சென்றிருந்தன. டொவ், தன் சகோதரனையும், சகோதரியையும் விளக்கம் கேட்பதுபோல் பார்த்தான்.

றெபேக்கா ஒரு கடித உறையை அவன் கையில் வைத்து அழுத்தி, "இதில் பணமும் தேவையான பத்திரங்களும் இருக்கின்றன. நீ பத்திரமாக இருப்பதற்கு, வன்டா ஒரு கிறீஸ்தவக் குடும்பத்தைக் தேடும்வரை நீ அவள் வீட்டில் போய் இரு" என்றாள். "நீங்கள் தீர்மானமெதுவும் எடுக்கவில்லை. இது உன்னுடையதும், மண்டெக்குடையதும் விருப்பம்தான். நான் போகமாட்டேன்."

"நீ போகத்தான் வேண்டும். இது ஒரு கட்டளை" மண்டெக் சொன்னான்.

"இது கட்டளையல்ல" திருப்பிப் பதிலளித்தான் டொவ்.

"லண்டவ் குடும்பத் தலைவன் என்ற முறையில் என்னிடம் இருந்து வரும் கட்டளை இது"

மூவரும் காப்பரணின் ஒரு மூலையில் இருந்த மண்ணாலான சிறு அறையில் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தனர். "இது ஒரு கட்டளை" மண்டெக் முணுமுணுத்தான். றெபேக்கா கட்டியணைத்து அவ் பொன்னிறக் கூந்தலை வருடினாள். "நீ வளர்ந்து விட்டாய் டொவ். உன்னைச் செல்லம் கொடுத்துக் கெடுக்க எங்களுக்கு அதிக அவகாசம் கிடைக்கவில்லையல்லவா? நீ நூறுக்கு மேற்பட்ட முறைகளில் கழிவுநீர் கால்வாய்களுக்குள்ளால் போவதையும், திருடப்பட்ட உணவை எங்களுக்குக் கொண்டு திரும்பி வருவதையும் அவதானித்து வந்திருக்கிறேன். உனக்கு ஒரு வளமையான இளமைக் காலத்தை எங்களால் கொடுக்க முடியாமல் போய்விட்டது."

"அது உங்கள் பிழையல்ல"

மண்டெக் அவனை நோக்கி, "டொவ் இந்த ஒரு விசயத்தை மட்டும் எனக்கும், றெபேக்காவுக்கும் மறுத்து விடாதே. உனக்கு எதையுமே எங்களால் இதுவரை தர முடியவில்லை. தயதுசெய்து உனது எதிர்கால சீவியத்தைத் தர எங்களை அனுமதித்து விடு" என்றான்.

"மண்டெக், றெபேக்கா உங்களுடன் இருக்கும்வரை நான் எதைப்பற்றியுமே கவலைப்படப் போவதில்லை."

"டொவ் தயவுசெய்து நாங்கள் சொல்வதைப் புரிந்துகொள். லன்ட்வ் குடும்பத்தில் ஒருவராவது தப்பிப் பிழைத்திருக்க வேண்டும். எங்கள் எல்லோருக்காகவும் நீ வாழ வேண்டும் என விரும்புகிறோம்."

டொவ், தன் தெய்வம் போல் கருதி வந்த சகோதரனை ஏறிட்டு நோக்கினான். மண்டெக்கின் கண்கள் கெஞ்சுவது போல் அவனை நோக்கின.

"எனக்குப் புரிகிறது." முணுமுணுத்த டொவ் தொடர்ந்து, "நான் வாழத்தான் போகிறேன்." என்றான்.

அவன் அவர்கள் கொடுத்த சிறுசொதியைப் பார்த்துவிட்டு கழிவுநீர் வாய்க்காலில் அது நனையாமல் இருக்கும் வண்ணம் ஒரு 'கன்வஸ்' உறையில் இட்டான். றெபேக்கா அவனை மார்போடு இறுக அணைத்துக் கொண்டாள்.

"நாங்கள் மீண்டும் எரெட்ஸ் இஸ்ரேலில் சந்திப்போம்" அவள் சொன்னாள்.

"ஆம்...... இஸ்ரேல் நாட்டில்."

"நீ ஒரு சிறந்த போராளி. டொவ்...... உன்னைப் பற்றி நான் பெருமைப் படுகிறேன். சலோம் இல் கிற்றாவெட்" என்றான். (Shalom L'Hitraot – யூதர்களின் பிரியாவிடை)



"சலோம் இல் கிற்றாவொட்" டொவ் திருப்பிச் சொன்னான். டொவ் லண்டவ், தனது பதின்மூன்றாவது பிறந்தநாளை நெஞ்சை அடக்கும் துயருடன் வன்டாவின் வீட்டுக்கு அழுக்கு நீர் ஊடாக வார்சோவின் கீழான கழிவுநீர் சாக்கடையில் செல்லுவதில் செலவழித்தான். இன்னொரு இடத்தில், இன்னொரு நேரத்தில் இருந்திருந்தால் அது அவனுடைய பார் மிற்ஸ்வா (Bar Mitzvah) ஆக இருந்திருக்கும்.

*தை 18, 1943*

டொவ், வன்டாவின் வீட்டின் தற்காலிக பாதுகாப்பிற்கு சென்ற மூன்றாம் நாள், யேர்மனியர் போலந்து நீலப் பொலிசார், லித்தூனியர்கள் சேரியின் மீது படையெடுத்தனர். ஐம்பதினாயிரம் பேரே மிகுந்திருந்த சேரியிலே, இறுதித் தீர்வின் கடைசிக் கட்டத்தை நிறைவேற்ற, சுற்றிவளைப்பைத் தொடங்கினர். யேர்மனியர்களும், அவர்களது அடிவருடிகளும், ஸட்.ஓ.பி யின் பாதுகாப்பு நிலைகளிலிருந்து வந்த ரவை மழையினுள் மாட்டிக் கொண்டனர். வந்தவர்கள் பாரிய இழப்புக்களை அடைந்ததோடு அவர்களைக் கைவிட்டு ஓடிவிட்டனர்.

வார்சோ ஊடாக இந்தச் செய்தி காட்டுத்தீ போல் பரவியது. யூதர்கள் ஓர் எழுச்சியை நடத்துகிறார்கள்!

அன்று இரவு எல்லோரும் ஸட்.ஓ.பி யின் இரகசிய வானொலியைக் கவனமாகச் செவி மடுத்தனர். அவ் வானொலியோ, "சக போலந்துக் காரர்களே! இன்று நாம் கொடுங்கோன்மைக்கெதிரான ஒ்ரு அடியைக் கொடுத்தோம்! யூத சேரிக்கு வெளியே இருக்கும் எங்கள் சகோதரரிடம், ஆர்த்தெழுந்து எதிரிக்கு எதிராகத் தாக்குங்கள் எனக் கேட்டுக் கொள்கிறோம்! எங்களோடு போராட வாருங்கள்" என்ற வேண்டுகோளைத் திரும்பத் திரும்ப ஒலி பரப்பியது.

இந்த வேண்டுகோள் செவிடன் காதில் ஊதிய சங்காயிற்று. ஆயினும், மிலா வீதியில் ஸட்.ஓ.பி. தலைமைச் செயலகத்தில் ஸ்டார் ஒவ் டேவிட் ஏற்றி வைக்கப்பட்டது. (ஸ்டார் ஒவ் டேவிட் – யூத தேசியக் கொடி) அதன் அருகில் போலந்தின் தேசியக் கொடி படபடத்துப் பறந்து கொண்டிருந்தது. சேரியின் யூதர்கள், தங்களுக்கு மறுக்கப்பட்ட பதாகையின் கீழ் சாகும்வரை போராடத் துணிந்து விட்டார்கள்.

**லியோன் யூறிஸ்**

**தொடரும்...**


**வாசகர் கவனத்திற்கு !**

இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ள தலைப்பிற்குப் பொருந்தக்கூடிய வகையில் எட்டுவரிகளுக்கு மேற்படாமல் ஆழ்நத கருத்துள்ள கவிதைகளை எதிர்பார்க்கிறோம். உங்கள் ஆக்கங்களை **18 - 09 - 1998** இற்கு முன்பாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறு கீழ்தரப்பட்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**எம்மண் மீட்க......**

கவிதை அனுப்ப வேண்டிய முகவரி:
**'Kalathil',**
Eelam House, 202 Long Lane, London SE1 4QB.

# இரு வாரத்துக்கொருமுறை கடிதம் மூலம் சந்திப்போம்!

***அன்புச் சகோதரமே!***

மனித உரிமை சாசனத்தின் பொன்விழாவினை உலகு கொண்டாடிக் கொண்டிருக்கும் நேரத்தில், பச்சை மனித இரத்தத்தில் ஒரு நாடு - இந்த நாகரீக உலகில் - தனது பொருளாதாரத்தைக் கொண்டு இயங்குகிறது என்ற உண்மையை 'எக்கோனோமிக்ஸ்' சர்வதேச சஞ்சிகை வெளிப்படுத்தியுள்ளது. சிறிலங்காவே அத்தகைய பாராட்டினைப் பெற்றுள்ள நாடாகும்.

'எக்கோனோமிக்ஸ்' சஞ்சிகையின் புள்ளிவிபர ஆதாரங்களுடனான தகவல்களின்படி கறுப்பு யூலை இனஅழிப்பில் சிறிலங்கா இறங்கிய 1983 முதல் இன்று வரையான காலகட்டத்தில் சிறிலங்காவின் ஆயுதப்படைகளின் எண்ணிக்கை பன்னிரு மடங்காக சிறிலங்காவால் பெருக்கப்பட்டுள்ளது. இந்தப்படைப் பெருக்கமே ஏனைய சகல பிரச்சினைகளுக்கும் வித்தாக உள்ளது. வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்த சிங்களவர்களுக்கு யுத்தம்- வேலைவாய்ப்புக்கான ஊடகமாக்கப்பட்டுள்ளது. 150,000 கிராமிய சிங்களவர்கள் கொழும்பை, கண்டியை பாதுகாக்கவென தனியார் பாதுகாப்பு சேவைகளில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். 120,000க்கும் மேலான சிங்களவர்களுக்கு யுத்தமே தீனி போடுகின்றது என்பது 'எக்கோனோமிக்ஸ்' சஞ்சிகையின் புள்ளிவிபரச் செய்தி.

பௌத்த சிங்கள இனவெறியுடன் வளர்க்கப்பட்ட சமுதாயத்திற்கு, தமிழர்களை இனஅழிப்பு செய்வது புனிதமானது என்ற மானசீக உணர்வு மட்டுமல்லாது பொருளாதாரத்திற்கான தேவையாகவும் மாற்றப்பட்டுள்ள நிலையில் எந்த சிங்கள அரசாங்கமும் தமிழர்களை இனஅழிப்பு செய்யாது யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர விரும்ப மாட்டாது என்பது வெள்ளிடை மலை. இந்நிலையில், யுத்தம்சார் பொருளாதாரமாக சிறிலங்காவின் பொருளாதாரத் திட்டமிடல் அமைவதில் வியப்பெதுவுமில்லை. இலங்கைத்தீவில் கட்டாய வரி, பாதுகாப்புக்காக அறவிடப்படுகிறது. இதன் மூலம் தமிழ் மக்கள் தம்மை அழிப்பதற்கு தாமே பண முதலீடு செய்யும் கொடுமைக்கு சிறிலங்காவால் நிர்ப்பந்திக்கப்பட்டு வருகின்றனர். 'எக்கோனோமிக்ஸ்' இன் புள்ளிவிபரப்படி இந்த வருடம் மொத்தத் தேசிய வருமானத்தில் 6வீதத்திற்கும் மேலாக யுத்தத்தில் விரயமாக்கப்படுகிறது என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மறைமுக விடயங்கள், மேலதிக செலவுகள் என்ற பெயரில், வரவு-செலவு திட்டங்களைச் சேர்ப்பது, எவ்வகைகளில் துண்டு விழும் தொகைகளை நிதியீட்டம் செய்கிறது என்ற உண்மைகளை சிறிலங்கா.உலகுக்கு மூடிமறைத்து விடுகிறது. இதனால் திட்ட உதவிகளாக-கடன்களாக சிறிலங்காவுக்கு வழங்கப்படும் நிதியீட்டங்கள் - யுத்தத்திற்கு பயன்படுத்தப்படுவதை மூடிமறைத்து விடக்கூடியதாக உள்ளது. அத்துடன், சர்வதேச இராணுவ ஆதிக்க நலன்கள்- சந்தை நலன்கள் என்பவற்றுக்கு தீனி போடுவதினால் பெறப்படும் நிதியீட்டங்களும் திரைமறைவாக்கப்பட நிறைய வாய்ப்புக்கள் உள்ளன. எனவே சர்வதேச உதவிகளின் மூலமே சிறிலங்கா, தமிழர் இரத்தத்தில் தனது பொருளாதாரத்தை வளர்க்கும் யுத்தப் பொருளாதாரத்தை கொண்டியக்குகிறது. இதனால், 'எக்கோனோமிக்ஸ்' சஞ்சிகையின் தகவல்படி 520,000 தமிழர்கள்- இந்தியாவில் 60,000 பேரும் மிகுதியானோர் வட அமெரிக்க, ஐரோப்பிய, அவுஸ்திரேலிய நாடுகளிலும் அகதிகளாக வாழ்கின்றனர். தற்பொழுதும் ஆண்டொன்றுக்கு 15,000 முதல் 20,000 அகதிகள் வெளியேறிய வண்ணம் உள்ளனர். இது விமான முகவர்களுக்கு பலத்த வருவாயை ஈட்டிக் கொடுக்கின்றது. அகதிகள் வெளியேற்றம் நிற்குமானால் தற்போது கொழும்பு சென்று வரும் விமானங்களில் அரைவாசிக்கு மேல் தமது சேவைகளை நிறுத்திக் கொள்ளும். அது மட்டுமல்ல இந்த அகதிகளால் ஆண்டொன்றுக்கு 500 மில்லியன் அமெரிக்க டொலர் சிறிலங்காவுக்கு அனுப்பப்பட்டு வருகின்றது. பெரும்பாலும் கறுப்புப் பணமாகவே உள் செல்கின்றது. முன்னாள் மத்திய வங்கி ஆளுனர் ஒருவரின் கருத்துப்படி 4 பில்லியன் கறுப்புப் பணம் ஆண்டொன்றுக்கு ஈட்டப்படுவதாகவும் இது முறைமையான பணத்தில் நாலில் ஒன்றாகும் எனத் தெரியவருகிறது. இவ்வாறு யுத்தம் மூலம் சிறிலங்கா தனது பொருளாதாரத்திற்கு வெள்ளி முலாமிடுகிறது எனக்கூறும் 'எக்கோனோமிக்ஸ்' யுத்தத்தின் கரு மேகமாக 55,000 க்கு மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளதாகவும் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசு நோக்கிய அரசை அழித்து யுத்தத்தில் இறுதிக் கட்டத்தை அடைந்து விட்டதாக மே 1996ல் கூறிய போதிலும் சிறிலங்கா இராணுவம் யாழ்ப்பாணத்திற்கான பாதை ஒன்றை திறக்கும் முயற்சியிலேயே பலத்த இழப்புக்களையும் மிக்க காலதாமதத்தையும் சந்தித்து வருகிறது எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

அதுமட்டுமல்ல- மிதவாதத் தமிழர்களை வெல்லவென சந்திரிகா குமாரதுங்கா அறிவித்த தீர்வுப்பொதி விடுதலைப் புலிகளால் மட்டுமல்ல தீவின் முக்கால் பகுதியினர் எனக் கூறப்படும் பௌத்த சிங்களவர்களால் கடுமையாக எதிர்க்கப்பட்டமை நிலைமையை மேலும் மோசமாக்கியுள்ளது. நாட்டில் பலம் வாய்ந்தவர்களாக உள்ள பௌத்த பிக்குகள், வீடு வீடாகப் போய் இதனை எதிர்க்கும்படி தாம் வற்புறுத்தப் போவதாக அச்சுறுத்தியுள்ளனர். ஆளுங்கட்சியினர் கூட இது விடயமாக பிளவுபட்டுப் போயுள்ளனர். இவற்றுக்கு எல்லாம் ஈடாக விடுதலைப் புலிகளை இந்தியாவில் சட்டவிரோதம் ஆக்கிவிட்டோம்- அமெரிக்காவில் பயங்கரவாத இயக்கப் பட்டியலில் சேர்த்து விட்டோம் என்பதே சிறிய ஆறுதலாக கூறப்படுகிறது எனவும் 'எக்கோனோமிக்ஸ்' சஞ்சிகை கேலியாக குறிப்பிட்டுள்ளது.

மேலும், இந்த யுத்தம் ஆரம்பமானது முதல் 10,000 க்கு மேற்பட்டவர்கள் தற்கொலை செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ள 'எக்கோனோமிக்ஸ்' இது யுத்தத்தினால் கொல்லப்பட்ட உத்தியோகபூர்வ தொகையை விட அதிகம் எனச் சுட்டிக்காட்டிள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன், கொல்லாமையை போதிக்கும் பௌத்த மதத்தைப் பின்பற்றுவதாக கூறிக் கொள்ளும் நாடொன்றில் இவ்வளவு பெருந்தொகை தற்கொலைகள் இடம்பெற்று இன்று உலகில் தற்கொலையாளர்கள் கூடிய முதலாவது நாடென்ற பெருமையையும் சிறிலங்கா பெற்றுள்ளது எனக் கிண்டலாக குறிப்பிட்டுள்ளது. இவ்வாறாக, தமிழர்களை இனஅழிப்பு செய்யவென சிறிலங்கா தொடங்கிய இந்த யுத்தம் தமிழர்களுக்கு மட்டுமல்ல யுத்தத்தின் விளைவுகளால் சிங்களவர்களுக்கும் பாதிப்புக்களை வெகுவாக ஏற்படுத்தி வருகிறது. ஆனாலும், சிங்களவர்களின் எண்ணிக்கை பெரிதாக இருப்பதாலும் பாதிக்கப்படும் சிங்களவர்கள் மிக வறுமைப்பட்ட மக்களாக இருப்பதாலும் சிறிலங்கா அரசாங்கத்தால் அவை மூடி மறைக்கப்பட்டு மேலும் மேலும் இனவெறியும் யுத்த வெறியும் வளர்க்கப்பட்டு வருகிறது. தாம் விடும் பிழைகளால் இந்த நிலை ஏற்படுகிறது என்ற உண்மையை மறைத்து விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தாலேயே இந்த நிலை எனப் பிரச்சாரப்படுத்தப்பட்டு வருகிறது. அத்துடன் முடமாகி விட்ட சிறிலங்காவின் பொருளாதாரத்தை யுத்தப் பொருளாதாரமாகவே கொண்டிழுத்து தமது பதவிகளை காப்பாற்ற சிறிலங்கா படாதபாடுபடுகிறது. இந்த சிறிலங்கா அரசாங்கமோ அல்லது எந்த சிறிலங்கா அரசாங்கமோ யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்ப்பது மடமையிலும் மடமை என்பதை 'எக்கோனோமிக்ஸ்' தெளிவாக்குகிறது. ஆக- ஒரேவழி எமது வரலாற்றுத் தாயகத்தைப் போராடியே மீளப் பெறுவது என்ற தமிழர்களின் நிலைப்பாடு 'எக்கோனோமிக்ஸ்' கட்டுரையினைப் படிப்பவர்களின் மனக்கருத்தாகவும் அமைகிறது.

இந்நிலையில் யுத்தப் பொருளாதாரம் தமிழர்களின் உயிர்களை அழிக்கின்ற அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டமாக சிறிலங்கா அரசால் செயற்படுத்தப்பட்டு வருவது உறுதியாகிவிட்டதால் இது ஒரு இன அழிப்புக்கான செயற்பாடு- சர்வதேச சட்டங்களுக்கு எதிரான ஒன்று என்பதை ஐக்கிய நாடுகள் சபையும் சர்வதேச அரசுக்களும் ஏற்று தமிழீழ மக்களது சுயநிர்ணய உரிமைப் பிரகடனத்தையும் அதை செயற்படுத்துவதை தடுக்கும் சிறிலங்காவுக்கு எதிரான தேசிய விடுதலைப் போராட்டத்தையும் அங்கீகரிக்கும்படி புலம்பெயர் தமிழர்கள் என்ற வகையில் நானும் நீயும் வற்புறுத்தக் கடமைப்பட்டுள்ளோம். இந்த யுத்தப் பொருளாதாரத்தைப் பலப்படுத்த சிறிலங்காவுக்கு பல சர்வதேச நாடுகள் துணைபோகலாம்- துணை போகின்றன. ஆனால், எமது மக்களுக்கு பொருளாதார பலம் அளிக்க நாம் மட்டுமே உள்ளோம். ஆகவே, இதனை உணர்ந்து இயலுமான வகைகளில் எல்லாம் பொருளாதார ரீதியாகவும் எமது மக்களுக்கு உதவ வேண்டிய உரிமை - கடமை நமக்குண்டு என்பதை நானும் நீயும் மறந்து விடக் கூடாது என்பதை 'எக்கோனோமிக்ஸ்' சஞ்சிகையின் கருத்துரையும் கூறாமல் கூறுகிறது.

அன்பின்

ஆசிரியர்.

## ஒரு நாள்............

குண்டுச் சிதறல்கள் மரங்களில் சட சடவென படும் சத்தம் கேட்கின்றது. வெளியில் தலைகாட்ட முடியாத நிலை. சுமார் இருபது நிமிடங்களின் பின்னர் அமைதி ஏற்படுகின்றது. ஓட்டினுள் இருந்து தலை நீட்டும் ஆமை போல் மெல்ல வெளியே வந்து பார்க்கின்றான்.

சற்றுத் தொலைவில் இருந்த இன்னுமொரு நிலவறையின் வாசலில் இன்னும் புகை விலகவில்லை. அருகில் நின்ற தென்னை மரம் ஒன்று வட்டுடன் முறிந்திருந்தது. ஏனைய மரங்கள் தலைவிரி கோலமாக நின்றன. ஏதோ விபரீதம் அதில நடந்திட்டுது என அவனுக்கு விளங்கியிருக்க வேணும். அவ்விடம் நோக்கி அவன் ஓடவும், "டொக்டர் ஓடி வாங்கோ... ஓடி வாங்கோ" எவனோ ஒருவன் சத்தமிடவும் சரியாக இருந்தது. விரைவாய் ஓடி அந்த நிலவறையை அடைகின்றான். உள்ளே ஒரு போராளி கழுத்தின் வலது பக்கத்தில் காயத்துடன் கீழே படுத்திருக்கின்றான். இன்னுமொருவன் அதில் இருந்து இரத்தம் பீறிடாமல் 'பீல்ட் கொம்பிரசினால்' அழுத்திப் பிடித்திருக்கின்றான். இவனைக் கண்டதும் அவன், "டொக்டர் நான் காயப்பட்டிட்டன். எனக்கு வயிற்றுக்குக் கீழே ஒன்றும் தெரியேல்ல. கால் கை ஒன்றையும் ஆட்ட ஏலாமல் இருக்கு. உடம்பெல்லாம் எரியிறமாதிரி இருக்கு." அவன் ஈனக்குரலில் கூறுகின்றான். இவனோ உடனடியாக காயத்தைப் பரிசோதிக்கின்றான். பின் நீண்ட பலகை ஒன்றில் அவனைப் படுக்க வைத்து தலை ஆடாமல் இருக்க இரண்டு பக்கமும் மண்மூடை வைத்து ஆளையும் பலகையையும் சேர்த்துக் கட்டுகின்றான். நெஞ்சறை பரிசோதிக்கப்பட்டு மூச்சு விடுவதில் பிரச்சினை இல்லை என்பதை உறுதிப்படுத்திய பின், "வாகனத்தைக் கொண்டுவந்து கொண்டு போங்கோ" கூறியபடியே காயப்பட்டவனின் முகத்தைப் பார்க்கின்றான். இவனின் மூளையத்தினுள் அணுகுண்டு ஒன்று வெடிக்கின்றது, காயமடைந்தவன் ராஜன். அவனது தலைமயிரைக் கோதிவிட்டவன், அதனோடு எதைக்கூற முனைந்தானோ தெரியவில்லை, மௌனமாக வெளியே வருகின்றான்.

தொதல் கட்டியை கையில் வைத்து பார்த்துக் கொண்டிருந்தவனுக்கு அன்றைய ஞாபகங்கள் மீண்டும், மீண்டும் அலைமோதிக் கொண்டிருந்தன. ஒரு மணித்தியாலத்தின் முன் கேள்விப்பட்டான், ராஜன் வீரச்சாவு எனும் செய்தியை. மெல்ல தொதலைச் சாப்பிடுகின்றான். அதன் ஒரு சுவையையும் நாக்கு மூளைக்கு அறிவிக்கவில்லை போலும். ஆனாலும் அதில் இருந்து அகத்துறிஞ்சப்படும் சத்து தொடர்ந்து இவன் செய்யப்போகும் வேலைக்குச் சக்தி வழங்கும். அப்பொழுது விரைந்து வந்து ஒரு பிக்கப் நின்றது. அதில் இருந்து சில போராளிகள் இறங்கி குதூகலமாகச் சிரித்தபடியே இவர்களின் முகாமிற்கு வருகின்றார்கள். வந்தவர்களில் ஒருவர் இவரிடம் வந்து, "என்ன டொக்டர் சுகமாக இருக்கிறீர்களா? என்ன உங்க தோட்டத்துக்குள்ளேயும் யானை புகுந்திட்டுதுபோல" எனக் கூறுகிறான். அவன் மரத்தின் கீழ் வீழ்ந்து கிடக்கும் மாம்பழங்களைப் பார்த்தவாறு "டொக்டர் மாம்பழ ஜாம் சாப்பிட்டிருக்கிறீர்களா? ஐம்பது மாம்பழம் வரும்போலக் கிடக்கு, நாளைக்கு ஜாம் செய்யலாம்" கூறியபடியே மாம்பழங்களை ஒரு இடத்தில் குவித்தான். இவனும் எதுவும் நடைபெறாததுபோல அவனுடன் சிரித்துக் கதைத்தபடியே மாம்பழங்களைச் சேகரிக்கத் தொடங்குகின்றான். சூரியனும் நாளை உதிப்பதற்காக இன்று மறைகிறது. இன்றைய சோகங்களும், இன்றைய மகிழ்ச்சிகளும் நாளையும் வரும்......★

# நீதி செத்து கிடக்கிறது
# பொதிசுமக்கும் கழுதை பேசாமற் கிடக்கிறது

ஒப்புக்குப் போர்த்திய பட்டுச் சட்டடையின் உள்ளே
ஒட்டியுலர்ந்துளது உடலொன்று.!
பட்டினி கிடக்கும் பாழும் குடலை மறைத்து,
பசித்தவயிறுக்குப் பன்னீர் தெளித்து,
உலகுக்கொரு "ஓரங்க நாடகத்தை" ஒப்பேற்றியுள்ளனர்.
வேருக்கு விஷநீர் பாய்ச்சிவிட்டு
விழுதுக்கு வெளிச்சம் போட்டுள்ளனர்.
"கிருஷாந்தி கொலைவழக்கில் எதிரிகளுக்கு மரணதண்டனை"
செம்மணிக்குத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதாம்.
எரிவாய்க்குப் புனுகுதடவி
கொளுத்திய குற்றம் குறைக்கப்பட்டுள்ளது.
எய்தவனிருக்க அம்புக்குத் தண்டனை.
எரித்தவனிருக்க நெருப்புக்குத் தண்டனை.
கிருஷாந்தி மீதான முலைதிருகலும், நகக்கீறல்களும்
வக்கிரகாமத்தின் வடிகாலல்ல–
ஒரு இனத்தின் மீதான அடக்குமுறை அடையாளங்கள்.
செம்மணியிற் புதைத்தது உயிரற்ற உடலங்களைமட்டுமல்ல–
எம்மினத்தின் "வாழ்தல் உரிமையின்" குறியீடுகளையும்தான்.
நான் ஆள்பவன்... நீ ஆளப்படுபவன்... என்ற
அதிகாரத்தின் அளவிடுதலிது.
"நாவற்குழியில் நானூறு உடல்களுக்குமேல்
புதைக்கப்பட்டிருக்கும்"
சொன்னவன், பார்த்தவன் மட்டுமல்ல–
செய்தவனும்கூட.
சொல்லிய இடமும் கள்ளுக்கடையின் தாழ்வாரத்திலல்ல,
தீர்ப்பெழுதும் "தர்மதேவதை"யின் திருக்கோவிலில்.
நாலுபேருக்கு நீதிவழங்கிய "நல்லவர்களே"
நானூறுபேருக்கு நீதி எங்கே?
வாழ்வை முடித்தேகிய சோதரிக்காக வாதாடியவர்களே!
வாழ்ந்து கொண்டிருக்கும் கிருஷாந்திகளுக்காக
தீர்ப்பெழுதும் "தேவதை" சிம்மாசனமேறுவது எப்போது?
மனிதஉரிமை வாய்களுக்கும் பொரியரிசிபோட்டு
அநியாய நாடகத்தை அரங்கேற்றிவிட்டனர்.
செம்மணி வயல்வெளியே!
எலும்புக்கூடுகளைச் சுமந்து உறங்கிக்கிடப்பாயாக.
செம்மணியின் உரமான "சீவன் முத்தர்கள்"
யார் யாரென்பது யாருக்குத் தெரியும்?
அவசரகாலச் சட்டத்தை ஆதரித்து வாக்களிக்கும்
"பெரியவர்"களுக்குத் தெரியும்.
வன்னி நிவாரணத்திற்குகூட வரி கேட்டு நின்ற
"சின்னத் தலைவர்"களுக்குத் தெரியும்,
மாநகரசபையை ஆளவந்துள்ள "மன்னவனுக்குத்" தெரியும்.
எல்லோரும் சேர்ந்தே எங்களை ஏமாற்றுகின்றனர்.



காணாமற் போனவரைக் கருவிற் சுமந்தோரே!
இனி நல்லூரின் வீதியில் உண்ணாவிரதம் இருக்காதீர்.
கச்சேரிக்கு முன்பாக கண்டன ஊர்வலம் நடத்தாதீர்.
ஐ.சி.ஆர்.சீக்கு மகஜர் அனுப்பாதீர்.
கண்டுபிடித்துத் தருவதாகக் கூறும் "கட்சிக்காரர்"களைப் பிடித்துத்
தண்டிக்க எழுவீர்.
களுத்துறையில் "தர்மம்" கழுத்துவரை சென்றுவிட்டு
பிளைத்துப்போவென்று போட்டுவிட்டுப் போனதாம்.
அனுங்கிக் கொண்டு கிடந்ததாம் "அதர்மம்".
எழுவீர் எம்மக்களே!
காலச்சூதைக் கழுவேற்ற வேண்டும்.

நீதி செத்துக் கிடக்கிறது.
"பொதி சுமக்கும் கழுதை" பேசாமற்கிடக்கிறது.
இளிச்சவாயர் தமிழரென்ற இளக்காரம் எரிந்துபட
வெளிச்சங்களே! வீதியில் இறங்குங்கள்.
முகத்தை முத்தமிடும்காற்றை மூச்சுக்குழலிட்டு,
சின்னச்சின்னக் கூடுகளைக்கட்டி
சீவித்திருந்தன குருவிகள்,
மலைகளற்ற ஊரெனிலும் உயரஎழுந்து
சிட்டுக்குருவிகள் சிறகடித்தன.
பருந்துகளுக்கு சகிக்க முடியவில்லை.
பச்சைவயல்களிற் பாதம்பதித்து
ஓடும் வாய்க்காலில் உடல் நனைத்தன மணிப்புறாக்கள்.
கழுகுகளுக்கு மனம் பொறுக்கவில்லை.
சந்திரனிலிறங்கும் கனவுகளோ,
இந்திர வாழ்வுக்கான எதிர்பார்ப்புகளோ,
எதுவுமின்றி இன்புற்றன பொன்வண்டுகள்.
சுமையற்ற வாழ்வேசுகமெனக் கருதியதால்
அமைதியுற்றிருந்தது குருவிகளின் அன்றாடம்.
அதையும் இல்லாதாக்கினாள்
நிலவின் மறுநாமம் கொண்ட "நெட்டூரி"
"பெண்ணான மாயப்பிசாசு" என்று
சித்தர்கள் வார்த்தைச் சாட்டையால் விளாசியது
எல்லாப் பெண்களையுமென்று எண்ணவேண்டாம்.
கொத்தியெரிக்க வருமொரு "குடிகேடி" என்று

## உலைக்களம்

– வியாசன்

முக்காலமுணர்ந்த முனிவர்கள்
வருங்காலமுணர்த்திய வரிகளவை.
அப்பன் ஐம்பத்தாறிலும்,
ஆத்தாள் எழுபத்தேழிலும்,
மகளானவள் இன்றுமாக
தமிழன் குருதியில் ஜலக்கிரீடை.
கோழிபிடிக்கத் தெரியாத பூனைகள் சில
கோமணம் கட்டினவாம்.
அதுபோல
எங்களுள்ளும் சில கோமாளிகள்
பாதம் கழுவும் பல்லக்குக்காவிகள்.
சாயம் போன சேலைக்கு நீலம் போடுகின்றனர்.
ரோஷநரம்பையே அறுத்தெறிந்து ஆடுபவர்களுக்கு
வீரஉணர்வுபற்றிய விளக்கம் வேண்டியதில்லை.
எம்தேசமே! எழுக.
காட்டிக்கொடுப்பவரின் களுத்தை நெரித்திடுக.
இருளே ஆனந்தமென இருக்குதொரு கூட்டம்.
விடிகாலை இவர்களுக்கு வேம்பு
இட்டபணிக்கு ஏவல்செய்வதே இன்பம்.
"தேசியநீரோட்டத்திற்குத் திரும்பியவர்" என்று
கூசாமற் கூறும் குறைப்பிரசவங்கள்.
நிமிர்ந்த வாழ்வை நிறுத்து விற்றுவிட்டு
அயர்ந்து கிடக்கின்ற அற்பங்கள்.
பேய்கள் வந்து உன் ஊரைக் கலக்கும்போது
தாயாளையும் விற்றுச் சாப்பிடும் தலையாட்டிகளை
ஏது செய்யப்போகிறாய்?
திசையெட்டுமதிரத் தலைவிரித்தாடு தாயே.
வசையழிந்து போகட்டும்.
இனிக் கிருஷாந்திக்காக எவரும் அழவேண்டாம்.
அவளை ஒருமுறை புதைத்தது போதும்.
தோண்டியெடுத்து மீண்டும் மீண்டும் புதைக்க வேண்டாம்.
"என்னைப் புதைத்தவரைப் புதையுங்கள்
உங்களைப் புதைக்காதிருக்கப் புறப்படுங்கள்."
இது கிருஷாந்தியின் அசரீரி.
சோதரி பாரச்சிலுவை சுமந்து போய்விட்டாள்.
இனியேனும் எழுவீர்.
நாவற்குழியுள்ள நானூறு உடலங்கள் மீதும்
உறுதியொன்றெடுத்து உயர்வோம்.
வீரியமுள்ளவரின் கைக்கெட்டும் தூரத்திற்தான்
சூரியனுள்ளது.
"எடுத்தகாரியம் யாவிலும் வெற்றி"
காலையில் வானொலி சொல்வதின் அர்த்தம் புரிகிறதா?
நீ அதிரநடந்தாற் போதும்.
பூகம்பம் வாய்புதைத்துக் கொள்ளும்.
இன்னும் உறக்கமா?
உன்விழி திறக்குமா? ★